श्रीः ॥

[ ஸ்ரீ அப்பய தீக்ஷிதேந்திராளருளிய ]

# ஆத்மார்ப்பண ஸ்துதி.




जयति करुणा काचिदरुणा ॥

शरणागतदीनार्त परित्राण परायणे ।
सर्वस्यार्तिहरे देवि नारायणि नमोऽस्तुते ॥

135
20-3
A. No. 6303
R65
M. P. P. Annamalai
PALLATHUR,

M. A. A. Annamalai, 20-3
PALLATHUR,
RAMNAD DT.



ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிப ஜகத்குரு

ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்.

|| श्रीः ||

श्रीमद्भारद्वाजकुलजलधिकौस्तुभशिवार्कमणिदीपिका परिम-
लादि चतुरधिकशतप्रबंधनिर्वहणपारीण श्रीकण्ठविद्येशावतार
रूपाद्वैतविद्याचार्यवर्य श्रीमदप्पय्यदीक्षितचरणविरचितेयम्

# आत्मार्पणस्तुतिः ॥

# ஆத்மார்ப்பண ஸ்துதி.

( மூலமும் )



கண்டமங்கலம் மு பாலஸுப்ரமணிய ஐயரால்

— இயற்றப்பட்ட —

சிவபோதினீ என்னும் தமிழ்

## பதவுரையும் விருத்தியுரையும்

“ தர்மசரணன் ”

க. மு. பாலஸுப்ரமணிய ஐயர்
18, தோடித் தெருவு, மாம்பலம், சென்னை.

உரிமை பதிப்புற்றது] 1948 [விலை ரூ. 1-8-0

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्चीकामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ।

PALLATHUR RAMNAD Dt.

சதுரதிக சதப்ரபந்த நிர்மாதாவான ஸ்ரீமதப்பய தீக்ஷிதேந்திராளால் ரசனம் செய்யப்பட்டதும், ஸம்ஸ்கிருத பண்டிதர் கண்டமங்கலம் பாலசுப்பரமண்ய அய்யரால் பக்தர்கள் அனைவருக்கும் உபயோகமாகும்படி தமிழ் உரையுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் ஆத்மார்ப்பணஸ்துதி என்னும் ஸ்தோத்திரத்தைப் படித்தும் கேட்டும் பக்தசிரோமணிகள் ஸ்ரீ சந்திரமௌளீச்வரருடைய அருளால் கிருதார்த்தர்கள் ஆகட்டும் என்று அனுக்கிரஹம் செய்கிறோம்.

விஜய யாத்திராஸ்தலம்
வெங்கடாத்ரி அகரம்
ஸர்வஜித்–மாக சுக்ல
ஷஷ்டி.

நாராயணஸ்ம்ருதி : ॥

## FOREWORD. 1

Lovers of Sanskrit and Sanskrit culture—their number is fast dwindling—would do well to consider the desirability of publishing all the works of Sri Appayya Dikshita in a series of volumes, as was done by the Vani Vilas Press, Srirangam, in the case of Sri Sankara's works. Help and encouragement for such an endeavour is bound to come not only from the Mutts at Sringeri and Kumbakonam, but also from serveral prosperous men and institutions in Northern India. It is common knowledge that in our country serveral authors of no particular status or ability palm off their own productions to famous persons like Vyasa, Kalidasa and Sankara. Sri Appayya Dikshita is undoubtedly one of such victims. A committee of experts will have to be constituted to decide what are the authentic works of Sri Appayya Dikshita I commend this proposal to Sanskrit scholars and those interested in the spread of Sanskrit learning and culture all over India.

Sri Appayya Dikshita was a renowned scholar and poet and an Advaita Philosopher of first rank and his fame spread all over India. He is the reputed author of over hundred works of real merit and importance. Though, he was an exponent of his own school of thought and has written several works refuting other philosophies as unsound or untenable he was at heart a devoted worshipper as much of Vishnu as of Siva. He was not a sectarian bigot by conviction but when controversy was forced upon

him by others bent upon polemics in religion or philosophy, they found in him a foeman more than worthy of their steel. He abhorred religious controversy but did not flinch from battle when narrow sectarianism reared its head.

The आत्मार्पणस्तुति is stated to be one of his works. It consists of fifty stanzas in all and the main theme is surrender of one's self to Siva for the attainment of MokshaSamrajya-liberation from the cycle of births and deaths and the enjoyment of eternal bliss. In the Trivandrum Sanskrit Library alone, there are two works of the same name which differ in some respects, the colophons however attributing the authorship to Appayya Dikshita. It is possible that other libraries in India contain similar discrepant texts. The composition of the work does not appear to be of a high order; the standard of excellence associated with or expected of such a famous author is not to be found. There is not much fertility of ideas or sublimity of thought and the style is rather pedestrian or common-place. It is possible that the work may have been one of Dikshita's very early productions, but this theory ignores the question whether at such an early age any author would be thinking of self-surrender to God. It is true that Sri Nilakanta Dikshita refers in his Anandasagara-Stava to an Atmarpanastuti by Sri Appayya Dikshita; but was it the present work we have before us?

All this does not however mean that the *stuti* as we now find it has not got its own merits. It is an

outpouring of the heart at the Lord's feet and is a passionate prayer for the Lord's grace so that accumulated sin may be wiped out and one can tread the virtuous path of true devotion. It deserves to be read and committed to memory by ordinary mortals like us who are steeped in materialism and whose minds have to be turned Godwards. What our forefathers did every early morning by way of singing stotras in praise of the Lord to the hearing of their children and grandchildren who would be awakened from sleep and made to sit round them has now to be done by means of publication of books like the one we have now before us.

Mr. K. M. Balasubramania Iyer deserves to be congratulated on the book he has brought out. Besides a word for word Tamil rendering of the slokas, he has given explanatory notes full of quotations from other works reinforcing the main ideas propounded in the several verses. He has laid us all under a deep debt of obligation to him for thus making the Stuti popular and enabling even those unacquainted with Sanskrit to realise its meaning and significance. His effort has received the approval of the Kanchi Jagadguru and there can be no greater blessing for the success of the venture.

N. CHANDRASEKHARA AIYAR,

(*Retired Judge, Madras High Court.*)

Dated 24th February 1948.

# FOREWORD 2

जनोऽयं सन्तप्तो जननि भवचण्डांशुकिरणै
रलब्ध्वैकं शीतं कणमपि परज्ञानपयसः ।
तमोमार्गे पान्थस्तव झटिति कामाक्षि शिशिरां
पदांभोजच्छायां परमशिवजाये मृगयते ॥
अहंपापी पापक्षपणनिपुणः शंकर भवान्
अहंभीतो भीताभयवितरणे ते व्यसनिता ।
अहं दीनो दीनोद्धरणविधिसज्जस्त्वमितरत्
न जानेऽहं वक्तुं कुरु सकलशोच्ये मयि दयाम् ॥

I owe to my young friend Sri K. M. Balasubramanya Iyer, the unexpected privilege and pleasure of writing this foreword, to his publication of *Atmarpana Stuti* of Sri Vinayaka Subramanya Dikshitar, familiarly known to the Religious, Philosophical and Poetic world as Sri Apyaya Dikshitar. This *Stuti*, as the tradition goes, is the spontaneous, extempore outpouring of the heart of the Dikshitar, while in a state of *Unmadavastha*, induced in himself by deliberately drinking *Kanakapala Rasa* (ஊமத்தஞ்சார்) for testing the strength and constancy of his unbounded and unwavering faith in *Visvatmaka Tarunendu Sekhara*, and hence is also called *Unmatta Panchasat* or *Unmatha Pralapa*.

A person on the high road to a similar *avastha* by reason of his being an octogenerian or by possessing a mind alternating between hope, frustration and despair regarding the social, religious, philosophical, economic and political problems which are increasingly harassing and tormenting the present generation, is, perhaps, the

best fitted for writing a foreward for *Unmatta Panchasat*. This circumstance furnishes, in a way, the key to Sri Balasubramania Iyer's choice of me.

Sri Appayya comes of an ancient family of philosophical and devotional poets and Yagnikhas in the village of Adayappalam, near Virinchipuram, Kanchi.

He is,

(1) the grandson of *Vakshasthalacharya* alias *Acharya Dikshita*, whose extempore stotra of Sri *Varadaraja* and *Lakshmi* alongside *Krishnaraja* and his *Devi* viz.,

काञ्चित्काञ्चनगौराङ्गीं वीक्ष्य साक्षादिव श्रियम् ।
वरदस्संशयमापन्नो वक्षस्थलमवेक्षते ॥

created an apprehension in the mind of *Varadaraja* that *Lakshmi* has jumped out from His *Vakshsthala* (cited in the *Chitra mimamsa* of Sri Appaya as an illustration of *Sandehalankara Dhvani*).

(2) the son of *Sri Rangaraja Dikshita Kavi* author of *Advaita Vidya Mukara Vivarana Prakasa*.

(3) the brother of *Sri Achchan Dikshita Kavi* the grand father of *Sri Nilakanta Maha Kavi*.

(4) the father of *Sri Nilakanta*, *Umamahesvara*, and *Chandravatamsa*.

(5) the grand-uncle of *Sri Nilakanta Dikshita* alias *Chinna Dikshita*, the author of *Siva Lilarnava*, *Anandasagarastava*, *Kali Vidambana*, *Sabharanjana Sataka*, *Santi-*

*vilasa*, *Gangavatarana*, *Nilakanta Vijaya Champu* and etc.

(6) the son-in-law of *Ratnakheta Dikshita Kavi* who transformed *Ama* into *Purnima* with the help of the *Tatanka* presented to him by Sri Kamakshi for reedeeming him from the disgrace of pandits, and whose wife terrified the band of jealous Kasi Pandits, into ignominious flight, by answering their question, in the form of the oft-quoted exquisite song in *Pancha Chamala Vritha* while sprinkling *Gomaya* water in the outer pial before Sun rise, viz.

विपश्चितामपश्चिमेऽथ रत्नखेटदीक्षिते
सपत्नजित्ययत्नतो विवादकेलिमागते ।
बृहस्पति:प्रजल्पति प्रसर्पति क सर्पराट्
षडाननो नताननश्चतुर्मुखश्चदुर्मुख: ॥

3. Whether Sri Appaya belongs to the 16th century or partly to the 16th and partly to the 17th century is a problem which still remains unsolved. It is a true saying, the truth and wisdom of which stand established, by the history of all ages, claims and nations, that poets, philosophers, divines and mystics, appear on earth only now and then, very often centuries apart. When they do so, they supply a real want, make an epoch, add fervour and flavour to the humedrum, day to day life of the people among whom they take their birth and leave behind, a lengthening hallow, which continues to illumine the atmosphere long after their disappearance. To this rare class belongs, undoubtedly Sri Appayya, whether treated as

an *avatara* of *Mahesvara*, or as a *Vibhutimat Saiva* or as a *Maha Saguna Brahmopasaka*.

4. As a poet, he towers head and shoulders over his contemporaries. As a philosopher, he is second to none of his age, as testified by his works, such as Parimala, Siddhanta Lesa Sangraha, Nayamanjari, Nyaya-Rakshmani, Brahamatarka Stawam, Vidhirasayana, Chitra Pata and etc. As a diabectcian, he is next only to Sri Bhagavat-Pada as borne out by his Nyaya Muktavali, Naya Mayukhamalika, Ramanuja Sringa Bhanga, Madhvatantra Mukhamardana, Madhva Mata Vidhvamsana and Tapta Mudra Vidravana. His fame as Alankarika stands established by standard works such as Kuvalayananda, Chitra Mimamsa and etc. His supreme faith in Parameshvara as Nirguna Brahma is revealed in his Sivarkamani Dipika, Sikharinimala, Sivatatva Viveka, Sivadvaita Nirnaya etc. His leaning to Paramasiva and Sag*u*nopasana as the surest means to Brahmanubhava is borne out by his Sivakarnamrita, Sivarchana Chandrika, Sivadhayana Padhati, Siva Puja Vidhi, Gangadharashtaka, Bhakta Sataka etc. That he respects Itihasas and Puranas, is clearly brought out in his Ramayana and Bharata Tatparya Sangrahas etc. That his attitude towards Vishnu and other Devatas is not one of exclusion or disrespect, is illustrated by his Varadarajastava, and its Vivarana, Aditya Stotra, Hari Hara Stuti, Ananda Lahari, Ratna Traya Pariksha, Pancharatna Stuti, etc. His commentaries on Yadhavabhyudaya and Paduka Sahasra of Sri Vednta Desika speak volumes about his regard for merit in Sri Vaishnavas, unalloyed by any jealousy, inspite of the devouring hatred exhibited towards him by them, and in particular by Sri Tatacharya, the maternal uncle of Sri Appaya Iyangar, the paternal grandfather of Sri

Venkatadhwari of Visvagunadharsa fame. If tradition speaks true, it was this *Tatacharya*, that caused, by means of *Abhicharaprayoga*, high *Sita Jvara* to Sri Appayya, which however was brought down by his *Apitakuchamba Stava*, which is unmatched for the *Avyaja Bhakti* in which it reveals the Divine Maternal Grace of the Devi

आनन्दसिन्धुलहरी ममृतांशुमौले:
आसेविनाममृतनिर्मितवर्तिमक्ष्णो: ।
आनन्दवल्लिविततेरमृतार्द्रगुच्छं
अम्ब स्मराम्यहमपीतकुचे वपुस्ते ॥ १

निर्निद्रकोकनदकोमल कान्तमम्ब
नित्यं सुधानिकरवर्षिपदं त्वदीयं ।
मूर्छाकरज्वररुजा मम तापितस्य
मूर्ध्नि क्षणं सकृदपीतकुचे निधेहि ॥ २

शीतांशुकोटि सुषमाशिशिरै: कटाक्षै:
अव्याजभूतकरुणारस पूरपूर्णै: ।
कर्पूरधूलिमिव दिक्षु समाकिरद्भि:
अम्ब क्षणं स्नपय मामरुणाद्रिमान्ये ॥ ३

आविर्भव क्षणमपीतकुचे पुरस्तात्
अम्ब ज्वरेण महता मम तापितस्य ।
येन त्वदङ्घ्रि रुचिजालसुधाप्रवाहे
मग्नस्तदैव तनुतापममुं त्यजेयम् ॥ ४

नानाविधैर्नलिन जातलिपि प्रक्लृप्तैः
आनीतमूर्छमधिकं क्षुभितैर्ज्वराद्यैः ।
आश्वासय क्षणमपीतकुचे कराग्र
क्रीडाकनत्कनकहल्लकसौरभेण ॥ ५

कण्ठे विषं विषमुचो भुजगाः कपर्दे
पार्श्वेच भूतपतयः प्रमथाश्च भीमाः ।
शोणाचलेशमुपसृत्य भजेत को वा
नस्यात्तवाम्ब सविधे यदि सन्निधानम् ॥ ६

शक्तिर्जगज्जननपालनभञ्जनेषु
भोगेषु दिव्यमहिषी तरुणेन्दुमौलेः ।
सिद्धिः करप्रणयिनी तव सन्निधानं
यन्नाऽसि तस्य तदपीतकुचे न जाने ॥ ७

त्वं साक्षिणी प्रलय भैरवताण्डवानां
त्वं शोषिणी सहरिधातृचराचराणाम् ।
त्वं मोचिनी सकल संसृतिजालकानां
त्वां ब्रह्मसंविदमपीतकुचे नमामि ॥ ८

It was again this *Tatacharya* that instigated some miscreants to make an attack, upon Appayya and his small retinue, at midnight while on their way to Veloor, which evoked from him the well known *Nigrahashtaka*. This brought down thunder and flashes of lightning over the heads of the *delinquents*. Smitten by remorse and penitance, Tatacharya fell

prostrate at the feet of Appayya, who with characteristic generosity, readily forgave him and extended the hand of evergrowing, life long friendship, the depth of which was equalled only by the bitterness of their prior enmity. I cannot close this episode without noting that even uniformly kind-hearted Appayya got extremely annoyed at this last act of treachery, on the part of Tatacharya and gave vent to his irrepressible though transitory feeling in the angry verses.

मार्गेसहायं भगवन्तमेव विश्वस्य विश्वाधिक निर्गतोऽस्मि ।
शास्त्रं प्रमाणं यदि सा विपत्स्यात् तस्यैवमन्दो मयि यां चिकीर्षेत् ॥ १

कान्तारे प्रान्तरे वा मदकुशलकृतं सान्तरं सान्तरङ्गं
मद्बंद्रुह्यन्तमन्तं गमयतु भगवानन्तकस्याऽन्तकारि ।
क्षिप्रं विप्राधमस्य क्षिपतुच तदुरस्येव मायाविवर्ता
नार्तान्बन्धूनबन्धूनिव मम शिशिराभ्यन्तरान्सन्तनोतु ॥ २

सहस्रं वर्तन्तां पथिपथि परे साहसकृतः
प्रवर्तन्तां बाधां मयि विविधमप्यारचयितुं ।
न लक्ष्यीकुर्वेहं नलिनजलिपिप्राप्तमपि तत्
मम स्वामी चामीकरशिखरिचापोऽस्ति पुरतः ॥ ३

संकल्प्य स्थाणुशास्त्रपचरणविहतिः स्वेनकार्या भुवीति
श्मश्रूणिस्वैरमश्रूण्यपिखलु महतांस्पर्धयावर्धयन्तः ।
क्षुद्रं विद्रावयेयुर्झटिति वृषपतिविक्रोधनिश्वासलेशाः
शास्त्रं शैलादिभृत्यास्तनुयुरखिलभूमण्डलव्याप्तमेतत् ॥ ४

क्वचिदवयवे दग्धुं कांश्चिद्बलादनुचिन्तयन्
निरसनमितो देशात्कर्तुं महेश्वरमाश्रितान् ।
प्रमथपरिषद्रोषैर्दग्धाखिलावयवस्वयं
निरसनमितो लोकादेव क्षणेन समश्रुताम् ॥ ५

कालप्रतीक्षा हि न तस्य कार्या पुलस्त्यपुत्रादिवदन्तकारे ।
त्वदाश्रितद्रोहकृतोद्यमानां सद्यःपतेदेव हि मूर्ध्निदण्डः ॥ ६

कण्ठेरुद्रक्षमालां भसितमसितं फालदेशे च पश्यन्
नश्यन्नेव क्रुधा यस्तदपहृतिमतिं सत्सु कुर्वीतगुर्वीम् ।
तत्कालात्तूर्णमायुर्लिखितमसुगणं चाऽपि तत्कण्ठदेशात्
क्रुद्धास्ते ह्युद्धरेयुर्निजपदकमलाङ्गुष्ठलीलाविलासात् ॥ ७

सकलभुवनकर्ता साम्बमूर्तिश्शिवश्चेत्
सकलमपि पुराणं सागमं चेत् प्रमाणं ।
यदि भवति महत्वं भस्मरुद्राक्षभाजां
किमिति न मृतिरस्मद्द्रोहिणस्स्यादकाण्डे ॥ ८

I omit for fear of length the other soul-stirring episodes such as *Agnidarsana* etc.

5. This leads us chronologically to his *Atmarpana Stuti*, the subject of the present publication. Tradition ascribes a some what strange origin to this *Stuti* in much the same way as it does to the *Anandasagarastava* of Sri Nilakanta Dikshitar. In my introduction to the latter, I wrote as follows—"The *Vairagya Sataka, Santivilasa and Anandasagara Stava* are companion volumes, reflecting as in a mirror, the tribulations, doubts, perplexities, and conflicts, which

harass, torment, torture and agonise a Jiva treading the paths of *Karma* and *Gnana* and hankering after *Swatmanandanubhava*. The *Anandasagara Stava*, as I read it, is the soliloquy of a jiva located by a thousand conflicting emotions, convulsing him from head to foot and struggling with wings, undeveloped to soar into the dizzy heights of *Anandanubhava* after discarding the fickle, fleeting, evanescent, hollow and elusive pleasures of youth, wealth, power, royal favour and every other earthly distinction."

The spirit of genuine heart searching, which every verse of Anandasagara Stava breathes and demands a satisfying answer, appears to be a trait running in the blood of this family of saints, philosophers and mystics, from grandsires to grandsons. The Atmarpana Stuti of Sri Appayya, like Anandasagara Stava, has its roots, unmistakably in this irrepressibly frank enquiry. Nilakanta while unwilling to ignore or exclude Karma Marga or Bhakti Marga or Gnana Marga exhibits a leaning towards Prapatti (self.surrender) as a condition precedent to Anandanubhava. He desires support for this in the verse of Bhagavatpada, in Sivandalahari:

असारे संसारे निजभजनदूरे जडधिया

भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् ।

मदन्यः को दीनस्तव कृपणरक्षातिनिपुणः

त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ॥

Appayya, while stating Karma Marga and Gnana Marga, as the initial and final sopana for this realization, insists upon the intermediate sopana of Bhakti and Isvaranugraha as an indispensable pre-requisite.

The Gita Vakya, दैवं चैवात्र पञ्चमम् । ' and Viveka Chudamani Vakya, viz. ईश्वरानुग्रहादेव पुंसामद्वैतवासना afford support to this view, propounded in all his works including Atmarpana Stuti. A dispassionate reading of the two views, leads to the conclusion that there is really no conflict between them. In fact they supplement one another.

Sri Nilakanta blinded his eyes with burning camphor for testing the strength of his devotion and outflowed Anandasagara Stava in full flood of torrential eloqueuce. Sri Appayya drank the maddening juice of Kanakapala for testing the strength of his devotion and Atmarpana Stuti burst forth, in the shape of 50 extempore slokas, which were recorded by his pupils, eagerly awaiting them, in pursuance of prior express directions to that effect.

6. The internal evidence, furnished by the style, the diction and the peculiar flow of words, corroborates the tradition in a large measure. One finds the same set of ideas, the same set of appeals to the divine grace, the same set of lamentations and wailings and the same set of confessions, foibles etc.. expressed without effort, without careful arrangement, and without any attention for refinement or chiselled language which one would expect from a poet writing at his desk. Even a superficial comparison of the language of these poems with the other cognate works of Appayya, reveals the background. It is more in the nature of a personal heart to heart talk with the Lord, with frequent qnestionings and answerings and the concommittant pauses end repetitions reinforced by anticipated soothings and breathing a sweet clinging vine type of relationship between the two, the relationship of a devoted Bhritya and a loving Sevya, One is reminded in this connection of the 66th Sloka of Sivananda Lahari-

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जनाः
यत्कर्म चरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् ।
शम्भो स्वस्य कुतूहलस्यकरणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥

The explanation Lokavallilakaivalyam requires careful consideration and rational elucidation in the light of Srutimata Tarka.

7. An analysis of the 50 slokas. in extenso, will be out of place in a mere foreward like this. I have to content myself with drawing the special attention of the reader, if he is so minded to slokas 6 to 8, 10, 11, 14, 15, 20, 22, 24, 31, 32, 42 and 49. Of these slokas 15, 24, and 49 make marked reference to Prapatti. Slokas 14 and 34 deal with the fetters which bind even the sinking man to his relations, and sloka 20 defines the relationship of Jiva and Lord as Dasa–Dasya, slokas 22 to 27 discriminate between Karma, Bhakti, and Gnana. Sloka 31 takes the Allmerciful Lord to task for not extending his help to the afflicted. His unwavering faith is emphasized in Sloka 12 which also takes note of the pretended Vipralipsa of the Lord. Sloka 49 winds up the Stuti with a fervent appeal for forgiving all his sins of commission and omission.

The beauty of this unsophisticated effusion is better imagined than told.

Sri Balasubramania Iyer has not chosen to take me into his confidence regarding the author of the Tamil commentary to Atmarpana Stuti. I have a shrewd suspicion that it is Sri K. M. Balasubramania Iyer himself. The commentator, whoever he may be, is a master in the art of writing commentaries. The com-

mentary is a regular treatise on the subject by itself. The sources upon which he has drawn for his notes, are copious and his quotations are remarkably apt and illumining. On reading them, one feels a completely reformed person transplanted in a higher and nobler sphere. May the Almighty bless the publisher, the commentator and the reader with long years of usefulness to suffering mankind!

उमाकान्ते रमाकान्ते येषामासीन्मतिस्समा ।
नमामि दीक्षितेन्द्रांस्तान् नयषट्कविशारदान् ॥
मारमणमुमारमणं फणधरतल्पं फणाधरातल्पम् ।
मुरमथनं पुरमथनं वन्दे बाणारिमिसमबाणारिम् ॥

षडर्धनयनपुरम् ।
१० २ १९.४८.

नदेशः ।
धर्मभूषण, धर्मसंवर्धक,
आस्तिकशिखामणि, धार्मिकसार्वभौम, भारतपुत्र, ब्रह्मश्री
Rao Sahib N. NATESA IYER.

# முன்னுரை.

இந்த ஸ்தோத்திரம் மஹாபிரஸித்தரான மஹான் அப்பய்ய தீக்ஷிதர், தன் உள்ளத்தின் ஆழ்ந்த பக்தியை தெரிவித்து "ஆத்மார்ப்பணம்" என்கிற பெயருடன் அருளியதாகும். நமது சாஸ்திரங்களில் யோகங்கள் மூவகைப்படும். யோகம் என்பது ஈசுவரனை தரிசிக்க உபாயமாம். முதலில் கர்மயோகமும் அதனுடன் பக்தியும்தான் அனைவருக்கும் முக்கிய ஸாதனமாகவும் மேல்படியான ஞானயோகத்திற்கு அடிப்படையென்றும் பெரியோர்கள் அனுபவத்தினால் கண்டிருக்கிறார்கள். கீதையிலும் பகவான் முதலில் கர்மயோகத்தின் மர்மத்தை ब्रह्मण्याधाय कर्माणि, ब्रह्मार्पणं ब्रह्महविः, कर्मण्यकर्म यः पश्येत् என்ற மூன்று பத்தியங்களால் தெரிவித்துள்ளார். நிஷ்காம கர்மயோகம் பிரம்மார்ப்பண நியாயத்தினால் காரணகாரகங்களையும் வேற்றுமைகளையும் ஒருமைப்படுத்தி அகர்மஸ்வபாவமாகிய ஸ்வதந்திர, உதாஸீந, அகண்ட, ப்ராதிபதிகார்த்தமாகிய ஸமரஸ பிரம்ஹத்தை ஸாதகன் ஆத்மாவென விளக்குவதென்றே உபதேசிக்கப் பெற்றிருக்கிறது. பிறகு பக்திஷட்கத்திலும் मय्येव मन आधत्स्व मयिबुद्धिं निवेशय என்கிற கீதவாக்கியத்தினால் பக்தியின் ஸ்வரூபத்தை நன்கு விளக்கி மனஸ், புத்தி முதலிய அந்தக்கரணங்களை ஈசுவரார்ப்பணம் செய்வதே முக்கியமென்றும் விதிக்கிறார். योमे भक्त्याप्रयच्छति என்றவாறு, தீக்ஷிதேந்திரர் தன் ஆத்மாவை பரமாத்மாவாக்க அர்ப்பணம் செய்கிறார். ஸர்வ ப்ராணிகளிடம் அந்தர்யாமியும் ஸகாவாயுமிருப்பவர் பகவான். समः सुहृत्प्रियोब्रह्मन्भूतानां भगवान् स्वयम् । என்று பாகவதம் வேதார்த்தத்தையே கூறுகின்றது. வேதமும் सखा सख्या समिध्यसे, सख्येमारिषाम वयंतव, सखासुशेव एधिनः, सखेविष्णो वितरं विक्रमस्व, एषहिसखा, என்கிற

வேதவசனங்களால் பகவான் ப்ராணிகளின் உள்ளத்திலிருக்கும் சிநேகிதன் என்பது தெளிவாகிறது. सारूप्यमेकत्वं वा सख्यं என்று ஸ்கந்தஸ்வாமி பட்டபாஸ்கரர், பாஷ்யத்தில் குறிப்பிடுகிறார்கள். இதனால் உயர்ந்தபக்தியின் லக்ஷணமாகிய ஸக்கியமும் ஆத்மநிவேதனமும்தான் வேதத்தில் சொல்லிய உத்தம சாதனங்கள் என்பது நிச்சயமாகிறது. இதன் ஸ்தாயீபாவமும் ரஸானுபவமும்தான் ஸாத்திய பக்தியென்கிறார் மதுஸூதன ஸரஸ்வதீஸ்வாமிகள். இதை நன்குணர்ந்த இவ்வுத்தமர் ஞானவடிவும் உமாஸகாயமுமான பரமாத்மாவை சரணமடைந்து தான், அரிய பெரிய ஸாதனமாகிய ஞானத்தை அடைந்து ஸித்திபெற்ற விரத்தை ஜகத்துக்கும் பூர்வ புண்ணியவசத்தினால் ஈசுவரானுக்கிரஹத்துக்குப் பாத்திரமாகின்றவர்களுக்கும் தெரிவிக்கிறார், என்பதும் உண்மை.

இப்பெருமைவாய்ந்த நூலை எளிதில் விவேகிஜனங்கள் அறிந்து அநுபவிக்கும்படி தேசபாஷையில் பதவுரை, பொழிப்புரை, கருத்துரையுடன் அச்சிட்டு உபகரிப்பதும் மெச்சத்தக்க ஸேவையாகும். ஆனால் தற்காலம் நமது பாரதமக்களுள் பூதாவேசம் போன்ற பொதுஉடமை, உரிமை, சமதர்மம், முதலிய இயக்கங்களில் ஈடுபட்டு தலைகீழாகவும் ஈசுவரன் ஸிருஷ்டி தத்துவத்தை உணராமலும் தோன்றியிருக்கும் மனோநிலைமையைக் குறித்து இத்தகைய நூல்கள் சிறிதேனும் பயனளிப்பது சந்தேகத்திற்கிடமாகி வருவதாலும், ஸாத்வீகத்தன்மைவாய்ந்தவர்களின் கடமை நல்லொழுக்கத்தையே யூட்டுவதாகும். இம்முறையில் இதை ஆஸ்திக அன்பர்களுக்கு அளிப்போம். ஈசுவரன் ஆள்கொண்டு அருள்புரிவாராக.

உமையாள்புரம்
5—2—48 } வி. எஸ். ராமநாத சாஸ்திரி.

ஓம் நம: சிவாய.

# ஆத்மார்ப்பண ஸ்துதி

# மதிப்புரை.

आत्मार्पणस्तुति: (ஆத்மார்ப்பண ஸ்துதி:) இது ஆத்மாவை ஆண்டவனிடத்து ஒப்படைத்து அவரது கல்யாணகுணங்களை எடுத்துக்காட்டுவதுபற்றி ஆத்மார்ப்பண ஸ்துதி எனப்படும். இந்தஸ்துதி "சந்தோகவம்சத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் தீக்ஷிதராய்ப்பரசிவம் கலியிலவதரிக்கும்" எனச்சிவரஹஸ்யத்தில் சொன்னபடி அவதரித்த அப்பய்தீக்ஷிதர் என்ற பெரியாரால் அவதாரியான பரசிவத்தினிடம் ஆத்மாத்மீயங்களை (தம்மையும், தம்மைச்சார்ந்த வற்றையும்) ஒப்படைத்துச்செய்யப்பட்டதாகும்.

தம்மனம் இந்நிலைபோல என்னிலையிலும் பரசிவப்பற்றுள்ளதாக இருக்குமா? என்பதைக்கண்டறிவான்கருதி தன் முயற்சியால் மனோநிலையைமாற்றிக் கொண்டகாலத்து, அந்நிலையில் அன்னார் திருவாக்கினின்றும் வெளிவந்ததை அன்னார்க்கட்டளைப்படிச்சீடர் எழுதிவைக்க, மனம்முன்னிலையடைந்த பின்னர் இப்பெரியார் அவற்றைக்கேட்டு, நிலைமாறினும் மனம்மாறாதிருந்ததையறிந்து பேரானந்தமடைந்தனர் என்று சொல்லப்படுகிறது. சங்கை — தீக்ஷிதேந்திரர் உண்மையில் பரசிவத்தின் அவதாரமாகயிருந்தும், தன்னை ஒருப்ராகிருதன்போலும், காமாதிதோஷம் நிறைந்தவன்போலும், சிவபக்தியற்றவன்போலும் பேசியிருப்பதும், மனோநிலையைமாற்றிக் கொண்டு அந்நிலையில் தன்மனம் சிவத்தையே நாடிநின்றதா எனவறிந்தார் என்பதும் எங்ஙனம் எனின்? உத்தரம் கூறுவாம். பொதுவாய் பகவதவதாரங்கள் உபதேசமூலமும், சொந்த அனுஷ்டானங்கள் மூலமும் நல்வழிகாட்டி ஜீவர்களை உய்ப்பிக்கவேண்டியே ஏற்படுகின்றமைபற்றி, தமக்கென இல்லாவிடினும்கர்மவயப்பட்ட எம்போன்ற ஜீவர்கட்கு நல்வழிகாட்டவேண்டியே இவ்விதம் செய்தனர் என்றுதான் சாஸ்திரவச்யர்களான நாம்கொள்ளுவதவசியமாகிறது.

இவ்விதமே. எமது ஆண்டவன் ஸ்ரீ கோபாலன் கீதையில் "எனக்குச்செய்ய வேண்டுவதோ, புதிதாய் அடையவேண்டுவதோ, ஒன்றுமில்லாதிருந்தும் நான் கர்மத்திலீடுபடுகிறேன்" என்றும், "உலகுக்கு நல்வழிகாட்டும் ஞானி, அவித்வான்கள் எவ்விதம் மிக்கப் பற்றுடன் கர்மத்திலீடுபடுகின்றனரோ அவ்விதமே தானும் பற்றையொழித்துக் கர்மத்திலீடுபட வேண்டும்" அதாவது:— அவித்வான் கர்மபற்றுள்ளவன், வித்வான் பற்றை யொழித்தவன். ஆயினும் கர்மானுஷ்டானம் இருவரிடமும் ஒரேவிதமாகவே யிருத்தல் வேண்டும்" என்றும் உபதேசித்திருக்கிறார். அவ்விதமே நமது தீக்ஷிதேந்திரர்களும் எம்போன்றவர்க்கு நல்வழி காட்டவேண்டியே இவ்விதம் செய்தனர் என்று கொள்வதில் யாதும் தடையில்லை. ஆகவே நமக்கு நல்வழிகாட்ட அம்மஹானாற் செய்யப்பட்ட இந்நூல் ஆத்மார்ப்பணஸ்துதி எனப்படுகிறது. அதிலடங்கிய **आत्मा**=ஆத்மா என்றதால் உயிர், உடல், உள்ளம் உற்றார் சுற்றத்தார் கூறப்படும். **अर्पणम्** (அர்ப்பணம்) என்றதால் ஒப்படைத்தல் கூறப்படும். யாரிடத்தில் என்றகேள்வி நிகழும். அதற்கு **अर्प्यते अस्मिन्** (அர்ப்யதே அஸ்மின்) எனப் பொருள்கொண்டு, பரசிவத்தினிடம் என்ற பொருள் கிடைத்து விடுகிறது. ஆகவே ஆத்மார்ப்பணமாவது--பரசிவத்தினிடம் இயற்கையிலமைந்துள்ள ஒப்புயர்வற்ற கல்யாண குணங்களை யெடுத்துக்காட்டி அவற்றுள் ஒன்றிவிடுதலே ஆத்மார்ப்பணஸ்துதி என்றேற்படுகிறது. இந்நூலிலுள்ள ஐம்பது சுலோகங்களை படித்துப்பார்த்தால் நாம் சொன்னது நன்கு விளங்காமற் போகாது. இவ்விதமே தீக்ஷிதரவர்களும் இதேகிரந்தம் 15-வது சுலோகத்தில் **आत्मानंमे सहपरिकरं रद्रिकन्याधिनाथ** என்றதால் உற்றார் சுற்றத்தார் உயிர் உடல் உள்ளம் இவற்றை உம்மிடம் ஒப்படைக்கிறேன் எனச் சொல்லியிருக்கின்றனர். அன்னார் பேரன் ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் என்ற மஹானும் **त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम्** ஸ்வாத்மார்ப்பணம் செய்த அப்பய்யதீக்ஷிதேந்திரர் அவர்களால் தம் குலம் முழுதுமே உம்மிடமொப்படைக்கப்பட்டிருக்கிறது" என்று தன் ஆனந்தசாகரஸ்தவத்தில் வெளியாக்கியிருக்கிறார். ஆகவே தீக்ஷிதேந்திரரவர்கள், தெரிவித்தபடி கர்மபத்தர்களான நாம்

உடல், உள்ளம், உயிர், உற்ருர் சுற்றத்தார் யாவற்றையும் பரமனிடம் ஒப்படைத்து, நமக்கெனவாழாமல் அவனுக்கென வாழ்ந்து, முடிவில் அவனேயே நினைத்துப் பந்தம் நீங்கிப்பேரானந்தப் பெருவெள்ளத்தில் இரண்டறக்கலந்து களிப்போம்.

இவ்வருமை பெருமைதங்கிய இந்நூல் வடமொழியிலிருப்பதால் அம்மொழிப்பயிர்ச்சி பெருத ஏனையோர்க்கும் இதைப்பயன்படுத்துவான் கருதி, கண்டமங்கலம் ஸ்ரீபாலசுப்பிரமணிய ஐயர் எளிய நடையில் தமிழில் பெயர்த்து வெளியிட முன்வந்தது போற்றற்குரியதாகும். அறிஞர் ஐயர் தமது கலைஞானத்தளவில் நின்று மட்டும் இச்சிறந்த நூலை மொழிபெயர்க்காது, ஒப்பற்ற பரசிவப் பற்றுடனும் இம்மொழி பெயர்ப்பிலீடுபட்டிருக்கிருர் என்பது இதைப்படிப்பவர்க்கு நன்கு புலனுகுமாதலால் அதைப்பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. மேலும், நாத்திகம்மலிந்து, ஆத்திகம் குன்றிவருமின்னாளில் காகிதவிலையும், பதிப்புக்கூலியும் 1-க்கு 5-மடங்கு ஏறியிருப்பதையும் பொருட்படுத்தாது நமது ஐயர் இந்நூலை எப்படியாவது பிரசுரப்படுத்தியே ஆகவேண்டுமெனப் பிடிவாதம் கொண்டு வெளியிட்டிருப்பது ஆஸ்திகதமிழுலகம் செய்த பாக்கியமேயாகும். இந்தவெளியீட்டிலிடையிடையே காணப்படும் சில அச்சுப்பிழைகளை அடுத்த பதிப்பில் திருத்திவிடுவார்கள் என்றே நம்புகிறேம். ஆகவே ஸ்ரீபாலஸுப்ரமணிய ஐயரின் சங்கல்பம் நிறைவேறும்படி ஆஸ்திக தமிழுலகம் நடந்து பரசிவத்தின் அருளைப்பெறுமென்றே நம்புகிறேம்.

இங்ஙனம் :

தி. நகர்
சென்னை.

கடலங்குடி-நடேச சாஸ்திரிகள்.
11-2-1948.

ओं

" नाहंसहे तव कथाश्रवणान्तरायं नाहंसहे तवपदार्चनविच्युतिं वा ।
मोक्षं दशैतदविरुद्धमिदं नचेत्स्यात् नैवास्तु मातरपवर्गमहोपसर्गः ॥ "

(५२ श्लो.) என்று ஆனந்தஸாகரஸ்தவத்தில் சின்ன தீக்ஷிதரருளிச் செய்திருக்கிறார் "**तन्निष्ठास्तत्परायणाः**" என்ற படி பகவத்ப்ரபத்தியாலடையும் ஆநந்தம் முக்தியிலுமில்லை என்பது ஸ்வாநுபவஸித்தம். இவ்வாசகத்தை வெளிப்படுத்தி பெரியதீக்ஷிதரவர்களால் எழுதப்பட்ட பக்திக்ரந்தம் ஆத்மார்ப்பண ஸ்துதி என்பது. பலசாஸ்திரங்களில் நிரங்குசமானப்ரதிபா விசேஷத்தால் எண்ணிறந்தக்ரந்தங்களையியற்றி ஸ்ரீகண்டாசார்யாள் மதத்தைஸ்தாபனஞ்செய்து, சிவார்கமணிதீபிகை, சிவதத்வ விவேகம், ஆநந்தலஹரீ முதலிய சிவசக்தி பாரம்யபரமான க்ரந்தங்களை இயற்றிய மாஹாபுருஷரின் பக்திரஸமித்துதியில் உள்ளடங்காது ததும்பி வழிக்தோடுகிறது.

" सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतम्मम ॥ "

என்ற சரணாகதி தத்வப்படி ப்ரபத்திமார்க்கத்தை யொட்டி தன் மனதை ஸர்வேச்வரனிடம் அர்ப்பணஞ் செய்யுமித்துதியில் "**प्रपत्ति**" என்றபதம் பலவிடங்களில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. [१. त्वत्पादाब्जप्रपदनमृते (१० श्लो.) २. पार्वतीशं प्रपद्ये (१६. श्लो) ३. तंत्वां प्रपद्ये (१७ श्लो) ४ शरणंयामि संसारवैद्यम् (१९ श्लो)५. हस्तालंम्बप्रपदनमिदं प्राप्यते निर्भयोऽस्मि(२२ श्लो.) ६ मां भजस्व प्रपन्नम् (२४ श्लो) ७. त्वत्पादाब्जं प्रपन्नम् (३० श्लो) ८. न ते पादपद्मं त्यजामि (४२ श्लो) ९. तवश्रीपादुका वाहकानां भृत्यभावं मे देहि (४४ श्लो) १०. अनन्यशरणः शरणंप्रपद्ये (४९ श्लो)] ' तेन विना तृणमपि न

**चलति**" என்றபடி பகவானை அந்தர்யாமியாகக்கருதி "**अन्तरात्मन् ममात्मा**" (३८ श्लो.) "**नास्त्येवात्मन् मम**" (२० श्लो.) என்று விளிவேற்றுமையால் கூப்பிடுகிறார். **ग्रामो गृह्णात्यहिततनयं किन्तुमात्रा निरस्तम्**" (२९ श्लो) "**श्राम्यन्वत्सः स्मरहरयुगे धावता किंकरोतु**" (९ श्लो) இத்யாதி அர்தாந்தரந்யாஸங்கள் பல இத்துதியில் சிதறிக்கிடக்கின்றன. "**शुचिदिवसकृत्कोटिदीप्रे**" (४ श्लो.) (**शुचि**—கோடைகாலம்) கோடைகாலத்திய கோடி சூர்யஒளிக்கொப்பாக சிவபுரத்தை வர்ணிக்கிறார்.

இவ்விதம்பல விஷயங்களடங்கிய இச்சிறுதுதியை சிறியோர் பெரியோரனைவர்களுக்கும் பயன்படும்படி எளிய நடையில் பதவுரையுடனும், லலிதோபாக்யானம், சூதஸம்ஹிதை, உபநிஷத்து, வேதம், முதலிய விடங்களிலிருந்து வசனங்களை ஆதாரமாக காண்பித்து விரிவுரையுடனும் நல்லகாகிதத்தில் நாகரலிபியில் அச்சிட்டுவெளியிட்டு உபகாரஞ் செய்த ஸ்ரீமான் கண்டமங்கலம் சிவபக்த பாலசுப்பிரமண்ய அய்யருக்கு நாம்நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். லௌகிகத்துறையில் ஈடுபட்டிருந்த போதிலும் இப்பெரியவர் பக்திமேலீட்டால் இம்மாதிரி ஸேவையில் ஈடுபட்டிருப்பது நமதுபாக்யமே. ஸர்வேச்வரன் அவருக்குமேன் மேலும் ஊக்கமளித்து இன்னும்பலக்ரந்தங்கள் உரையுடன் வெளியாகும்படி செய்ய அநுக்ரஹிப்பாராக. பொது ஜனங்களும் இம்மாதிரி புத்தகங்களை வாங்கிவாசித்து அவர்சிரமத்தைப்பயன்படுத்திக்கொள்வார்களாக.

**K. Balasubrahmanya Sastri.**

*Vyakarana Sahitya Mimamsa Siromani*

PRINCIPAL

Sanskrit Collage Mylapore, Madras, 16—2—48

## பத்திராதிபர் குறிப்பு.

### ओं श्रीगुरुभ्यो नमः

मार्ताण्डतिलकस्वामि महागणपतीन्वयम् ।
विश्ववन्द्यान्नमस्यामः सर्वसिद्धिविधायिनः ॥

அகண்ட ஸச்சிதானந்த வடிவான ஸாம்பபரமேச்வரரது அம்சாவதாரராயும் அருள்நிதியாகவுமுள்ள ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதேந்திரரைப்பற்றிக் கேட்டிராதவர்கள் சாஸ்திரஉலகில் இருக்கமுடியாது. இந்தமகாத்மா, ஆன்மாக்களை உஜ்ஜீவிக்க நூற்றுக்கணக்கான அற்புத கிரந்தங்களையியற்றி பாரதபூமியின் புகழை விஸ்தரித்துள்ளார்.

பகவான் வேத வியாஸராலியற்றப்பட்ட பிரம்மஸூத்திரங்களை, வேதாந்த வாக்யங்களான நவரத்ன மணிகளென்று நிரூபித்து, அவைகளின் ஸ்வரூபத்தை பிரகாசப்படுத்தியதால் 'ஸ்ரீபாஷ்யகாரர்' என்று பிரஸித்திபெற்ற ஜகத்குரு ஆதிசங்கர பகவத்பாதாளின் 'ஸ்ரீபாஷ்ய' கௌஸ்துப மணிமாலைக்கு பிரகாசிக்கும் தன்மையிருப்பதுடன், திவ்யஸுகந்தமும் பொருந்தியிருக்கிறது என்று தனது 'பரிமளம்' என்ற வியாக்யானத்தால் அதைசாஸ்திரஉலகம் அனுபவிக்கும்படிச்செய்தவரும் இந்த தீக்ஷிதேந்திராளேயாவர்.

'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பளிக்கும் களிப்பே, காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே' என்றபடி, வித்வான்களுக்குமட்டுமன்றி பாமரர்களுக்கும் உதவும்படி ஸமஸ்தவேதாந்த ஸாரமாயும், பேரின்பப்பொக்கிஷத்தின் திறவுகோலாயுமுள்ள ஒருஸாதனத்தை, இத்தீக்ஷிதேந்திராள் அனுஷ்டித்துக்காட்டி அருளினதே "ஆத்மார்ப்பணஸ்துதி', என்ற இக்கிரந்தமாகும்.

இவ்வித்யேச்வராள், தனதுமனோநிலையின்தன்மையை பரிசோதிக்க, தனதுசிஷ்யர்களிடம் 'நானிப்பொழுது சொல்லப்போகும் விஷயங்களைப்பதிந்து கொள்ளுங்கள், என்றுகூறி, ஊமத்தங்காய் ரஸத்தைப்பருகி உன்மாதாவஸ்தையையடைந்து, தன்னையும் மறந்து, அனாயாஸமாகப் பிரலாபித்ததை அவருடைய சிஷ்யர்

கள் எழுதிவைத்தார்கள். அதுதான் 'உன்மத்தபஞ்சாசத்' என்ற ஐம்பதுச்லோகங்களடங்கிய இச்சிறியகிரந்தமாகும். இதில்பரமேச்வரனிடம் தன்னையே அர்ப்பணம்செய்வதால், இதற்கு 'ஆத்மார்ப்பணஸ்துதி' என்றுபெயர்.

இம்மகாத்மாவுக்கு, ஸ்வப்னத்திற்கு ஸமமான உன்மாதாவஸ்தையிலும், தெளிவான சிவபக்தியும், பரமனது மலரடிகளில் ஆத்மஸமர்ப்பணமும் வெளிப்பட்டதால், அவரது மனதின்தூய்மை அறியப்படுவது..ன், தான்கற்றுணர்ந்த சாஸ்திரங்கள், சிரௌதஸ்மார்த்த கர்மானுஷ்டானங்கள், ஜப, தப உபாஸனைகள் முதலியவை மனதின் ஸம்ஸ்காரரூபமாகப்பரிணமித்து, அதைபகவத்பக்தியிலும், ஆத்மாவை பரமனுக்குஸமர்ப்பிப்பதில் முடிவையும் உள்ளவைகளாக ஆக்கவேண்டும் என்றதத்வத்தையும் உணர்த்துகிறது.

பிரம்மாத்மைக்யஞானமே மோக்ஷத்திற்குப் பரம ஸாதனமென்று வேதாந்தங்களின் ஸித்தாந்தமாயினும் **ईश्वरानुग्रहादेव पुंसांभवति अद्वैतवासना** அந்த பிரம்மாத்மைக்ய ஞானத்தின் வாஸனை மனிதர்களுக்கு ஸாம்ப பரமேச்வரனது அனுக்ரகத்தால் தானுண்டாகிறது என்றபடியும்,

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुनतिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥
तमेवशरणंगच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परांशान्ति स्थानं प्राप्यसि शाश्वतम् ॥

"ஹே அர்ஜுனா! பரமேச்வரன் ஸமஸ்த ஜீவர்களின் ஹ்ருதய கமலத்திலிருந்துகொண்டு, அவர்களை சக்கிரத்திலேற்றப்பட்ட பொம்மைகளைப்போல் தனது மாயையால் ஆட்டிவைக்கிறார். ஹே பரதகுலச் செல்வனே! அந்த பரமனையே ஸர்வாத்ம பாவனையுடன் தஞ்சம் புகு; அவரது அருளால் சாந்தமான (நித்யானந்த) நிலையை நீ பெறுவாய்" என்று கீதாசார்யன் திருவாய் மலர்ந்துள்ளார்.

அத்யாத்மத்தில் (சரீரத்தில்) ஹ்ருதய ஸ்தானம், அதிலோகத்தில் (ப்ரம்மாண்டத்தில்) சிதம்பர க்ஷேத்திரமாகும். பரமன் இவ்விரண்டு பிரதேசங்களிலும் (பிரத்யகாத்மாவாயும் சிவகாமி

நடேச மூர்த்தியாயும்) தனது ஆனந்த தாண்டவத்துடன் விளங்குகிறார். இவர், தன்னை ரக்ஷகனாகக்கோரி, முழுமனதையும் தனக்கு அர்ப்பித்தவர்களுக்கு (ஆத்மார்ப்பணம் செய்தவர்களுக்கு) 'நாடகமே உலகம்' என்றபடி பிரபஞ்சரூபமான நாடகத்தின் தோற்றத்தை ஒழித்து, தன்னுடைய ஆனந்த தாண்டவ ரகஸ்ய (சிதம்பர ரகஸ்ய) ஞானத்தை அருளி, தன்னுடைய பேரின்ப நிலையில் சேர்த்துக்கொள்கிறார்.

மார்கழி மாதம், ஆர்த்திரா தினம், உஷத்காலம், தீக்ஷிதேந்திரான் ஸ்ரீசித்ஸபேசனை தரிசித்து தனது அனுபவத்தைக் கூறுகிறார்.

मौलौ गंगाशशांकौ करचरणतले शीतलांगा भुजंगा:
वामेभागे दयाद्रा हिमगिरितनया चन्दनं सर्वगात्रे ।
इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ वोढुं क्व शक्ति.
चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासो मदीये ॥

'தலையிலோ (குளுமையான) கங்கையும் சந்திரனும்; புஜங்களிலும் குளிர்ந்த ஸர்ப்பங்கள்; இடது பக்கத்திலோ, கருணையாலேயே நனைந்த (குளிர்ந்த) பனி மலையின் பெண்; இத்துடன் தேக முழுமையும் சந்தனக்காப்பு, ஹே பொன்னம்பல நாயகா! (ஆத்யாத்மிக கஷ்டங்களால் தாக்கப்பட்டு, வாழ் நாட்களை வீணாக்கி, விஷயங்களாகிற கட்டைகளில், வாஸனையாகிற எண்ணையையும் கொட்டி, காமமாகிற தீயினால் கொளுத்தப்பட்டு) கொழுந்து விட்டெரியும் என்மனதில், நீர் நித்ய வாஸம் செய்யாவிடில, இவ்வளவு சீதளத்தையும் ஸகிக்க உமக்கு சக்தி யேது?" (காமத்தீயால் எரியும் என் மனதில் நீர் நுழைவதால் தான், உமக்கு இவ்வளவு சீதளத்தாலும் ஜளிப்பு ஜுரம் ஒன்றும் ஏற்படாமலிருக்கிறது)—அதாவது உமது பிரயோஜனத்திற்காகவே உம்மைத் தஞ்சமடைந்த என்னைக் காத்தருளும், என்று ச்லேஷையாகக் கூறுகிறார்.

காம க்ரோதங்களுக்கு இருப்பிடமாக இம் மனதை வைத்துக் கொண்டால், மிருகத் தன்மையே பிரகாசிக்கும். அம்மனதை பரமனுக்குச் சொந்தமாக்கி அவனிடம் ஒப்படைத்தால், மிருகத் தன்மை நீங்கி தேவனுடைய அருளை அடைகிறான். காயிக வாசிக

கார்யங்களுக்கும் மனதுதான் காரணமாதலால் அந்த மனதை பரமனுக்கு அர்ப்பிப்பதால் சரீரமும், வாக்கும் அவனுக்கு ஸமர்ப்பிக்கப் பட்டவைகளாகின்றன. மனதை பரமனுக்கு அர்ப்பணம் செய்வதில் பிரயோஜனத்தைக்கொள்ளாத தர்மங்கள், சாஸ்த்ர பாண்டித்யம், ஜபம், தபம், உபாஸனை முலிய எல்லா ஸாதனங்களும் பாபத்திற்கே காரணமாகின்றன என்ற இவ்வுண்மை இந்த ஆத்மார்ப்பண ஸ்துதியால் வெளியாகிறது.

எந்த தீக்ஷிதேந்திரரின் கடாக்ஷத்திற்கு ஸரஸ்வதி தேவியே கூலியில்லா வேலைக்காரியோ, அம்மகாத்மாவின் அரிய காவ்யமான ஆதமார்ப்பண ஸ்துதிக்கு விருத்தி உரை எழுதுவது அதிஸாகஸமான கார்யமே யாகும். காமாதி மலங்களால் கலங்கி, ராகத்வேஷாதி துர்வாஸனையுடன் கூடி, அல்ப விஷய மார்க்கங்களைப் பற்றி ஓடும் சாக்கடைக்கு ஸமமான என்மனோவிருத்தியும், ஸாதுக்களால் ஸ்னான, பான, த்யானங்களுக்கு ஏற்கப்பட்டதும். கம்பீரமான கருத்துக்களாகிற ஆழத்துடன் கூடியதும், பரமனது அளவற்ற வற்றாத திவ்ய கல்யாண குணக்கூட்டங்களாகிற ஜலப்ரவாகத்துடன் கூடியதுமான பரம பவித்திரமான கங்கா நதிபோலுள்ள இந்த ஆத்மார்ப்பண ஸ்துதி ரூப சிவானந்த வெள்ளமாகிற அகண்டாகாரவிருத்தி ஞானத்துடன் கலந்து சிவானந்தமாக வேண்டியே, இவ்விருத்தியையும், பூஜ்ய பாத ஸ்ரீ சிவானந்த யதீச்வரரால் ஸம்ஸ்க்ருதத்திலருளப்பட்ட 'பால போதம்' என்ற வியாக்யானத்தை அநேகமாகத் தழுவி, பாலனுன நானும் எழுதத் துணிந்தேன்.

பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமான், கோகுலத்தில் கண்ணனுகத் தோன்றி, பாற்கடலிலேயே பாலில் முதக்கிறோம் இனி பால் வேண்டாமென்று நில்லாமல், தாயான யசோதை கோபிகள் இவர்களால் கூப்பிட்டுக் கொடுக்கப்பட்ட பாலையும் குடித்து, அதுவும் போதாமல் அவர்களுக்கும் தெரியாமல் சட்டி பானைகளை உடைத்து பாலை விரும்பியதுபோலவே, குருநாதராக விளங்கும் தீக்ஷிதேந்திரரும், இத்துதியால் போற்றப்படும் ஸாம்ப பரமேச்வரரும், பல புராதனக் கவிகள் இக்கிரந்தத்தின் மகிமையை விளக்கியிருந்தாலும், அதுபோதுமென்று கருதாமல், கிஞ்சிக்ஞனை என்னுடைய இந்த திராவிட விருத்தியுரையாலும் தட்டாயம் ஸந்தோஷப்படுவார் என்றே நம்புகிறேன்.

இந்த புத்தகத்திற்குத் தங்களுடைய திவ்ய ஸ்ரீமுகத்தை அருளி அனுக்ரகித்திருக்கும் ஸ்ரீபரஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய வர்ய காஞ்சி காம கோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களது திவ்ய ஸ்ரீபாத கமலங்களில் அனந்தகோடி நமஸ்காரங்கள் செய்து அடியேனது கிருதக்ஞதையை ஷை மகா ஸன்னிதானத்திற்கு அதி வினயத்துடன் தெரிவிக்கிறேன்.

இந்த விரிவுரைக்குத் தங்களுடைய முகவுரையை அருளி இதை அலங்கரித்த சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் (ரிடையர்ட்) ப்ரம்ம ஸ்ரீ என். சந்திர சேகர ஐயர் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறேன்.

இக்கிரந்தத்திற்குத் தங்களுடைய விரிவான முன்னுரையை அளித்து இதைக் சோபிக்கச் செய்த தர்ம பூஷண தர்மஸம்வர்த்தக, ஆஸ்திக சிகாமணி, தார்மிக ஸார்வ பௌம, பாரத புத்திர ராவ் ஸாகிப் பிரம்ம ஸ்ரீ ஆருபாதி என் நடேசய்யர் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கிறேன்.

இப்புத்தகத்திற்குத் தங்களது மதிப்புரைகளை அனுக்கிரகித்து இதை பிரகாசிக்கச் செய்த வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கத பிரம்ம ஸ்ரீகடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்களுக்கும் சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலை அத்யக்ஷரும் (பிரின்ஸிபால்) வியாகரண ஸாகித்ய மீமாம்ஸா சிரோமணி ப்ரம்ம ஸ்ரீ கே. பாலஸுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கும் என் நமஸ்காரத்தை வினயத்துடன் தெரிவிக்கிறேன்.

இவ்வண்ணம் அருமை பெருமை வாய்ந்த இந்த ஆத்மார்ப்பண ஸ்துதியை தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று நல்லுணர்வு சென்னை எழும்பூர் ஆஸ்திக ரத்னம், (இன்ஜினீர்) ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபால ஐயர் அவர்களுக் கேற்பட்டு **निमित्तमात्रं भवसव्यसाचिन्** என்றபடி, அடியேனை எழுதத் தூண்டி, அந்த பரம பாக்யத்தை அடியேனுக்கு அளித்த ஷை ஐயரவர்களுக்கு பரமனிடம் பிறழாத பக்தியும் சரீர ஆரோக்யமும் பொருட் செல்வத்துடன் அருட் செல்வமும் ஸாம்ப பரமேச்வரன் அருள்வாராக.

சொல்லுக் கடங்காத விக்னங்களுக்கிடையில் இந்த ஆத்மார்ப்பண ஸ்துதிக்கு விருத்தியை எழுத எவரது அருளால் இந்த அக்ஞனை எனக்கு சக்தி யேற்பட்டதோ, அந்த என்குருநாதராக விளங்கும் உமையாள்புரம் சாஸ்திரரத்னம் ப்ரம்ம ஸ்ரீ

வி. எஸ். ராமஞந்த சாஸ்திரிகள் அவர்களுடைய திவ்ய ஸ்ரீ சரணாரவிந்தங்களில் என் மனதாகிற தடாகத்திலிருந்து உதித்த இந்த ஆத்மார்ப்பண விருத்தி ரூபமான தாமரஸ புஷ்பத்தை அதிவினயத்துடன் ஸமர்ப்பிக்கிறேன். இம்மகானருளிய முன்னுரையையும் இத்துடன் பதித்துள்ளேன்.

இப்புத்தகத்தைக் கண்ணுறும் ஆஸ்திகர்கள், இதை முழுமையும் படித்து, குற்றங்களைப் புறக்கணித்து குணங்களை யேற்று, பரமனது பரிபூர்ண கிருபையின் மகிமையை அறிந்து, அதற்குப் பாத்திரர்களாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். நம் பாரத நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஸமஸ்த தாபங்களையும் ஒழிக்க பரமனது அருளை அடைவது ஒன்றே முக்யமான மருந்து. அப்பரமனது அருளைச் சுரக்க இவ்வாத்மார்ப்பண ஸ்துதியின் நித்ய பாராயணமே கை கண்ட முக்ய ஸாதனமானதால், ஆத்மானந்தப் பொக்கிஷத்தின் திறவுகோலான இக்கிரந்தத்தைத் தனது பூஜா கிருகத்தில் வைத்து மேலான கவசமாகக் கருதி, தங்களது இஷ்டங்களைப் பெறவும், அனிஷ்டங்களிலிருந்து விலகவும் தினமும் ஒருமுறையாவது பாராயணம் செய்யவேணுமாய் பாரத மக்களைப் பிரார்த்திக்கிறேன்,

मङ्गलं शाश्वतश्शम्भुः मङ्गलं मीनलोचना ।
श्रोतॄणां पठतां नित्यं माहात्म्यं मधुरापतेः ॥
शिवं भूयात् शिवं भूयात् शिवं भूयात् शिवाज्ञया ॥
ओं नमः परमऋषिभ्यः । ओं नमः परमऋषिभ्यः ॥

18, தேரடித் தெருவு,
மேல்மாம்பலம்
டி. நகர், சென்னை.
27—2—'48

கண்டமங்கலம்
மு. பாலஸுப்ரமணிய ஐயர்,

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 1 | देवदेव | परं देवदेव |
| 1 | 8 | பலதறப்பட்ட | பலதரப்பட்ட |
| 2 | 3 | याञ्छामि | वाञ्छामि |
| 2 | 10 | தேவர்கனின் | தேவர்களின் |
| 3 | 16 | செவிடாகமல் | செவிடாகாமல் |
| 4 | 1 | अवयबतां | अवयववतां |
| 4 | 16 | अधिष्टांतुं | अधिष्ठातुं |
| 6 | 4 | शंम्भुरिति | शम्भुरिति |
| 9 | 5 | जघनीभावं | च घनीभावं |
| 9 | 5 | कमषि | कमपि |
| 10 | 18 | मद्रबुद्धय: | मन्दबुद्धय: |
| 13 | 21-25 | पारमशीय्या | पारमशीय |
| 16 | 1 | ग्रन्भि | ग्रन्थि |
| 17 | 16 | ப்ரம்மாரந்திர | ப்ரம்மரந்திர |
| 26 | 5 | साकभेकत्र | साकमेकत्र |
| 26 | 6 | श्राभ्यन् | श्राम्यन् |
| 28 | 5 | किंबा | किंवा |
| 31 | 9-19 | निस्तृप: | निस्त्रप: |
| 38 | 16 | लोकगुरो | ऽखिलगुरो |
| 40 | 6-9 | இத்தீக்ஷா தேந்திராளும் | இத்தீக்ஷிதேந்திராளும் |
| 42 | 7 | सभर्पयायि | समर्पयामि |
| 44 | 12 | पूर्वेषमपि | पूर्वेषामपि |
| 45 | 13 | स्वपदशारणान् | स्वपदशरणान् |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 46 | 61 | वद्यमाना: | वध्यमाना: |
| 57 | 4 | வாஸ்தந்தான் | வாஸ்தவந்தான் |
| 59 | 3 | तत् அதை | एतत् இதை |
| 65 | 11 | घोरजन्म | घोरजन्म |
| 72 | 14 | न भविष्यति | भविष्यति |
| 76 | 10 | लभदे | लभते |
| 78 | 19 | असत्पदाश्रय | असत्पादाश्रय |
| 80 | 2-10 | दुर्व्यापारप्रणवं | दुर्व्यापारप्रवणं |
| 96 | 14 | भोक्तृता | सा भोक्तृता |
| 96 | 16 | भवेदैश्वर्यं | भवेदैश्वर्यं |
| 99 | 20 | ரதியும் ஸேவையும் | ரதியையும் ஸேவையை [யும் |
| 102 | 8 | அறிக்ஞர் | அபிக்ஞர் |
| 104 | 17 | கதறுதலே | கதறுதலேயுடைய घोषं சப்தத்தை |
| 105 | 2-3 | த்வந்தங்களில் | த்வந்த்வங்களில் |
| 105 | 9 | பாதாவிந்தம் | பாதாரவிந்தம் |
| 106 | 2 | अचलतनथा | अचलसुतया |
| 111 | 7 | பகவத்பாதள் | பகவத்பாதாள் |
| 111 | 24 | कत्वचरण | क तव चरण |
| 111 | 25 | घटमति | घटयति |
| 118 | 17 | प्रसिद्धं | पारसिद्धं |
| 120 | 20 | न तेषां | नैषां |
| 126 | 20 | नकिंचिन्मेने | नकिंचिन्मे |
| 128 | 1 | ஜிசைக்ஷ | ஸிசைக்ஷ |
| 130 | 21 | கரவாமாட்டை | கழுதையை |
| 135 | 17 | மலேகளே ! | மலேமகளே ! |
| 136 | 22 | दिशान्ती | दिशन्ती |

# ஸ்ரீ ஆத்மார்ப்பண ஸ்துதி.

कस्ते वोढुं प्रभवति देवदेव प्रभावं
यस्मादित्थं विविधरचना सृष्टिरेषाबभूव ।
भक्तिग्राह्य स्त्वमिह तदपि त्वामहं भक्तिमात्रात्
स्तोतुं वाञ्छामि अतिमहदिदं साहसं मे सहस्व ॥ १ ॥

பதவுரை:

(हे) देवदेव தேவர்களுக்கும் தேவனே!
एषा இந்த (ப்ரத்யக்ஷமாகக் காணப்படும்)
विविधरचना பலதரப்பட்ட வேலைப்பாடுள்ள
सृष्टिः (ப்ரபஞ்சத்தின்) உற்பத்தி
यस्मात् எவரிடமிருந்து बभूव உண்டாயிற்றோ
ते (அந்த) உம்முடைய
परं மேலான प्रभावं (ஞானம் ஐச்வர்யம் முதலிய) மஹிமையை इत्थं இவ்வளவுதானென்று
वोढुं (நிச்சயமாக) அறிய कः (தேவமனுஷ்யாதிகளுள்) எவன்தான்
प्रभवति ஸமர்த்தனாகிறான் (ஒருவருமில்லை)
तदपि அவ்வண்ணமிருந்தாலும் त्वं நீர்
भक्तिग्राह्यः (அனன்ய) பக்தியால் பிடிக்கத்தகுந்தவராக (அறியத்தகுந்தவராக) आसे இருக்கிறீர்

ततः அக்காரணத்தால் त्वां உம்மை अहं நான்
भक्तिमात्रात् பக்தியால் மட்டும் स्तोतुं துதிக்க
वाञ्छामि விரும்புகிறேன் मे என்னுடை
इदं இந்த आतिसाहसं மிகத்துணிச்சலான கார்யத்தை
सहस्व பொருப்பீராக

விரிவுரை :

பிரகாசிக்கின்ற காரணத்தால், இந்திரியங்களின் அதிஷ்டாதாக்களான, அக்னி, ஸூர்யன் முதலியவர்களுக்கு, தேவர்கள் என்று பெயர். அத்தேவர்களின் ப்ரகாசத்திற்கும் காரணமாவதால், பரமேச்வரனுக்கு தேவதேவன் எனப் பெயர். तस्य भासा सर्वमिदं विभाति "ப்ரகாசவடிவான பரமேச்வரனது ஜ்யோதியால், இந்த(எல்லா ஜகத்தும்)ப்ரகாசிக்கிறது" என்ற வேதவாக்கியமே இதற்குப் ப்ரமாணமாகும். எவருடைய சைதன்யஜ்யோதியால் ஸூர்யன் முதலிய தேவர்களுக்கு ப்ரகாசமேற்பட்டு, அவர்கள் மூலமாக கண்முதலிய இந்திரியங்களுக்கு, வஸ்துக்களைப் பார்ப்பதுமுதலிய கார்யங்களில் சக்தி ஏற்படுகிறதோ, அப்படிப்பட்ட இந்திரியங்களால, தங்கள் சக்திக்குக் காரணமான (கண்ணுக்குக் கண்ணையும் காதுக்குக் காதாயுமுள்ள) பரமனை அறியமுடியாது என்பது உண்மையே.

அப்பரமன், புலன்களுக்குப் புலப்படாததால் "அவரே இல்லையோ" என்று ஸந்தேகிக்கவேண்டாம். यस्मादित्थं विविधरचना सृष्टिरेषा बभूव நம்மால் காணப்படும் இவ்வுலகத்தைப்படைக்க ஆற்றலுள்ள ஸர்வசக்தியுள்ள, காரணமானபொருள், ப்ரத்யக்ஷமாகக் காணப்

படாவிடினும், கட்டாயம் இருக்கே தீரவேண்டுமென்று அனுமானிக்கப் படுகிறது. அப்பரம காரண வஸ்துவே தேவதேவன்.

சாஸ்திரார்த்தங்களை பலர் மெச்சும்படி சொற்பொழிவாற்றும் திறத்தாலும், புத்தியின் சாதுர்யத்தாலும், பன்முறை பரமனைப்பற்றிக் கேட்பதாலும் மட்டும் பரமன் அடையத்தகுந்தவனல்ல. அவனது ஸ்வரூப குணாதிசயங்களைக்கேட்டு, அவனை அடையாததால் மனமுருகி, ஏங்கி, கசிந்து அவனைத்தவிற மற்றவிஷயங்களில் வெறுப்புற்று அவனையேபரம புருஷார்த்தமாகக்கருதி, அவனையடைய உண்மையானதாகமேற்பட்டு, தவித்து எவன் முக்கரணங்களாலும் அவனையே வரிக்கிறானோ, அவனுக்கே பரமன் தனதுகருணையால், வாக்குக்கும் மனதிற்கு மெட்டாத தன்ஸ்வரூபத்தை அடைவிக்கிறான்.

அரிதான மானிடப்பிறவி பெற்றும், ஊமை கூன் குருடு செவிடாகமலிருந்தும், உம்மைப் புகழாத நாக்கு புண்ணாக்கே, உம் மங்கள மூர்த்தியைக் காணாத கண்கள் புண்களே, உம்மை ஆராதிக்காத கைகள் உலக்கைகளே. 'பணி செய்து கிடப்பதே என்கடன்' என்றபடி சாஸ்திர பாண்டித்யங்களிலுள்ள அபிமானத்தைஒழித்து, அப்பாண்டித்யத்தையும் பரமனது கைங்கர்யத்தில் விநியோகித்து நான் கடைத்தேரபரமனைவாயாராத்துதிக்க விரும்புகிறேன்.உமது அருளைக் கட்டாயம் அடைவேன் என்று தீர்மானித்துத் தொடங்கும் இச்சாகஸ காரியத்தைப் பொருத்து, இந்த ஆத்மார்ப்பணத்தில் மரணதாகங்கொண்ட எனக்கு உமது கருணைக்கடல் வெள்ளத்தால் தாகந்தீர்த்து சாந்தமாகிற உமது சிவஸ்வரூபத்தை அருள்வீராக,

क्षित्यादीनां अवयवतां निश्चितं जन्म तावत्
तन्नास्त्येव क्वचनकलितं कर्त्रधिष्ठानहीनम् ।
नाधिष्ठातुं प्रभवतिजडः नाप्यनीशश्चभावः
तस्मादाद्यः त्वमसि जगतां नाथजानेविधाता ॥ २ ॥

ப-உ. (हे) नाथ ஹே (ஜகன்) நாதனே !
अवयवतां அவயவங்களுடன் கூடின
क्षित्यादीनां பூமி (ஜலம்) முதலியவைகளுக்கு
तावत् அவ்வண்ணம் (அவயவங்களை உடையவைகளாக) இருப்பதால் जन्म உத்பத்தி (இருக்கே தீர வேண்டுமென்று) निश्चितं தீர்மானிக்கப்படுகிறது.
तत् அந்த (உத்பத்தியோ) क्वचन ஒரு பொழுதும் कर्त्रधिष्ठानहीनं நிமித்த உபாதானகாரணமின்றி कलितं செய்யப்பட்டதாக ना।स्ति एव இல்லவே இல்லை.
जडः அசேதன (ப்ரதானம்)
अधिष्ठांतुं நிமித்தகாரணமாக ஆக
नप्रभवति தகுதியற்றதாகும்
अनीशः பரதந்த்ரனை भावोपि (சேதன) பாவத்துடன் கூடிய ஜீவனும் (ஸமர்த்தனாகமாட்டான்)
तस्मात् ஆதலால் आद्यः (ஜகத் உத்பத்திக்கும்) முன்னமேயே யுள்ள त्वं एव நீரே.
जगतां (இந்த) உலகிற்கு विधाता நிர்மாதாவென்று जाने (நான்) அறிகிறேன்.

வி-உ கார்யமான தங்கக்காப்பிற்கு, நிமித்தகாரண மான தட்டானும்,உபாதானகாரணமான தங்கமும் இல்லா மல், உத்பத்தி காணப்படாதது போல், விஸ்தாரமானவிசித் திர வேலைப்பாடமைந்த இந்த ஜகத்திற்கும், நிமித்த உபா தான காரணமின்றி உற்பத்தி ஸம்பவிக்கமுடியாது.

**यावद्विकारन्तुविभागो लोकवत्** என்ற சாரீரக மீமாம்ஸா ஸூத்ரப்படி,ப்ரபஞ்சத்தின் அவயவங்களான பஞ்சபூதங் களுக்கு, நாமத்தாலும் ரூபத்தாலும் தங்களுக்குள்ளேயே பேதமிருப்பதால், அவைகளுக்கும் காரணமிருந்தே தீர வேண்டும். அவ்யக்த மென்ற முக்குணங்களின் ஸாம் யாவஸ்தைரூபமான ஸாங்கயர்கள் ஒப்புக்கொள்ளும் ப்ரதானமும், வைசேஷிகர்கள் ஒப்புக்கொள்ளும் அணு வும், ஜடமானவைகளாததால், அவை இப்பிரபஞ்சத்தின் நிமித்த காரணமாக இருக்க முடியாது. பாதந்திரனு யும், தன்னுடைய ஹிதத்தைச் செய்துகொள்ள சக்தி யற்ற ஜீவனும் பிரபஞ்ச நிர்மாதாவாகக் கருதப்படமுடி யாது. நியத தேசகாலப்ரவ்ருத்தியுடனும், கார்யகாரண வ்யவஸ்தையுடனும் கூடிய இந்த ஜகத்திற்கு "இயற்கை" (ஸ்வபாவம்) யும்காரணமாக மாட்டாது.

ஆகவே, ஸர்வஞ்ஞராய், ஆதிமூலமாய் உள்ள பரமேச் வரரான நீரே ஜகத்காரணமாக விளங்குகிறீர். ஜகத் தைப்பார்க்கும்போதெல்லம், இதற்குக் காரணமான உமதுஸ்வரூபத்தின் அறிவு ஏற்பட்டு, ஜகத்தாயிதைப் பார்க்காமல் இதற்குக் காரணமாயும், உள்ளும் புறமும் வியாபித்து, நிற்கும் உம்மை நான் பார்க்க அருளும்படி உம்மை வேண்டுகிறேன்.

इन्द्रंमित्रं वरुणमनिलं पद्मजं विष्णुमीशं
प्राहुस्ते परमशिव ते मायया मोहितास्त्वाम् ।
एतैः सार्धं सकलमपि यच्छक्तिलेशे समाप्तं
सत्वं देव श्रुतिषु विदितः शंभ्मुरित्यादिदेवः ॥ २ ॥

ப-உ. (हे) परमशिव பரம கல்யாண மூர்த்தியே!
ते உம்முடைய मायया மாயையால்
मोहिताः மோகத்தை யடைந்த
ते (ஜகத் உற்பத்தி காரணவாதிகளான) அவர்கள்
ईशं (ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம் அனுக்கிரகம்) என்ற பஞ்சக்ருத்ய ஸமர்த்தரான.
त्वां உம்மை (ஜகத்காரணமாக அறியாமல்)
इन्द्रं இந்திரனையும் मित्रं ஸூர்யனையும்
वरुणं வருணனையும் अनिलं வாயுவையும்
पद्मजं (விஷ்ணுவின் உந்திக் கமலமான) லோக பத்மத்தினுதித்த ப்ரம்மதேவனையும்
विष्णुं च விஷ்ணுவையும் (ஜகத்காரணமாக)
आहुः சொல்கிறார்கள்.
एतैः सार्धं இத்தேவர்களுடன் கூட सकलमपि ஸமஸ்த (ப்ரபஞ்ச)மும் यत् शक्तिलेशे எவருடைய (வாமஜ்யேஷ்டாதி) சக்திகளின் ஒரு பாகத்தின் ஏக தேசத்தில்.
समाप्तं முடிக்கப்பட்டதாக ஆகிறதோ,
सः அப்படிப்பட்ட மகிமைவாய்ந்த देवः (மகா) தேவனான त्वं நீர் श्रुतिषु வேதங்களில் शम्भुः சம்பு வென்றும் आदिदेवः முழு முதற் கடவுளென்றும் (தத்வதர்சிகளால்) विदितः அறியப்படுகிறீர்

வி-உ. மழைகாலத்தில்தான் பயிர்களும், வஸந்தகாலத்தில்தான் புஷ்பங்களும், ருது காலத்தில் தான் கர்பமும் உண்டாவதால், காலம் தான் ஜகத்காரணமென்று காலவாதிகளும், நெருப்புக்கு உஷ்ணம்போல், ஜலத்திற்குத் திரவத்தன்மைபோல், ஜகத்திற்கும், உத்பத்தி, ஸ்வபாவமென்றும் ஸ்வபாவவாதிகளும் கூறுகிறார்கள். உலகில் ஒருவன் தனிகன் மற்றவன் ஏழையாயிருப்பதால் யத்ருச்சைதான் காரணமென்றும், பஞ்சபூதங்களே ஜகத்திலிருப்பதால் அவைகளே காரணமென்றும், ஸாங்கயர்கள் ப்ரதானமென்றும், மீமாம்ஸகர்கள், கர்மங்கள் தான் ஜகத்காரணமென்றும் பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

எல்லாம் ஒருவாறுயுக்தியுடன் கூடியவைகளாகக் காணப்படுவதால், ஒன்றையும் தள்ளமுடியாததால் எல்லாம் கலந்து தான், காரணமென்றாலோ, காலம் முதலியவைகள் ஜடமானதால், சேதனனை ஜீவனுடன் ஒன்றுசேரமுடியாது. தன்னுடைய துக்கத்தைத்தான் பரிகரிக்கச் சக்தியற்ற ஜீவனும் ஜகத்காரணமாக முடியாது. பின்காரணம்யாது என்று கலங்கினவனுக்கு,

शिवात्सत्यपरानन्दप्रकाशैक स्वलक्षणात् ।
आविर्भूतमिदं सर्वं चेतनाऽचेतनात्मकम् ॥

'ஸத்யஞான ஆனந்த வடிவையே லக்ஷணமாகக் கொண்ட பரமேச்வரனிடமிருந்து ஜடசைதன்ய ரூபமான இந்த எல்லா ஜகத்தும் உண்டாயிற்று' என்று ஸூதஸம்ஹிதை கூறுகிறது. உண்மை இவ்வண்ணமிருக்க, இந்திரசந்திராதி தேவர்கள், ஜகத்தின் உத்

பத்திக்குக் காரணம் என்று கூறுவோர்கள், உமது மாயையால் மதிமயக்கமடைந்த வர்களென்று சொல்லு வது பொருத்தமேயாகும்.

उन्मेष निमिषोत्पन्न विपन्नभुवनावली இந்த 14அண்டங் களின் உத்பத்தியும் நாசமும் எவளுடைய கண்ணிமை யைத் திறப்பதாலும், மூடுவதாலும் ஏற்படுகிறதோ, அப் படிப்பட்ட காமேச்வரீ எவருடைய சக்தியோ, ஸர்வசக்த ரான அந்த பரமனின் மஹிமையை எவனே வர்ணித்து முடிக்க முடியும்?

உமது அதீந்திரியமான ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவதற்கு வேதாந்தசாஸ்திரமே ஸாதனமென்று பகவான் வியாஸாசாரியாள் शास्त्रयोनित्वात् என்றுதனதுப்ரம்ம ஸூத்திரத்திலும் கூறியுள்ளார் तं त्वां औपनिषदं पुरुषं पृच्छामि என்று "உபனிஷத்துக்களில்மட்டும் தேடி அடை யத்தகுந்தவர் நீர்" என்றுவேதமே உம்மைக்காணுமிடத் தைக் கூறுகிறது.

कारणं तु ध्येयः सर्वैश्वर्यसंपन्नः सर्वेश्वर शंम्भुः आकाशमध्यः।

பரமன் ஒருவரே இஜ்ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி, நாச காரணர். முமுக்ஷுக்களால் த்யானிக்கத்தகுந்தவர் அவரே. ஞான ஐச்வர்யங்களுடன் கூடியவரும், ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஈசனும் பரமானந்த ஸ்வரூபியான 'சம்பு' என்றபெயருடன் கூடியவரும் அவரே. ஸமஸ்த பிராணிகளின் ஹ்ருதயாகாசத்தில் (ப்ரம்மாண்டத்தின் ஹ்ருதயஸ்தானமான சிதம்பரக்ஷேத்திரத்தில்) ப்ரத்ய காத்மாவாய் (ஆனந்த தாண்டவசிவகாமி நடராஜ மூர்த்தி யாய், சிதம்பரரகஸ்யமாய்) அக்காரண வஸ்து விளங்கு

கிறார்" என்று அதர்வசிகா உபநிஷத்து உத்கோஷிக்கிறது.

அம்மகாமகிமைவாய்ந்த ஆதிமூலமான பரமன் என்னைத்தடுத்து ஆட்கொள்வாராக.

आनन्दाब्धेः कमपि जघनीभावमास्थायरूपं
शक्त्या सार्धं परममुमया शाश्वतं भोगमिच्छन् ।
अध्वातीते शुचिदिवसकृत्कोटिदीप्रे कपर्दिन्
आद्ये स्थाने विहरसि सदा सेव्यमानो गणेशैः ॥ ४ ॥

ப-உ. (हे) कपर्दिन् ஜடையைத்தாங்கிய பெருமானே!
आनन्दाब्धेः ஆனந்தஸமுத்திரத்தினுடைய
कमपि (வர்ணிக்கமுடியாத) ஒரு
घनीभावं रूपं திரண்டரூபத்தை
उमया உமாதேவியான शक्त्या सार्धं (தன்னைக் காட்டிலும் வேறுபடாத) பராசக்தியுடன் கூட आस्थाय அடைந்து शाश्वतं நிரந்தரமானதும் परं ஸர்வோத்க்ருஷ்டமானதுமான भोगं (உமாமகேச்வர தத்வோபாஸ்தசரூபமான) அனுபவத்தை इच्छन् விரும்பி अध्वातीते வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாததும் शुचिदिवसकृत्कोटि-दीप्रे ஆகாயத்தில் (ஒரே ஸமயத்தில்) கோடிஸூர்யர்களின் காந்திபோல் ப்ரகாசத்தை உடைய आद्ये स्थाने முழுமுதற் கடவுளான உம்முடைய சிவபுரத்தில் सदा எப்பொழுதும் शिवगणेशैः சிவகணங்களின் நாதர்களால் सेव्यमानः

ஆராதிக்கப்பட்டவராக विहरसि விளையாடுகிறீர் (அவ்விடத்தில் என்னையும் அழைத்துக்கொள்ளுங்கள் )

வி. உ. आनन्दंब्रह्म பரப்பிரம்மம் ஆனந்தவடிவு रसो वै सः அப்பரமன் ஆனந்தாப்ருதரஸஸ்வரூபனே. एषपरमानन्दः இந்த பரமனே பரமானந்தவஸ்து, என்று வேதங்கள் கூறுகிறபடி, ஆனந்தவடிவான அந்த நிஷ்கலப்ரம்மம் தன் பக்தர்களை அனுக்கிரகிக்க, தானே லீலையால் பல ரூபங்களை ஏற்கிறார் என்று சாஸ்த்ரங்களில் மிகப் பிரஸித்தம். பகவான் ப்ரம்மானந்த ஸ்வாமிகள்,

बहुशास्त्रमधीत्यापि गुरुकारुण्यवर्जिताः ।
शिवस्य मूर्तिवार्तामपि अहो जानन्तिनैवहि ॥

" பல சாஸ்த்ரங்களைக்கற்றும், குருநாதனருள் பெறாதவர்கள், பரமேச்வரனது கல்யாண ரூபங்களின் பெயரைக்கூட அறியவேமாட்டார்கள் " என்று கூறுகிறார். பகவான் பராசரரும்,

निष्कलेतु परेतत्वे निरालंबेनिरञ्जने ।
किं करोतिजन क्षुद्रः ततः तान् नित्यमाश्रयेत् ॥
ज्ञानावलंबनभ्रान्त्या मनुष्या मन्दबुद्धयः ।
मूर्त्युपेक्षां प्रकुर्वन्ति ज्ञानं तेषां नविद्यते ॥

"நிர்குணமாயும், புலன்களுக்கெட்டாததுமான பரம்பொருளிடம் மந்தபுத்தியுள்ள மனிதன் என்னசெய்ய முடியும்? சித்தபரிபக்வத்தைப் பெறாதவன் பரமனது மங்களமூர்த்திகளை உபாஸிக்கவேண்டும். தாங்கள் ஆத்ம

ஞானத்தைப் பெற்றுவிட்டதாக வ்ருதாபிமான மதி மயக்கத்தால் அஞ்ஞர்கள் பரமனது திவ்ய மங்கள மூர்த்திகளை வெறுக்கிறார்கள். அவர்கள் ஞான சூன்யர்களே.'' என்றார்.

ப்ரம்மாத்மைக்கிய ஸாக்ஷாத்கார ஞானத்திற்கு பரமனின் ப்ரஸாதம் இன்றியமையாதது. அப்பிரஸாதத்திற்கு, சித்தஸமாதானம் காரணம். அச்சித்தஸமாதானத்திற்கு பரமனது ஸகுண மூர்த்தி உபாஸனை இன்றியமையாதது. எவர்களுக்கு இம்மூர்த்தி உபாஸனை இல்லையோ அவர்களுக்குப் படிப்படியாகப் பெறத்தக்க ஆத்ம ஞான அநுபவம் ஏற்படாது என்பது திண்ணம்.

**उमा—उं परमाशिवं माति परिच्छिनत्ति** நிஷ்கலப்ரம்மத்தை ஸகலமாக்கி பக்தர்களுக்கு உபாஸனா விஷயமாக்குகிறவளே உமையாவாள். அவளே ப்ரணவஸ்வரூபிணி. ஸூதஸம்ஹிதையிதை விளக்குகிறது.

तस्मिन्नेव शिवः सांबः सर्ववस्त्ववभासकः ।

प्रतिबिंबितवान् तेन प्रणवः तस्यवाचकः ॥

"லோக, தேவ, வேத, வ்யாஹ்ருதிகளின் பரமஸாரமான ஓம்காரத்திலேயே ஸமஸ்தவஸ்துக்களையும் ப்ரகாசப்படுத்தும் ஸாம்ப பரமேச்வரன் (கண்ணாடியில் முகம் பிரதி பலிக்கிறதுபோல்) ப்ரதி பலிக்கிறதால், பிரணவமே (பெயரற்ற பரமனுன) அவருடைய பெயர்''.

**ओंकारो वै सर्वा वाक्** ஓங்காரமே எல்லா வாக்ஸ்வரூபமான சப்த ப்ரம்மம்.

உமையே ஓம்கார வடிவ சப்தபிரம்மம். பரமனே அர்த்தப்ரம்மம், உமை சக்தி-அச்சக்தியுடன் கூடியசக்தனே பரமேச்வரன். கதிரவனைவிட்டு அவனொளி எப்படிப் பிரியாதோ அப்படியே சிவனும் சக்தியும் எப்பொழுதும் பிரியாத சேர்க்கை உடையவர்.

அரசன், சதுரங்கம், வேட்டை முதலிய விளையாட்டை தனக்கென்று ஒருவிதலாபமுமின்றி செய்வதைப்போல், लोकवत्तु लीलाकैवल्यं என்ற பகவான் வ்யாஸாசார்யாளின் ப்ரம்மஸூத்ரப்படி, நித்ய திருப்தாளான இவ்வாதி தம்பதிகளும், மும்மூர்த்திகள், ப்ரம்மாண்டம் இவைகளைப் படைத்து அவைகளில் அந்தர்யாமியாக அனுப்பிரவேசித்து ஸேவ்யன், ஸேவகன், தூண்டுகிறவன் தூண்டப்படுகிறவன் என்ற தன்மையை லீலையால் ஸ்வீகரித்து, உலக விளையாட்டைப்பார்த்து உமா மகேச்வர ஸம்வாதரூபமாய், தத்வோபதேசம் செய்து, ஆன்மாக்களை உஜ்ஜீவிக்கச் செய்வதே இவர்களின் போகமாகும்.

எவ்விடத்திலிருந்துகொண்டு இவ்வாதி தம்பதிகள் விளையாட்டைப் பார்க்கிறார்கள்?

अध्वातीते—मन्त्राध्वा च पदाध्वा च वर्णाध्वाच भुवनाध्वकः ।

तत्वाध्वा च कलाध्वा च षडध्वान इमे मताः ॥

மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்வம், கலை என்ற ஆறுமார்க்கங்கள் சாஸ்த்ரங்களில் கூறப்படுகின்றன. மந்திரங்களை பதங்களிலும், பதங்களை வர்ணங்

களிலும், வர்ணங்களை (மாத்ருகைகளை) உலகங்களிலும், உலகங்களை ப்ருத்வீ முதலிய தத்வங்களிலும், தத்வங்களை கலைகளிலும், லயம் செய்து, கலைகளை ஜீவாத்மாவிலும், ஜீவாத்மாவை ஸத்யானந்த வடிவான பரமனிடம், சிவ யோகிகள் ஐக்கியம் செய்கிறார்கள். இந்த ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய ஸ்தானமே, அத்வாதீதமென்ற கோடி ஸூர்யப்ரகாசமான சிவபுரமாகும்.

அதிலோகத்தில், இதே ஹாலாஸ்ய (மதுரை) க்ஷேத்திரமாகும். இவ்விடத்தில் தான் ஸ்ரீ ஸோமஸுந்தர மூர்த்தி, ஜகன்மாதாவான ஸ்ரீமீனாக்ஷிதேவியுடன் 64 லீலைகளையியற்றி பக்தர்களை அனுக்கிரகித்திருக்கிறார். இதே த்வாத சாந்தக்ஷேத்ர மெனப்படும். அத்தியாத்மத்திலோ இந்த அத்வாதீதஸ்தானம் ப்ரம்ம ரந்திரமாகும்.

தேகத்திலுள்ள, மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற இவ்வாறு சக்ரங்களுக்கும் மேலேயுள்ள महापद्माटवीसंस्था—सहस्रदलपद्मस्था என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தில் கூறிய படி, ஆயிரம் தளங்களுள்ள தாமரைமலரில் வீற்றிருக்கும் சிவ சக்தியின் நித்தியவாஸஸ்தானமே அத்வாதீத மென்ற ப்ரம்மரந்த்ரஸ்தானமாகும். अध्वनां अध्वपते श्रेष्ठस्य अध्वनः पारमशीय "अध्वनां கர்ப்பாரக ஸம்ஸார மார்க்கங்களுக்கு, அல்லது அர்ச்சிராதி(உத்திராதி), தூமாதி (தக்ஷிணாதி) மார்க்கங்களுக்கும் अध्वपते மார்க்கபந்துவே! புனராவ்ருத்தியற்ற अध्वनः மார்க்கத்தினுடைய पारं அக்கரையை अशीय அடைவேனாகவும்" என்றபடி

**यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम** என்ற கீதாவாக்யப்படி புனராவ்ருத்தியற்றஸ்தானமே அத்வாதிதஸ்தானமாகும்.

அந்த பேரின்பஸ்தானத்தில் என்னையும் பரமன் ஏற்றுக் கொள்ளட்டும்

त्वं वेदान्तैः विविधमहिमा गीयसे विश्वनेतः
त्वं विप्राद्यैः वरदनिखिलैः इज्यसे कर्मभिः स्वैः ।
त्वं दृष्टानुश्रविक विषयानद्वमात्रावितृष्णैः
अन्तर्ग्रन्थि प्रविलयकृते चिन्त्यसे योगिवृन्दैः ॥ ५ ॥

ப. உ. (हे) **विश्वनेतः** பிரபஞ்சத்தை ஆட்டிவைப்பவனே!
**त्वं** நீர் **वेदान्तैः** உபனிஷத்துக்களால்
**विविधमहिमा** பலவித மாகாத்ம்ய முள்ளவராக
**गीयसे** கானம் செய்யப்படுகிறீர்
(हे) **वरद** இஷ்டங்களை அருள்பவரே **त्वं** நீர்
**विप्राद्यैः** ப்ராம்மணர்கள் முதலியவர்களால்
**निखिलैः** ஸமஸ்தமான **स्वैः** தங்களுடைய
**कर्मभिः** (வர்ணாச்ரம) தர்மங்களால்
**इज्यसे** ஆராதிக்கப்படுகிறீர் **त्वं** நீர்
**दृष्टानुश्रविकविषयानद्धमात्रावितृष्णैः** இகாமுத்ரார்த்த விஷயானந்த போகங்களில் சிறிதும் ஆசையற்ற **योगिवृन्दैः** (சிவ) யோகிகளின் கூட்டங்களால் **अन्तः** அந்தக்கரணத்தின் உள்ளேயுள்ள **ग्रन्थिप्रविलयकृते** (அஞ்ஞான) முடிச்சுக்களை நாசம் செய்யும்பொருட்டு **चिन्त्यसे** (ஹ்ருதயகமலத்தில்) தியானிக்கப்படுகிறீர்.

வி-உ 'यः मनसि तिष्ठन् मनसोन्तरः' என்ற அந்தர்யாமி ப்ராம்மண வேதவாக்கியப்படி, ஸர்வப்ராணிகளையும், அவர்களின் கர்மானுரூபமாக, அந்தர்யாமியாக இருந்து தூண்டுவதால், பரமேச்வரனுக்கு, விச்வனேதா எனப் பெயர்.

त्वं वेदान्तैः विविधमाहिमा— "द्वैतस्योपशमः शिवः— शान्तंशिवमद्वैतं—प्रणवं हीश्वरं विद्यात्" என்று முதலிய உபனிஷத்வாக்யங்களால், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மை, ப்ரணவ ஸ்வரூபமாயிருக்கும் தன்மை, சிவஸ்வரூபத்தன்மை இவைமுதலிய அனந்தமகிமைகள் பரமனுக்கு வெளியாகின்றன.

विप्राद्यैः इज्यसे—विशेषतः पापेभ्यः आत्मानं परं च पाति इतिविप्रः— தன்னையும், தன்னை நாடினவர்களையும் பாபங்களிலிருந்து விசேஷமாகக் காப்பாற்றுவதால் ப்ராம்மணர்களுக்குவிப்ரர்கள் 'எனப்பெயர். அவர்களால் ஆராதிக்கப் படுகிறீர். स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः "தன் வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்தால் பரமனை ஆராதித்து சித்தசுத்தியை மானிடன் பெறுகிறான்" என்ற கீதா வாக்கியமே இதற்குப்ரமாணமாகும்.

இவ்வுலகில் கண்கூடாக அனுபவிக்கக்கூடிய விஷய போகங்கள் த்ருஷ்டவிஷயம் என்றும், சாஸ்த்ராசார்யாள் மூலமாக அறியப்படும் ஸ்வர்காதி விஷய போகங்கள் ஆனுச்ரவிக விஷயம் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்விருவித விஷய போகங்களிலும் எள்ளளவும் ஆசையற்றவர்களை, சிவயோகிகள்,

**अन्तः ग्रन्थिमाविलयकृते — यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः। अथ मर्त्यो अमृतो भवति एतावदनुशासनम् ॥**

"எல்லா காமனைகளுக்கு மிருப்பிடமான அந்தக் கரண குகையிலுள்ள அவித்யாவாஸனாத்மக காமனு முடிச்சுகள் எல்லாம் எப்பொழுது அழிகின்றனவோ அப் பொழுதே ஜீவன் ஜனனமரண தர்மமற்ற ப்ரம்ம மாகிறான். இவ்வளவு வேதாந்த உபதேசமும் இதற் குத்தான்." **नातः परं किञ्चिदस्ति** "இதற்குமேல் சிறிது மில்லை" என்று கடோபனிஷத் கூறுகிறது. இந்த அவித்யாமுடிச்சுகளை ஒழிக்க பரமனின் த்யானமொன்றே பரம ஸாதனமென்று அறிந்து யோகிகள் அப்பரமனை த்யான யோகத்தால் ஸாக்ஷாத்கரிக்கிறார்கள்.

தேகத்திலுள்ள மூலாதாரம், அனாஹதம், ஆஞ்ஞை இந்த மூன்று ஸ்தானங்களிலும், முடிச்சுக்களுக்கு ஸம மான நாடிகளின் கூட்டமிருக்கின்றது.

मूलाधारांबुजारूढा ब्रह्मग्रन्थि विभेदिनी ।
मणिपूरान्तरकृता विष्णुग्रन्थि विभेदिनी ।
आज्ञाचक्रान्तरालस्था रुद्रग्रन्थि विभेदिनी ।

என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் கூறப்படுகின்றன. இடது நாசித்வாரத்திலுள்ள இடை என்ற நாடி மூலமாய் வாயுவை உள்ளே இழுத்து, வலதுநாசித்வாரத்திலுள்ள பிங்கலை என்ற நாடிமூலமாய் அவ்வாயுவை வெளியேறும் படி செய்யாமல், உருக்கின தங்கத்திற்கு ஒப்பான காந்தியுடன் மலர்ந்த தாமரைமலர்போல் விளங்கும் மூலா

தாரப் பிரதேசத்திற்கு அவ்வாயுவைக் கொண்டுவந்து, ஆங்கு குண்டலம்போல் ஸர்ப்பாகாரமாக விளங்கும் குண்டலினீ என்ற சக்தியால் வியாபித்திருக்கும், ஸுஷும்ந நாடியின் மூலமாக அதைப் பிரவேசிக்கச் செய்து ஸாதகனின் தாரணபலத்தால், அச்சக்தி மூலாதாரத்தைத் தாண்டி, அதற்குமேலுள்ள அனாஹதஸ்தானத்தை அடைந்து, மேலும் தாரண பலத்தால், அதற்கும் மேலுள்ள ஆஜ்ஞா சக்கிரத்தை (ஸ்தானத்தை) அடைந்து அதையும் தாண்டி அக்குண்டலினீ சக்தி, ப்ரம்மரந்திரத்தை அடைந்து, ஸாதகனுக்கு வாக்கிற்கும் மனதிற்கு மெட்டாது, அனுபவத்தால் மட்டும் அறியத்தகுந்த பரமானந்தஸுகத்தை அளிக்கிறது.

இம்மூன்று சக்கிரங்களுக்கும் (ஸ்தானங்களுக்கும்) ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரக்ரந்திகள் எனப்பெயர். இவைகளை ஸாதனத்தால் தாண்டி ஸுஷும்ந நாடியிலுள்ள குண்டலினீ சக்தியை ப்ரம்மரந்திர ஸ்தானத்தில் சேர்ப்பதே, சாக்தமதப்படி 'அந்தர் க்ரந்திப்ரவிலயம்' என்பதின் தாத்பர்யமாகும். இந்த ஸ்தானமே முன்ச்லோகத்தில் 'அத்வாதீதம்' என்றபதத்தாலும் கூறப்பட்டது.

இம்மூலாதாராதி ஸ்தானங்கள், த்யானாதி ஸாதனங்கள் முதலியவை, அதி ரகஸ்யமான விஷயங்களாதலால், குருநாதருடைய க்ருபையால்தான் உபதேசிக்கப் பெற்று அனுஷ்டிக்கத் தகுந்தன.

இப்படி முமுக்ஷுக்களால் தங்கள் ஹ்ருதயக் கிரந்திகளை ஒழிக்க இயான யோகத்தால் அந்தரங்கமாக ஆரா

நிக்கப்பட்ட பெருமானுன உமது மகிமையை நினைக்க நினைக்க என்னுள்ளம் பூரிக்கிறது.

ध्यायन्तस्त्वां कतिचन भवं दुस्तरं निस्तरन्ति
त्वत्पादाब्जं विधिवदितरे नित्यमाराधयन्त: ।
अन्ये वर्णाश्रमविधिरता: पालयन्तस्त्वदाज्ञां
सर्वं हित्वा भवजलनिधावेष मज्जामि घोरे ॥ ६ ॥

பதவுரை.

(हे) भगवन् ஈசனே कतिचन (புண்யாத்மாக்களான) சிலர் त्वां உம்மை ध्यायन्त: (மனதால்) த்யானம் செய்கிறவர்களாய்க் கொண்டு दुस्तरं கஷ்டப்பட்டுத்தாண்டக்கூடிய भवं ஸம்ஸார (ஸமுத்திரத்தை) निस्तरन्ति (ஸுலபமாகத்) தாண்டுகிறார்கள், इतरे மற்றும் சிலர் त्वत्पादाब्जं தாமரை மலர்களுக்கு ஒப்பான உமது திருவடியை विधिवत् சாஸ்திரங்களில் கூறியபடி नित्यं தினந்தோறும் आराधयन्त: பூஜிக்கிறவர்களாய் (பவஸாகரத்தைக் கடக்கிறார்கள்.) अन्ये மற்றும் சிலர் वर्णाश्रमविधिरता: வர்ணாச்ரமதர்மங்களில் பிரீதியுள்ளவர்களாக இருந்துகொண்டு त्वदाज्ञां (வேதசாஸ்திரங்கள் மூலமாகப் பிரகாசிக்கும்) உமது உத்திரவு ரூபமான கைங்கர்யத்தை पालयन्त: (ஒழுங்காக அனுஷ்டித்து) பரிபாலனம் செய்துகொண்டு (பவத்தைக் கடக்கிறார்கள்) एष: இந்த (நான்மட்டும்) सर्वं हित्वा (தாண்டுதற்கரிய ஸம்ஸார ஸமுத்திரத்தைக்கடக்க மேல் கூறப்பட்ட ஸாதனங்களான, சிவத்யானம், சிவலிங்கார்ச்சனம், வர்ணாச்ரம தர்மஸேவை) இவைகளை யெல்லாம்

(புத்திபூர்வமாகத்) துறந்து. घोरे பயங்கரமான भवजलनिधौ ஸம்ஸார ஸமுத்திரத்தில் मज्जामि முழுகி (அமிழ்ந்து) போகிறேன். (உமதுகருணையால் என்னை கை கொடுத்துத் தூக்கி கரையேற்றவும்).

வி. உ.

காமக்ரோதரூபமான திமிங்கிலங்கள், ஜனனமரண ரூபச்சுழல்கள், சப்தஸ்பர்சாதி விஷயங்களாகிற முதலை கள், அறிவு அஞ்ஞானமென்ற எல்லையற்றஜலம், இவைகளு டன்கூடிய ஸம்ஸாரம், இந்த ஸமுத்திரத்துடன் ஒப்பிடப் படுகிறது. இக்கடலை பவன் என்ற நாமத்துடன் விளங் கும், பரமனது அருளில்லாதவர்களால் தாண்ட முடியா தாதலால்,இச்சம்ஸாரத்தை பவஸாகாமென்றும் ஆன்றோ ர்கள் கூறுகிறார்கள். சிவத்யான யோகமாகிற கப்பலில் ஏறி யோகிகள் இதன் அக்கரையை அடைகிறார்கள்.

“शिव एको ध्येयश्शिवंकरः सर्वमन्यत्परित्यज्य” “இதர கார்யங்களை உதறித் தள்ளிவிட்டு, பரம கல்யாணங்களை அருளும் பரமேச்வரன் ஒருவரே, பேரின்பத்தை நாடு வோர்களால் தியானிக்கத் தகுந்தவர்' என்ற அதர்வண சிகா உபனிஷத் வாக்கியமே இதற்கு பிரமாணமாகும்.

इतरे ‘மற்றும் சிலர்’ என்பதால், சிவத்யானத்தில் மனம் நிலைகொள்ளாத, மத்யம அதிகாரிகள் குறிக்கப் படுகிறார்கள். अज्ञातशिवतत्त्वानां आकाराद्यर्चनं स्मृतम् । ‘சிவ தத்வத்தை அறியாதவர்களுக்கு அவரது மங்கள மூர்த் தியின் ஆராதனம் விதிக்கப்பட்டிருக்கிறது’ என்றபடி அவர்கள் உமது பாதாரவிந்தங்களை ஆராதிக்கின்றார்கள்,

अन्ये 'மற்றும் சிலர்' என்பதால், அவ்வாராதனையி லும் விக்ஷேபத்தை அடைந்தவர்கள் என்பதாகும். அவர்கள் கர்மயோகத்தை அநுஷ்டிக்கிறார்கள்.

பிறவிக்கடலில் விழுந்த இந்த நான்மட்டும், சிவத்யா னம், பக்தி, கர்மா இந்த ஸாதனங்களில் ஒன்றையும் பிடிப் பாகக் கொள்ளாமல் முழுகி வருந்துகிறேன். தாங்களே கைதூக்கிவிட்டு என்னை கரையேற்றி வைக்கவேண்டும்.

उत्पद्यापि स्मरहर महत्युत्तमानां कुलेऽस्मिन्
आस्वाद्य त्वन्महिमजलधेरप्यहं शीकराणून् ।
त्वत्पादार्चाविमुखहृदय श्चापलादिन्द्रियाणां
व्यग्रस्तुच्छेष्वहह जननं व्यर्थयाम्येष पापः ॥ ७ ॥

ப. உ. (हे) स्मरहर மன்மதனை சுட்டெரித்த மகாதே வனே. एषः पापः இந்தபாபியான நான். उत्तमानां (யாக யஞ்ஞாதிஸ்வதர்மாநுஷ்டானத்தால்சித்தப்ரஸாதம்பெற்று அதனால் பரமேச்வரனையே ஸர்வஸ்வமாகக் கருதும்) மிகவும் மேலான சிவயோகிகளுடைய. अस्मिन् இந்த. महति कुले (சிவஞானிகளை உண்டுபண்ணும்) மகாமகிமை யுடன் கூடியகுலத்தில். उत्पद्यापि (ஸ்ரீ ரங்கராஜாத்வர்யு வுக்கு) புத்திரனாக ப்பிறந்தும் त्वन्महिमजलधेः உம்மு டைய (எல்லையற்ற) மகிமையாகிற (ஆனந்த) ஸமுத்திரத் தினுடைய. शीकराणून् சிறிய திவிலைகளை आस्वाद्यापि ருசி பார்த்தும் (பாமனது ஆராதனமே திக்கற்றவர்களுக்கும் தாரகமென்று அறிந்தும்) इन्द्रियाणां (கண்காது முதலிய) இந்திரியங்களினுடைய. चापलात् (விஷயபோக) வாஞ்

சையால் तुच्छेषु அத்யல்பமான விஷயங்களில். व्यग्रः முயற்சியுடன் கூடினவனாக. त्वत्पादार्चाविमुखहृदयः உமது பாதாரவிந்த ஆராதனையில் மனம் செல்லாதவனாக. जननं (நல்குடிப்) பிறப்பை अहह ஐயோ கஷ்டம் व्यर्थयामि வீணாக்குகிறேன்.

வி.உ. கலி பிறந்து 4631, (கி.பி. 1554) பிரமாதி ஸம்வத்ஸரம், புரட்டாசி மாதம், கிருஷ்ணபக்ஷம், பிரதமை திதி, ஸோமவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய இச் சுபதினத்தில் ஆரணிக்கு அடுத்த அடையப்பலம் என்ற கிராமத்திற்கருகிலுள்ள விரிஞ்சிபுரம் என்ற கிராமத்தில், தனது மாமன் கிருகத்தில், ஸ்ரீரங்கராஜத்வர்யுவுக்கு அவரது தர்மபத்தினியிடம் ஸாம்ப பரமேச்வரனே ஸ்ரீகண்ட வித்யேச்வராளாகத் தனது திவ்ய அம்சத்துடன் ஸர்வலோக க்ஷேமத்தின் பொருட்டு புத்திரராக அவதரித்தார். இவர் தான் மகாமகிமைவாய்ந்த அப்பய்ய தீக்ஷிதராவர். சிவாகஸ்ய கண்டம் இவ்வவதாரத்தின் தத்வத்தை விளக்க பிரமாணமாகும்.

இத்தீக்ஷிதேந்திராள் அவதார புருஷரானதால், தான் அவாப்தஸமஸ்தகாமராக இருந்தாலும், ஆன்மாக்களை உஜ்ஜீவிக்கச்செய்வதே அவ்வவதாரத்தின் முக்ய பிரயோஜனமானதால், ஸ்ரீராமகிருஷ்ணாதி மற்ற அவதார புருஷர்களைப் போலவே, ஸ்வரூபத்தை இழந்த அஞ்ஞானிகளுக்கு, தானும் அவர்களில் ஒருவனாக இருந்து ஸம்ஸாரியைப் போலும், பக்தனைப்போலும் நடித்து அவர்களுக்கு நல் வழிகாட்டி, ஆத்மீய உணர்ச்சியை அன்யாபதேசரூபமாக ஊட்டுகிறார்.

அரிது மானிடப் பிறவி, அதிலும் அரிது புருஷப் பிறவி, அதிலு மரிது ஸுகத்திற்கு ச்சாதனமான மறைகளை ஓதும் மறையோனுகப் பிறப்பது, அதிலும் அரிது மனோன்மனனை மகாதேவனை மனத்துள் மதித்துக்களிக்குப் மகாத்மாக்களின் குலத்திலுதிப்பது, என்பதில் ஆக்ஷேபணை யில்லை. பூமியில் படுத்துக்கொண்டிருப்பவன் தவறி விழுந்தால் அவனுக்கு அடிகாயம் ஏற்படாது. மாடியில் படுத்தவன் தவறிவிழுந்தால் அவன் தான் வருந்தத்தக்கவன். அப்படியே, தியாகபூமி, யோக பூமி, தர்மபூமியான, இப்பாரதப்பொன்னாட்டில், பரத்வாஜ வசிஷ்டவாமதேவாதி மகாரிஷிகளின் ஸந்ததியில்உதித்தும், தியாகத்தையே உரமாகவும், சுயநலமற்றத் தொண்டையே நீராகவும், உடல் பொருள் ஆவி, இவைகளையே வேலியாகவும் செய்து முன்னோர்களால் வளர்க்கப்பட்டு, தர்மம் அர்த்தம், காமம் மோக்ஷமென்ற பலன்களை அருளும் கல்பகதருவுக்கும் மேலான வேத விருக்ஷத்தை, மேல் கூறப்பட்ட உரம், நீர் இவைகளை வார்க்காமல் வாடிப் பட்டுப்போகும்படி செய்து, அந்த இடத்தில் பச்சைப்பசேரென இலைகளடர்ந்து சிவப்பான புஷ்பங்களுடன் கூடி மேல் தோற்றத்தால் ரமணீயமாகவும், ஒருவித பழத்தையும் கொடுக்காததானக் கிம்சுக (கோழியாவிரை) மரத்தை நடுவதற்கு ஸமமாக, அம்மகான்களால் அனுஷ்டித்துக் காட்டப்பட்ட ஸன்மார்க்கங்களி லிருந்து விலகியது மட்டுமில்லாமல், நவீன நாகரீகப் பேயின்கீழ் அடிமைகளாகி, நம்முன்னோர்கள் அவர்களின் முறைகள் இவைகளையும் வெறுத்து, கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்றபடி, குறுகிய நோக்கம், குதர்க்கம், காமம்

குரோதம், மாயை, முதலிய ஆஸுரஸம்பத்தைப் பெற்று பரம புருஷார்த்தமான பேரின்பத்திலிருந்து மேலும் விலகுகிறோம். இதுதான் மாடியிலிருந்து விழுந்தவன் கதியாகிறது—மனிதத்தன்மையை துர்விநியோகம் செய்து மிருகத்தன்மையை விலைகொடுத்துப் பெறுவதாகும்.

பரமனை வழிபடாத நாட்கள் பிறவாநாட்களே. சிவனுக்குப்பணிசெய்யாத சரீரமும் சவமேயாகும். ஆகவே பரமனே என்னை உமது தொண்டில் மனம் பதிந்தவனாகச் செய்யுங்கள்.

अर्कद्रोणप्रभृतिकुसुमैरर्चनं ते विधेयं
प्राप्यं तेन स्मरहर फलं मोक्षसाम्राज्यलक्ष्मीः ।
एतज्जानन्नपिशिव शिव व्यर्थयन्कालमात्मन्
आत्मद्रोही करणविवशो भूयसाधः पतामि ॥ ८ ॥

ப. உ. (हे) स्मरहर காமனை ஒழித்த பரமனே ते உமக்கு. अर्चनं ஆராதனம் अर्कद्रोणप्रभृतिकुसुमैः எருக்கு தும்பை முதலிய புஷ்பங்களால். विधेयं செய்யத் தகுந்தது என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருக்கிறது. तेन அந்த ஆராதனத்தால். मोक्षसाम्राज्यलक्ष्मीः மோக்ஷஸாம்ராஜ்யமென்ற ஐச்வர்யம். फलं பிரயோஜனமாக. प्राप्यं அடையத்தகுந்தது. शिवशिव சிவசிவ. आत्मन् ப்ரத்யகாத்ம ஸ்வரூபனே. एतत् இந்த (மோக்ஷஸாம்ராஜ்ய லக்ஷ்மியை அடையக்கூடிய மிகச்சுலபமான)ஸாதனத்தை जानन् अपि அறிந்திருந்தும். कालं (என்) வாழ்நாளை, करणविवशः புலன்களுக்குப் பராதீனனாய். व्यर्थयन् வீணாக்கிக்கொண்டு आत्मद्रोही தனக்குத்தானே சத்துருவாக.

**भूयसा** மேலும். **अधः पतामि** (நரகக்) குழியில் விழுகிறேன்.

வி. உ. சிவகீதையில்:—

चन्दनं बिल्वकाष्ठस्य पुष्पाणिवनजान्यपि।
दुष्करं तस्य सेवायां किमस्ति भुवनत्रये॥
तं त्यक्त्वा तादृशं देवं यस्सेवेतान्यदेवताः।
सतु भागीरथीं त्यक्त्वा कांक्षते मृगतृष्णिकाम्॥

"வில்வக்கட்டையிலிருந்து அரைக்கப்பட்ட சந்தனமும், வனத்தில் உத்பத்தியாகும் புஷ்பங்களும், பழங்களும் எவனது பிரீதிக்குப்போதுமோ, அப்பரமனது ஆராதனத்தில் மூவ்வுலகிலும் கஷ்டமேதாவதுண்டா? அவ்வளவு ஸௌலப்யத்துடன் கூடிய மகாதேவனைப் புறக்கணித்து மற்ற தேவர்களை ஆராதிக்கிறவன், தாகத்தை ஒழிக்க கங்காதீர்த்தத்தை பொருட்படுத்தாது கானலில் தோன்றும் நீரைநாடுபவனுக்கு ஒப்பானவனே." என்றார்.

எருக்கு முதலிய புஷ்பங்களைப் பரமனது அர்ச்சனைக்கு விதித்திருப்பதால், சம்பகம், ரோஜா முதலிய புஷபங்களைச் சேகரிப்பதிலுள்ள தேகச்ரமமும், பணச்சிலவும் நீக்கப்பட்டவைகளாக ஆகின்றன. பணச்சிலவில்லாமல் இலவசமாகக் கிடைக்கும் புஷ்பார்ச்சனத்தால் அடையப்படும் லாபமும், அற்பமென்று கருதக்கூடாது. மிகவும் மேலான ஆத்மஸாம்ராஜ்ய லாபத்தை இச்சிவார்ச்சனம் பிரயோஜனமாக உடையது என்றும் கூறும் சாஸ்த்ரங்களே இதற்கு பிரமாணம். நிஷ்கர்ம பூஜைக்கு முக்தி

B 6303
R65 (வஜ)



யும், ஸகாமனு பூஜைக்கு இகலோக பரலோகஸுக போகங்களும் சிவபூஜையின் பலன்களென்பதில் ஆக்ஷேபணையில்லை.

**एतावन्तंकाल** இவ்வளவு மேலான லாபத்தைப்பெற, அதிகஸுலபமான சிவபூஜை ஸாதனமாயிருந்தும், அதை அறிந்தும், அனுஷ்டிக்காமல், எத்தனையோ ஜன்மங்களெடுத்தும் அவை இதுவரையில் வீணாயிற்றே என்று வருந்துகிறேன்.

'சரீரமான ரதத்தை சிவபுரமான பேரின்பவீட்டை நோக்கிச் செல்லும் பரமசிவ ஆராதன ரூபமான மார்க்கத்தை விட்டு விலகி, சப்தாதிவிஷயங்களாகிற மார்க்கங்களில் ஓடும் இந்திரியங்களாகிற குதிரைகளை, மனதாகிற கடிவாளத்தால் நன்கு பிடித்து இழுத்துத் திருப்பி ஓட்ட சக்தியற்று, புத்தியான ஸாரதி அவ்விஷய மார்க்கங்களில் அவைகளைச் சென்றபடியே செலுத்தி, தன்னையும், ரதமான சரீரத்தையும், உள்ளேயுள்ள ஜீவாத்மாவாகிற ரதிகனையும் ஜனனமரணாதிப் பிணிகளுக்கு இருப்பிடமான ஸம்ஸாரக்குழியில் வீழ்த்துகிறான்." எனக்கூறும் கடோபனிஷத் வாக்கியப்படி, அஜிதேந்திரியனான நானும் தனக்குத்தானே சத்ருவாயிருக்கிறேன். சிவார்ச்சனத்தின் பரமலாபத்தை அறிந்தும், அதைப் புறக்கணித்து, மூடர்கள் வீடு, காணி, சொத்துக்கள் எல்லாவற்றையும் கிடைத்தவிலைக்கு விற்று சூதாட்டத்தில் அழிப்பதற்கு ச்சமமாக, அரிய மானிடப்பிறவி, விவேகம் இவைகளைச் சிற்றின்பங்களான அற்ப ஸுகத்திற்கு அற்பித்து நானும் அதோகதியை அடைந்திருக்கிறேன்.

தீனபந்துவான பரமனே தாங்கள் என்னை கைதூக்கிக் காக்கவேண்டும்.

किंवा कुर्वे विषमविषयस्वैरिणा वैरिणाहं
बद्ध स्वामिन् वपुषि हृदयग्रन्थिना सार्धमस्मिन् ।
उक्ष्णा दर्पज्वरभरजुषा साकमेकत्रनद्ध :
श्राम्यन्वत्सः स्मरहर युगे धावताकिं करोतु ॥ ९ ॥

ப.உ.(हे) स्वामिन् நாதனே. अहं நான். विषमविषयस्वैरिणा துக்காஸ்பதமான (சப்தாதி) விஷயங்களில் பலாத்காரமாகத் தள்ளும். वैरिणा சத்துருவான. हृदयग्रन्थिना सार्धं மனதிலுள்ள (அவித்யாகாம கர்மவாஸனாரூப) முடிச்சுடன்கூட. अस्मिन् இந்த वपुषि சரீரத்தில். स्वामिना யஜமானனை. त्वया உம்மால். बद्धः கட்டப்பட்டவனாய் किंवाकुर्वे என்னதான் செய்வேன் (எவ்வித உபாயத்தை கையாண்டும் கட்டை அவிழ்க்க சக்தியில்லை) स्मरहर காமனை யெரித்த பரமனே! दर्पज्वरभरजुषा கொழுப்பின் தாபத்தின் ஆதிக்கத்துடன்கூட. धावता ஓடும். उक्ष्णासाकं (வெறிபிடித்த) காளையுடன்கூட. एकत्र युगे ஒரே நுகத்தடியில். नद्धः நன்கு புணைக்கப்பட்டு. श्राम्यन् களைப்புற்ற. वत्सः (ஒரு வயது) கன்று. किंकरोतु என்னசெய்ய முடியும். (ஒன்றும் செய்ய இயலாமல் இறந்துவிடும்.)

वैरिणा வெளியில் சத்துருக்களில்லை. காமக்ரோதாதி ரூபங்களாகிய சத்துருக்கள் உள்ளே மனதில் குடியேறி வளர்க்கப்படுகிறார்கள். மிகவும் ஸூக்ஷ்மமாகவாஸனாரூபமாக மனதின் உள்ளே யிருக்கும் காமம், கோபம் இவைக

ளின் ஸம்பந்தத்தை பெற்றவெளியிலுள்ள வஸ்துக்களும், நமக்கு காமத்தையும் க்ரோதத்தையும் பெருக்கி பலாத்காரமாக அவ்வஸ்துக்களில் ஆசையையோ, வெறுப்பையோ உண்டுபண்ணுகின்றன. வஸ்துக்களில் விருப்புக்கும், வெறுப்புக்கும் மனதிலுள்ள காமக்ரோதங்களே நிமித்தகாரணமாக இருப்பதால், விருப்பும் வெறுப்பும் மனோதர்மங்களே, வஸ்து ஸ்வபாவங்களல்ல. ஆகவே ஞானிகள், பாமரர்களால் உடல்பொருள் ஆவி இவைகளை அர்ப்பித்துப் பெறப்படும் பெண், பொன், மண் முதலிய வஸ்துக்களில் காமனையற்று, பரமனையே நாடுகிறார்கள் என்பதும் பொருத்தமே.

துக்கங்களுக்கு இருப்பிடமான சப்தாதி விஷயங்களில் பலாத்காரமாக இழுத்துச்செல்லும், தனக்கு சத்ருவானராகத்வேஷாதிவாஸனை பலத்துடன் கொழுத்து மதயானைபோல் விளங்கும் மனதாகிற காளையுடன், இச்சரீரமாகிற ஓரே நுகத்தடியில், அசக்தனான பசுவின்கன்றுக்கு ஸமமான நான், பசுபதியான உம்மால் பிணைக்கப்பட்டு அக்காளையுடன் தொடர்ந்து இழுத்துச்செல்ல முடியாமல் விழுந்து களைப்படைகிறேன்.

पाशो यदि मोक्तव्यः पशुपतिरेवानुसर्तव्यः ।

'கட்டான, அடிமைப்பிணி விலகி, விடுதலையைப் பெறவேண்டுமாயின், அதற்கு ஸாதனம், பசுபதிக்குப்பணி செய்வதே' என்றபடி பசுப்பிராயமாய், காமாதிகுணங்களுக்குப் பரதந்திரனான என்னை, பெண்ணாசை, பொன்னாசை மண்ணாசை என்ற பாசங்களால் கட்டவும், அக்கட்டிலிருந்து விடுவிக்கவும், காமனை எரித்த ஸ்வதந்திரனான

உம்மாலேயே முடியுமானதால் தீனனான எனக்கு விடுதலையை அருளும்.

नाहं रोद्धुं करणनिचयं दुर्नयं पारयामि
स्मारं स्मारं जनिपथरुजं नाथ सीदामि भीत्या ।
किं वा कुर्वे किमुचितमिह क्वाद्य गच्छामि हन्त
त्वत्पादाब्जप्रपदनमृते नैव पश्याम्युपायम् ॥ ॥१०॥

ப. உ. (हे) नाथ ஸ்வாமியே! अहं நான், दुर्नयं கஷ்டப்பட்டு அடக்கதகுந்த. करणनिचयं இந்திரியங்களின் கூட்டத்தை. रोद्धुं (கெட்டவிஷய ஸேவையிலிருந்து) தடுக்க. न पारयामि சக்தியற்றவனாயிருக்கிறேன். जनिपथरुजं ஜனன மரண மார்க்கத்தில் உள்ள துக்கத்தை. स्मारं स्मारं நினைத்து நினைத்து. सीदामि நடுங்குகிறேன். किंवा कुर्वे (இக்கஷ்டத்தை ஒழிக்க) என்னதான் செய்வேன் क्व गच्छामि எங்கு செல்வேன். किमिह उचितं இப்பொழுது எந்த உபாயம் செய்யத்தகுந்தது (என்பதையும் அறியேன்) हन्त கஷ்டம் (ஒன்றும் தோன்றவில்லையே) त्वत्पदाब्जप्रपदनमृते உமது தாமரைமலர்போல் ஸுகுமாரமான பாதங்களில் ஸாஷ்டாங்கமாக விழுந்து சரண் புகுவதைத் தவிற. अन्यं வேறு उपायं ஸாதனத்தை. नपश्यामि நான் காணவில்லை.

வி. உ. நதியில் ஒரு சுழலிலிருந்து மற்றொரு சுழலுக்கு அடித்துச் செல்லப்படும் புழுவைப்போல் ஜீவனும் ஜனன மரண ரூபச்சுழலில் அகப்பட்டு வருந்துகிறான்.

கர்பத்திலுள்ள சிசு ஒன்பதாவது மாதத்தில் பகவானது அருளால் பூர்வஜன்ம ஸ்மரணையைப்பெற்று

கதறுவதை கர்ப்போபனிஷத் கூறுகிறது — "ஆயிரக்கணக்கான யோனிகளை நான் அடைந்தேன். அந்தந்தயோனிகளுக்குகந்த பல்வேறு ஆகாரங்களும் என்னால் புசிக்கப்பட்டன. பிறந்தேன் இறந்தேன். இதைவிட்டுக் கரையேறும் வழியை அறியவில்லை. கர்ப்பத்திலிருந்து வெளிவந்தால் துக்கநிவர்த்திக்குக் காரணமான பரமேச்வரனையே சரணமடைவேன்" என்றபடி கஷ்டமான கர்ப்பவாஸத்தை நினைத்து நானும் நடுங்கி உம்மையே சரணமடைகிறேன்.

திக்கற்றவர்களுக்கு உம்மைத்தஞ்சமென்று அடைவதைத்தவிர வேறு உபாயமில்லாததால், உம்மைத் தஞ்சமென்றடைந்த இந்த ஏழையையும் ஏற்றுக் கொள்ளும்படியாசிக்கிறேன்.

उलंघ्याज्ञामुडुपतिकलाचूड ते विश्ववन्द्य
त्यक्ताचारः पशुवदधुना मुक्तलज्ज श्चरामि ।
एवं नानाविध भवततिप्राप्तदीर्घापराधः
क्लेशांभोधिं कथमहमृते त्वत्प्रसादात्तरेयम् ॥ ॥ ११ ॥

ப.உ. (हे) विश्ववन्द्य ஸகலலோகவாஸிகளாலும் வணங்கப்பட்டவரே! हे उडुपतिकलाचूड நக்ஷத்திரங்களுக்கு நாயகமான சந்திரனது (நான்காவது) கலையை ஜடைக்கும் மகுடத்திற்கும் ஸந்தியில் இடது பக்கத்தில் ஆபரணமாகக் கொண்டவரே! ते உம்முடைய आज्ञां (ச்ருதிஸ்ம்ருதிகளில் கூறப்பட்ட வர்ணாச்ரம தர்மங்கள் ரூபமான) உத்திரவை उलंघ्य அதிக்கிரமித்து त्यक्ताचारः (புத்திபூர்வமாக) ஸதாசாரங்களைத்துறந்தவனாய் पशुवत् நாற்கால் பிராணி

யைப்போல் अधुना இப்பொழுது मुक्तलज्जः வெட்கத்தை விட்டவனாக चरामि நடக்கிறேன் एवं இப்படி नानाविध भवतति प्रासदीर्घापराधः பலதரப்பட்ட விஸ்தாரமான ஸம்ஸாரத்தை அடைந்து வெகுகாலம் குற்றங்களையே செய்து வரும் अहं நான் क्लेशांभोधिं அவித்யை முதலிய துக்கங்கள் நிறைந்த ஸமுத்ரத்தை त्वत्प्रसादादृते உமது அனுக்ரகமின்றி कथं எவ்வண்ணம் तरेयं தாண்டக்கூடும் (ஆகவே நீரே எனக்கு அருள்புரிய வேண்டும்)

வி. உ. विश्ववन्द्य மும்மூர்த்திகளாலும், இந்திராதி தேவர்களாலும் எல்லோராலும் நீர் பூஜிக்கத்தகுந்தவராயிருக்க அல்பனான நான் மட்டும் உமது ஆராதனத்தை மறந்தது எனது தெளர்பாக்யமே யாகும்.

उडुपतिकलाचूड சந்திரனிடமுள்ள தோஷத்தைப் புறக்கணித்து அவனுடைய குணமான அம்ருதகிரணங்களை உலகத்திற்கருள அதையே சிரஸில் தரிக்கும் பக்த பக்ஷபாதியான பெருமானான நீர், என் தோஷங்களையும் புறக்கணிக்க வேண்டும்.

पशुवत् मुक्तलज्जः வயல்களில் நுழைந்து பயிர்களை பக்ஷித்து அழிக்கும் கொண்டிமாட்டை காவல்காரன் பிடித்து அடித்து செக்கில்புணைத்து சூடுபோட்டு ஹிம்ஸித்தாலும், அம்மாடு தன் கஷ்டங்களுக்குக்காரணம் யாது அப்பீடையிலிருந்து விலக உபாயம் யாது என்று கொஞ்சமும் கருதாமல், தடியடிகளைப் பெற்றுக்கொண்டும் சொரணையற்று, மறுபடியும் கொண்டிமேயவே போகிறது போல், அஞ்ஞனான நானும் ஸம்ஸார கஷ்டங்களை அனுபவித்தும் சிவபிரஸாத ரூபமான அதன் பரிகாரத்தைத்

தேடாமல், மேலும் துக்கங்களுக்குகாரணமான விஷயங்களிலேயே லம்படனுயிருக்கிறேன்.

**दीर्घापराध:** நான் பலகாலமாய் அபராதங்களைச்செய்து அவைகளையே சொத்தாக உடையவன், அப்படிப்பட்ட எனக்கு உமது கருணையாலன்றி வேறு கதி யேது!

क्षाम्यस्येव त्वमिह करुणासागरः कृत्स्नमागः
संसारोत्थं गिरिश सभयप्रार्थनादैन्यमात्रात् ।
यद्यप्येवं प्रतिकलमहं व्यक्तमागस्सहस्रं
कुर्वन्मूकः कथमिव तथा निस्त्रपः प्रार्थयेयम् ॥ ॥ १२ ॥

ப. உ. (हे) **गिरिश** கைலாஸபதே! **करुणासागर:** க்ருபா ஸமுத்ரமான **त्वं** நீர் **सभयप्रार्थनादैन्यमात्रात्** பயத்துடன் தீனபாவத்தைத் தெரிவித்து (மன்னிப்புக்காக) கெஞ்சும் வார்த்தைகளால்மட்டும் **संसारोत्थं** (ராகத்வேஷநிமித்தங்களால்) வாழ்க்கையில் ஸம்பவித்த **कृत्स्नं आग:** ஸமஸ்த அபராதத்தையும் **क्षमस्येव** கட்டாயம் பொருத்தருள்கின்றீர். **एवं यद्यपि** இவ்வண்ணமிருந்தாலும் **अहं** நான் **प्रतिकलं** ஒவ்வொரு க்ஷணத்திலும் **आग: सहस्रं** ஆயிரக்கணக்கான அபராதத்தை **व्यक्तं** தெரிந்து **कुर्वन्** செய்து கொண்டு **मूक:** வாயில்லாதவனும் **निस्त्रप:** வெட்கமற்றவனும் **कथं** எப்படி **प्रार्थयेयं** விஞ்ஞாபனம் செய்ய முடியும்.

வி. உ. அறியாத்தன்மையால் கோடிக்கணக்கான அபராதங்களைச் செய்து, பரமனின் முன்னிலையில் மன்னிப்புக்காகக் கெஞ்சலாம். அவரும் தனது க்ருபாவெள்ளத்தால்

குற்றங்களை மன்னிக்கிருர். மறுபடியும் தெரிந்தும் அந்தக் குற்றங்களையே செய்தால், மன்னிப்புக்கு வாய்வது? ஊமை யைப்போலாகவேண்டும். முதல்முறை குற்றங்களுக்கு மன்னிப்புக் கொடுத்தவனிடம், மறுபடியும் அதே குற்றங் களைச்செய்து மன்னிப்புக்கு நிற்பது வெட்கமில்லையா? மானமுள்ளவனுகில் மறுபடியும் குற்றம்செய்ய மாட்டான் வெட்கமற்றதால் மறுபடியும், குற்றத்தில் ப்ரவ்ருத்தி யுள்ளதால் எவ்விதம் பரமனிடம் க்ஷமாபணப் ப்ரார்த்த னம் ஸம்பவிக்கும்?

ஆகவே, கருணமூர்த்தியே! இந்த வெட்கமற்ற பாபியான எனக்கும் அருள்புரிவீராக.

सर्वं क्षेप्तुं प्रभवतिजन स्संसृतिप्राप्तमागः
चेतश्वासप्रशमसमये त्वत्पदाब्जे निधाय ।
तस्मिन्काले यदि मम मनो नाथ दोषत्रयार्तं
प्रज्ञाहीनं पुरहर भवेत्तत्कथं मे घटेत ॥ १३ ॥

ப. உ.

(हे) नाथ பரமேச்வரனே! जनः ஜீவன் श्वासप्रशमसमये மூச்சு அடங்கும் ஸமயத்தில் चेतः (சஞ்சலஸ்வபாவமான) மனதை त्वत्पदाब्जे உமது பாத கமலத்தில் निधाय ஸமர் பித்து संसृतिप्राप्तं ஸம்ஸாரத்தில் அடைந்த सर्वंमागः எல்லாபாவத்தையும் क्षेप्तुं போக்கடிக்க प्रभवति ஸமர்த்த ஞகிருன். तस्मिन्काले அந்த (ப்ராணேத்க்ரமணகாலத்தில்) दोषत्रयार्तं மூன்றுவித தோஷங்களால் பீடிக்கப்பட்ட मेमनः என்னுடைய மனது प्रज्ञाहीनं ப்ரஞ்ஞையற்றதா

**भवेत् यदि** ஆகுமேயாகில், **तत्** (உம்முடைய பாதாரவிந்தத்தில் மனதை ஸமர்ப்பிப்பதான) அது **मे** எனக்கு **कथं** எவ்வண்ணம் **घटेत** ஸம்பவிக்கும்? (ஒருபொழுதுமேற்படாதல்லவா!)

வி. உ.

अन्तकाले च मामेव स्मरन् मुकत्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥

" ப்ராணோத்க்ரமண காலத்தில் பரமேச்வரனை என்னையே நினைத்துக்கொண்டு எவன் சரீரத்தை விட்டுச் செல்கிறானோ அவன் என் ஸ்வரூபத்தை அடைகிறான். இதில் ஸந்தேகமேயில்லை " என்ற கீதாவாக்கியமே இதற்கு பிரமாணம். கோடி அபராதம் செய்தவனாயினும், மரண காலத்தில் பரமனை சரண்புகுவோன் அவரால் ரக்ஷிக்கப் படுகிறான் என்பதில் ஐயமில்லை.

**दोषत्रयार्त मनः** மரணகாலத்தில் மனது ஸ்வாதீனமற்று பகவத் ஸ்மரணத்தைச் செய்ய சக்தியற்று, ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிகமான தோஷங்களாலும், கப வாதபித்தங்களாலும், புத்திரைஷணை (பிள்ளைகளிடமுள்ள பாசம்) வித்தைஷணை (ஸம்பாதிக்கப்பட்ட பணம், காணி வீடுகளிலுள்ள பாசம்) தாரைஷணை (பெண்டீரிடமுள்ள பாசம்) இவைகளாலும், ஸம்சயபாவனை (இத்துணை காலம் வாழ்நாட்களில் பாபத்தையே செய்த நான் இப்பொழுதுமட்டும் பகவானை ஸ்மரித்தால் அவர் ரக்ஷிப்பாரா மாட்டாரா என்ற ஸந்தேகம்) விபரீதபாவனை (பகவா

னிக்த அவஸ்தையில் நம்மை காப்பாற்றமாட்டார், வைத்யர்களே ரக்ஷிப்பார் என்று அவர்களை நாடுவது) அஸம்பரவஞ (கபாதி தாது தோஷங்களால் ஒன்றும் தோன்றுமல், ப்ரக்ஞைபற்றிருப்பது) இவைகளாலும் மனது கலங்கியிருக்கும்.

पुरहर உலக சத்ருக்களான த்ரிபுராசுரர்களைத் தன்னுடைய மந்தஹாஸத்தாலேயே சாம்பலாக்கின அஸகாய சூரனை பெருமானுக்கு, என்னுடைய சத்ருக்களான காமாதிகளைக்கொன்று தீனனை என்னைக்காப்பது எம்மாத்திரம் ?

ப்ரபோ! மரணகாலத்தில், அந்த அவஸ்தையிலும், நான் தங்களுடைய சரணாரவிந்தத்தை த்யானிக்கப் போதிய சக்தியைத் தாங்களே எனக்கு இப்பொழுதே அருள வேண்டும்.

प्राणोत्क्रान्ति व्यतिकरदलत्सन्धिबन्धे शरीरे
प्रेमावेशप्रसरदमिताक्रन्दिते बन्धुवर्गे ।
अन्तः प्रज्ञामपि शिव भजन्नन्तरायैरनन्तैः
आविद्धोऽहं त्वयिकथमिमामर्पयिष्यामि बुद्धिम् ॥ १४ ॥

ப. உ.

(हे) शिव ஸ்வயம் ப்ரகாசரே प्राणोत्क्रान्तिव्यतिकरदलत्सन्धिबन्धे शरीरे முக்ய ப்ராணன் வெளியேறும் நிமித்தத்தால் ஸந்திபந்தங்கள் சரீரத்தில் நழுவும்போது बन्धुवर्गे

உறவினர்களின் கூட்டம் प्रेमावेशप्रसरदमिताक्रान्दिते सति மிகுந்தப் பிரியத்தால் தொடர்ந்து அளவில்லாது கதறும் போது अन्तः प्रज्ञामपि भजन् மனதில்(ம்ருத்யுவின் ஸூசனை களைக்கண்டு, அவன் நெருங்கிவிட்டானென்று) விவேகத்தைப் பெற்றவனாக இருக்தும் अहं நான் अनन्तैः எல்லையற்ற अन्तरायैः இடைஞ்சல்களால் आविद्धः தாக்கப்பட்டவனாக त्वयि (ப்ரத்யகாத்மாவாஸ) உம்மிடத்தில் इमां बुद्धिं இந்த நிச்சயாத்மகமான மனதை कथं எப்படி अर्पयिष्यामि ஸமர்ப்பிப்பேன்? (அப்பொழுது முடியாது இப்பொழுதே என்மனதை உமக்கு ஸமர்ப்பிக்கிறேன்.)

வி. உ.

मर्मसूत्कृष्यमाणेषु मुच्यमानेषु बन्धुषु
यद्दुःखम्म्रियमाणस्य स्मर्यतां तन्मुमुक्षुभिः ।
अयः पाशेन कामेन स्नेहपाशेन बन्धुभिः
मृत्युपाशेनबद्धस्य त्रातानैवोलभ्यते ॥

“ஸம்ஸாரப்பிணியிலிருந்து விடுதலையை அடைய விரும்புவோர்களால், மரணாவஸ்தையில் மர்மஸ்தானங்கள் இழுக்கப்படும்போதும், உறவினர்களை விட்டுப்பிரியும் போதும் ஏற்படும் வேதனை எவ்விதமானது என்பது கருதத்தகுந்தது. (இது வைராக்யத்திற்குக் காரணமாகி பரமேச்வரனைத் தஞ்சமாக வரிக்க முக்ய ஸாதனமாகும்.)

இரும்பாலான சங்கிலியால் யமனால் ஒருபக்கம் இழுக்கப்பட, நட்பு என்ற கெட்டியான பாசத்தால் புத்திர

களத்ராதிகளால் வேறு பக்கம் இழுக்கப்பட, மனது வேதனையால் ஊஞ்சலாட, அக்காலத்தில் ஜீவனுக்கு ரக்ஷகனாக எவனும் முன்வரமாட்டான். "யமனுடன் நான் எங்கு செல்லப்போகிறேனோ! இவனைத் தடுக்க என்ன உபாயம்! யாரிடம் முறையிடுவேன்! ஸ்வப்னாவஸ்தையிலும் என்னை விட்டுப்பிரியமனமில்லாத பார்யாள், ப்ராணனைக் கொடுத்து ஸம்பாதித்த இந்த வீடு, காணி, பணம் இவைகளையும் ஏன் இவ்விடமே விட்டுச்செல்கிறேன்'' என்று பல்வேறு துக்கங்களால் தாக்கப்பட்டவனாய், பார்யாதிகளால் கெட்டியாகக் கட்டப்பட்டவனாக இருந்தாலும், ஸமுத்திரத்தின் நடுவில், தண்ணீரில் மறைந்திருக்கும் பாம்பை கருடப்பக்ஷி அனாயாஸமாகக்காலால் பலாத்காரமாகப்பற்றி எடுத்துச்செல்வதுபோல், 'என் ப்ராண நாயகியே என் குழந்தைகளே என்செல்வங்களே,'' என்று பரம பரிதாபத்துடன் கதறிக் கொண்டிருக்கும்போதே யமனால் இந்தஜீவன் அபகரிக்கப் படுகிறான்'' என்று சிவகீதையில் கூறப்படுகிறது.

ஜீவகாலத்தில் கவலைகளற்று, குழப்பமற்று இருக்கும் போதே தன்வசத்திற்குட்படாத இம்மனதை, பலவிதக் கவலைகளாலும் தாக்கப்பட்டுக்குழம்பி பரபரப்புடன் பிராணன் வெளியேறும் மரண காலத்தில், எப்படி பரமனது ஆதீனமாகச் செய்ய முடியும்?

ஹே ஸர்வலோக சரண்ய! தங்களுடைய சரணாரவிந்தங்களில் எனக்கு இப்பொழுதேபக்தியை அருளி, உமது நித்யவாஸஸ்தானமாக என் மனதை உபயோகித்துக் கொள்ளுங்கள்.

अद्यैव त्वत्पदनलिनयोरर्पयाम्यन्तरात्मन्
आत्मानम्मेसहपरिकरैरद्रिकन्याधिनाथ ।
नाहं बोद्धुं शिव तव पदन्न क्रियायोगचर्याः
कर्तुं शक्नोम्यनितरगतिः केवलं त्वां प्रपद्ये ॥ (१५)

ப. உ.

(हे) अन्तरात्मन् ஹ்ருதய கமலவாஸியே! मे என்னுடைய आत्मानं இந்த சரீரத்தை सहपरिकरैः (இந்திரியங்கள், ப்ராணன்கள், மனம் புத்தி முதலிய) காணங்களுடனும் (புத்ர, மித்ர களத்ராதிகளுடன்கூட) त्वत्पदनलिनयोः உமது இரு பாதாரவிந்தங்களில் अद्यैव இப்பொழுதே अर्पयामि ஸமர்ப்பிக்கிறேன். (हे) अद्रिकन्याधिनाथ பார்வதீபதியே! शिव மங்களமூர்த்தியே! अहं நான் त्वत्पदं உமது ஸ்வரூபத்தை बोद्धुं நிச்சயமாக அறியவும் क्रियाः कर्तुं ஸ்வதர்மங்களை அனுஷ்டிக்கவும் योगचर्याः आचरितुं பக்தியோக மார்க்கத்தை அனுஷ்டிக்கவும் न शक्नोमि ஸாமர்த்யமற்றவனாகயிருக்கிறேன் अनितरगतिः திக்கற்றவனாய் त्वां உம்மை(யே) केवलं प्रपद्ये அடைக்கலம் மட்டும் புகுகிறேன்.

வி. உ.

अन्तरात्मन् ஸர்வ ஜீவர்களுக்கும் ப்ரத்யகாத்மாவாக அவரவர் சரீரங்களில் விளங்கி அவர்களை ஆட்டிவைக்கும் பெருமானே! என் சரீரத்திலுமிருந்து எனக்கு ஸர்வப்ரகாரத்திலும் அருள்புரியும் உம்மை இத்துணைகாலம் நினைக்காத இந்த பாபியான என்னை மன்னிக்கவும்.

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम ॥

" ஒருமுறை என்னைச் சரண் புகுந்தவனுக்கும், நான் உம்மைச் சேர்ந்தவன் என்று ஒருமுறை யாசிக்கிறவனுக்கும், ஒரு பிராணியிடமிருந்தும் பயம் வராதபடி நான் அபயமளிக்கிறேன். அவனுக்குமட்டுமல்ல, அவனைச் சார்ந்த सर्वभूतेभ्यः ஸமஸ்தப் பிராணிகளுக்கும் நான் அபய தானம் செய்கிறேன். இது எனது உறுதியான ஸங்கல்பம்" என்று விபீஷண சரணாகதி கட்டத்தில் ஸ்ரீராம பிரான் கர்ஜித்திருந்தாலும், தான் ஆத்ம ஸமர்ப்பணம் செய்யும் இவ்விடத்தில் காருண்யாதிசயத்தால் "सह परिकरैः अर्पयामि" என்னுடைய ஸம்பந்திகளுக்கு முமது அருள்சுரக்க அவர்களுடன்கூட என்னை உம்மிடம் ஸமர்ப்பிக்கிறேன்" என்று ஸ்பஷ்டமாகக்கூறுகிறார். ஸ்ரீமத் பாகவதத்திலும்.

कोन्वत्र ते लोकगुरो भगवन्प्रयास उत्तारणेस्यभवसंभवलोपहेतोः ।
मूढेषुवै महदनुग्रह आर्तबन्धो किंतेनते प्रियजनाननुसेवतांनः ॥
नैवोद्विजेपरदुरत्ययवैतरण्यास्त्वद्वीर्यगायनमहामृतमग्नचित्तः ।
शोचेततोविमुखचेतस इन्द्रियार्थमायासुखायभरमुद्वहतोविमूढान् ॥

"ஹே ஜகத்குரோ! தீனபந்தோ! பகவன்! இப்பிரபஞ்சத்தின் உத்பத்தி ஸ்திதி நாசங்களுக்குக் காரணரான உமக்கு ஸமஸ்த ஜீவர்களையும், ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேற்றி வைக்கும் இக்கார்யத்தில் கஷ்டமேதாவது

உண்டா? (உன்னை மட்டும் கரையேற்றிவைக்கிறேன் மற்ற எல்லாரையும் பற்றி பிடிவாதம் செய்யாதே என்று பரமனே தாங்கள் கூறக்கூடாது.) உமது பிரிய பக்தர்களை ஸேவிக்கும் எங்களுக்கு உமது உத்தாரணத்தால் லாபம் யாது? (பக்தர்களின் அனுக்ரகத்தாலேயே நாங்கள் கடைத்தேறுவோம்) ஆனால் மூடர்கள் விஷயத்திலோ வெனில் உம்முடைய அனுக்கிரகம் ஒன்றே பிரயோஜனத்துடன் கூடியதாக இருக்கிறது.

ஹேபரமேச்வரா! உமது மகிமையின் கானமாகிற பெரிய ஆனந்தாம்ருத வெள்ளத்தில் முழுகின சித்தமுள்ள நான், தாண்டுதற்கரிய ஸம்ஸாரமாகிற வைதரணி (பயங்கரமான யமலோகத்திலுள்ள நதி) யிலிருந்தும் பயப்படவில்லை. ஆயினும், அவ்வானந்தாம்ருதத்திலீடுபடாத சித்தமுள்ளவர்களும், இந்திரிய விஷயங்களாகிற பொய்யான சிற்றின்ப ஸுகத்தின் பொருட்டு குடும்ப பாரத்தைச் சுமக்கும் மூடர்களைக் குறித்து நான் வருந்துகிறேன்.

प्रायेणदेवमुनयः स्वविमुक्तिकामाः
मौनंचरन्तिविजने न परार्थनिष्ठाः ।
नैतान्विहाय कृपणान्विमुमुक्ष एको
नान्यंत्वदस्यशरणंभ्रमतोनुपश्ये ॥

“ஹே மகாதேவ! பெரும்பாலும் முனிகள் தமது முக்தியை நாடி ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் தவம் செய்கிறார்களேயன்றி, பிறருக்காகப் பாடுபடுவதில்லை. நானோ

தீனர்களான இவர்களைவிட்டுத் தனிப்பட்ட மோக்ஷத்தை அடைய விரும்பேன். ஸம்ஸாரச் சுழலில் சுற்றுகின்ற இம்மூடர்களுக்கு உம்மைத்தவிற வேறு ரக்ஷகனை நான் காணவில்லை (அவர்களுக்காக நான் உம்மை தஞ்சமடைகிறேன்)'' என்று ப்ரஹ்லாத ஆழ்வார் பகவானிடம் தீனர்களுக்காக யாசித்தபடி, இத்தீக்ஷாதேந்திராளும், ஆத்மார்ப்பணம் ஒன்றே, பரமனின் கருணையைப்பெற அந்தரங்க ஸாதனமென்ற தத்வத்தை தானே மற்றவர்களுக்காகவும் அனுஷ்டித்துக்காட்டுகிறார்.

இத்தீக்ஷாதேந்திராளின் பௌத்திரர் மகாகவி ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதாளும் தனது ஆனந்த ஸாகரஸ்தவத்தில் 43--வது ச்லோகத்தில்,

त्वय्यर्पितं प्रथममप्पय्ययज्वनैव
स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम् ।
कात्वं महेशि कुलदासमुपेक्षितु मां
कोवानुपासितुमहं कुलदेवतां त्वाम् ॥

"தன்னை உம்மிடம் ஒப்படைத்த (என் பிதாமஹரான) ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதேந்திராளாலேயே, ஆத்மார்ப்பண (15-வது) ஸ்துதியில், முன்னமேயே, தன்வம்சம் முழுமையும் தன்னுடன் கூட உம்மிடம அர்ப்பிக்கப்பட்டிருக்கிறதே! ஹே என் தாயான மீனும்பிகையே! பரம்பரை அடிமையான என்னைப் புறக்கணிக்க நீயார்? என் குலதெய்வமான ஸ்ரீமீனும்பிகையை ஆராதிக்காம

விருக்க நான்தான் யார்!" என்றபடி, இந்த ஆத்மார்ப் பணம், தனக்கு மட்டுமல்ல, தன்குலம், தன்ஸம்பந்தம் பெற்றவர்கள், எல்லாருக்குமாகச் செய்யப்பட்டிருக்கிற தாகவும் விளங்குகிறது.

இந்த ஆத்மஸமர்ப்பணத்திற்குக் கீழ்கண்டபடி ஐந்து அங்கங்களிருக்கின்றன.

अनुकूलस्य संकल्पः प्रतिकूलस्यवर्जनम् ।
रक्षिष्यतीति विश्वासः गोप्तृत्व वरणंतथा ।।
आत्मनिक्षेपकार्पण्ये षड्विधा शरणागतिः ।।

(1) **अनुकूलस्य संकल्पः**—நான் பரமேச்வரனுக்கு அனுகூலமாகவே யிருப்பேன். அவரது மனதிற்கு ஒத்தபடியே நடப்பேன்.

(2) **प्रतिकूलस्य वर्जनं** அவருக்குப் பிரதிகூலமாயிருப் பதைத்தவிர்ப்பேன்—அவருடைய ஆக்ஞாரூபமாக விளங்கும் சாஸ்த்திரங்களிலுள்ள விதி நிஷேதங் களை அனுஸரிப்பேன்.

(3) **रक्षिष्यतीतिविश्वासः** நான் பரமனையாசித்தால் அவர் நம்மை நிச்சயம் ரக்ஷிப்பார் என்ற திட நம்பிக்கை.

(4) **गोप्तृत्ववरणं** நீர் கருணையால் என்னைக்காக்க வேண்டுமென்று பரமனை வரிப்பது.

(5) **कार्पण्यं** தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ள முடி

யாத தன் அசக்தியை அனுஸந்தித்துத் தன் எளிய தன்மையைக்காட்டுவது,

**आत्मनिक्षेपं** மேல் கூறிய ஐந்து அங்கங்களுடன் கூடி ஈசனிடம் ஆத்மாவை ஸமர்ப்பிப்பதே 'சரணுகதி' என்றும் ஸ்ரீலலிதோபாக்யானத்தில் 37–வது அத்பாயத்தில் கூறப்பட்டிருக்கிறது இங்கு கவனிக்கத் தகுந்தது.

**अद्यैव समर्पयामि** நாளைக்கில்லை, இன்றே, தேகம் இந்திரியங்கள் திடமாக இருக்கும்போதே, ஸ்வஸ்தசித்தத்துடனிருக்கும்போதே, யமன் வருவதற்கு முன்னேயே, உமது அருளால் புஷ்கலமாக இருக்கும் என்னுடைய தேகம், இந்திரியங்கள் புத்தி புத்ராதிகள் ஸந்ததிகள் தனம் இவைகளை யெல்லாம் (நான் என்னுடையவைகள் என்பதையெல்லாம்)உம்மிடம் ஒப்படைத்து,கர்மபந்தத்திலிருந்து விடுபட்டவனுகி, உம்மைவிடவேறுக "நான் என்னுடையது" என்ற நிலையற்று, நீராக நான்மிஞ்சுகிறேன்.

உம்மையடைய ஸாதனங்களாகப் பிரஸித்தமாக விளங்கும் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், என்ற இம்மூன்றில் ஒன்றையும் அனுஷ்டிக்கச் சக்தியற்ற மூடனுகயிருக்கிறேன். இகத்திலும் பரத்திலும் எனக்கு ரக்ஷகனும் போஷகனும் உம்மைத் தவிற வேறு எவருமில்லை. நீரே எனக்குத் தாயும் தந்தையும் சொத்தாகவுமிருக்கிறீர். உமது சரணுரவிந்தங்களில் தஞ்சமென்று விழுந்த இந்த தீனனையும் ரக்ஷிக்கவும்.

यस्स्रष्टारन्निखिलजगतां निर्ममे पूर्वमीशः
तस्मै वेदानदित सकलान्यश्च साकं पुराणैः ।
तं त्वामाद्यं गुरुमहमसावात्मबुद्धिप्रकाशं
संसारार्तश्शरणमधुना पार्वतीशं प्रपद्ये ॥ (१६)

ப. உ.

यः எந்த ईशः ஸர்வேச்வரன் पूर्वं முதலில் निखिलजगतां ஸமஸ்த உலகங்களையும் स्रष्टारं படைக்கும் ப்ரம்மதேவனை निर्ममे உண்டு பண்ணினரோ यः எந்த பரமன் तस्मै (தன்னால் படைக்கப்பட்ட) அந்த ப்ரம்ம தேவனுக்கு पुराणैः साकं புராணங்கள் என்ன (தந்திர சாஸ்த்ரங்கள் என்ன) இவைகளுடன்கூட सकलान् எல்லா वेदान् வேதங்களையும் अदित உபதேசித்தாரோ, संसारार्तः ஸம்ஸார ரோகத்தால் வருந்தும் असौ अहं இந்த நான் आद्यं गुरुं ஆதிபர குருவாயும் आत्मबुद्धिप्रकाशं ஆத்மஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை விளக்குகிறவராயும் உள்ள त्वां உம்மை अधुना இப்பொழுதே शरणं प्रपद्ये ரக்ஷகனைத் தஞ்சமடைகிறேன்.

வி. உ.

यो ब्रह्माणं विदधाति पूर्वं
योवैवेदांश्च प्रहिणोति तस्मै ।
तं ह देवमात्मबुद्धिप्रकाशं
मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ॥

'எப்பரமன் சதுர்முக ப்ரம்மதேவனைப் படைத்து அவருக்கு வேதங்களை உபதேசித்து உலகங்களை நிர்மாணம் செய்யப் போதிய ஞானத்தைக்கொடுத்தாரோ ஆத்ம ஞானத்தைப் பிரகாசிக்கும் அப்பரமனை ஸம்ஸார பந்த விடுதலையை விரும்பும் நான் ரக்ஷகனாகத் தஞ்சமடைகிறேன்' என்றுகூறும் ச்வேதாச்வதர உபனிஷத் வாக்யமே இந்த சுலோகத்திற்குவிஷய வாக்யம்.

**आद्यंगुरुं :—**

**ईश्वरप्रणिधानाद्वा**—பரமேச்வரனைச் சரணமடைவதால் தான் அவருடைய கருணையால் சித்தஸமாதானரூபமான யோகம் ஸித்திக்கிறது. **तत्रनिरतिशयं सर्वज्ञबीजं** அவர் ஒப்பற்ற ஞானநிதி **स पूर्वेषमपिगुरुः कालेन अनवच्छेदात्** அவர் காலத்தைக் கடந்தவராதலால் ப்ரம்மதேவன் முதல் எல்லா மூதாதையர்களுக்கும் ஆத்ம ஞானத்தை அருளின பரமகுரு **तस्य वाचकः प्रणवः** அவருடைய பெயர் 'ஓம்' **तज्जपः तदर्थभावनं** அப்ரணவஜபம் சிவஞானத்தை உண்டு பண்ணுகிறது; என்று பகவான் பதஞ்சலி யோகஸூத்திரத்தில் ஆதிகுருவைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

**पार्वतीशं** ப்ரம்மவித்யாரூபிணியான பார்வதியின் பதி என்றால் அப்பரமனின் ஞானத்தின் எல்லையைக் கூறவும் முடியுமோ?

பரமேச்வரனே கடந்து, பேசி, அநுக்கிரகம் செய்யும் குருநாதன். ஞானகுருவாய் அருளும் அருட்பெருஞ் ஜோதியான உம்மை சரணமடைகிறேன்.

ब्रह्मादीन्यस्स्मरहरपशून्मोहपाशेन बध्वा
सर्वानेकश्चिदचिदधिकः कारयित्वात्मकृत्यम् ।
यश्चैतेषुस्वपदशरणान्विद्यया मोचयित्वा
सान्द्रानन्दं गमयति परंधाम तं त्वां प्रपद्ये ॥ (१७)

ப. உ.

(ह) **स्मरहर** *காமனை ஒழித்தவரே!* **चिदचिदधिकः** *சேதன, ஜடரூபமாயுள்ள ப்ரபஞ்சத்தைக்காட்டிலும் வேறுபட்டவராயும்* **यः** *எவர்* **एकः सन्** *ஒருவரே இருந்து கொண்டு* **सर्वान्** *எல்லா* **पशून्** *பசுப்ராயர்களான* **ब्रह्मादीन्** *ப்ரம்ம தேவன் முதலியவர்களை* **मोहपाशेन** *மோகமாகிற கயிற்றால்* **बध्वा** *கட்டி* **तान्** *அவர்களை* **आत्मकृत्यं** *ஸ்வதர் மானுஷ்டானத்தை* **कारयित्वा** *செய்யும் படிசெய்து*

**एतेषु** *இவர்களுள்* **स्वपदशरणान्** *தன்னுடைய பாதங்களில் (அனன்ய பக்தியுடன்) தஞ்சமென்று அடைந்தோர்களை* **विद्यया** *சிவஞானத்தால்* **मोचयित्वा** *விடுதலை செய்வித்து* **सान्द्रानन्दं** *ஆனந்தக்கட்டியாயும்* **परं** *துக்கக் கலப்பற்று நிரதிசயமானதுமான* **धाम** *(தன்னுடைய) ஸ்வரூபத்தை* **गमयति** *ஸாக்ஷாத்கரிக்கும்படி செய்கிறாரோ,* **तं** *அப்படிப்பட்ட* **त्वां** *(பக்தபக்ஷபாதியான) உம்மை* **प्रपद्ये** *(நான்) சரணமடைகிறேன்.*

**चिदचिदधिकः**—"**विश्वाधिको रुद्रोमहर्षिः**" ப்ரபஞ்சத்தைக்காட்டிலும் மேலானவராயும், ஆகவே அதைக் காட்டிலும் வேறுபட்டவராயும், ஆகவே, அழியும் ஸ்வபாவத்

துடன் கூடிய இவ்வுலகிற்கு அழிவு ஏற்படும்போதும், தான் அழிவற்றவராயு மிருப்பதால் 'விச்வாதிகர்' என்றும், தன்னடியார்களின் துக்கங்களை ஒழிப்பதால் 'ருத்திரர்' என்றும், ஸர்வக்ஞரானதால் 'மகரிஷி' என்றும் பரமேச்வரனை வேதம் கூறுகிறது.

**मोहपाशेनबध्वा**—(தான்யார் என்ற) விவேகமில்லாத் தன்மையே மோகமெனப்படும். அந்த அவிவேக மென்ற கயிற்றால் கட்டுண்டவர்களே பசுப்ராயர்களான ஜீவர்கள். சரீரத்தையே தானாகவும்,அதைக்காட்டிலும் ஆத்மா(தான்) வேறு இல்லை என்ற அனுபவத்துடன், சரீர போஷணை அப்போஷணைக்கு ஸாதனமான பணத்தை எம்முறையிலாவது ஸம்பாதிப்பது, இவைதான் வாழ்க்கையின் லக்ஷ்யமாகக்கொண்டமானிடர்களே பசுக்களுக்கு ஸமமானவர்கள்.

"कथंजीवाः सर्वे पशवः इति। स कथं तत्पतिरिति ॥ स तमुवाच ।
यथातृणाशिनः विवेकहीनाः परप्रेष्याः कृष्यादिकर्मसु
विनियुक्ताः पुनः अतिदुःखभराः स्वस्वामिभिर्बध्यमानाः
गवादयः तथेमे । ससर्वज्ञः ईश्वरः तेषांपतिः पशुपतिः
तानज्ञानपाशेनबध्नाति । तज्ज्ञानान्मोचयति । तज्ज्ञानं
केनोपायेनेति विभूतिधारणादेवेति । "

"ஜீவர்கள் எல்லோரும் நாற்கால்ப் பிராணிகள் என்பது எவ்வண்ணம் பொருந்தும்? பரமன் அவர்களுக்கு எவ்வண்ணம் நாயகனாகிறார்? பதில் கூறுகிறார். தங்கள் யஜமானர்களால், உழுதல், பரம்படித்தல் முதலிய க்ருஷ்

யாதி கார்யங்களில் நன்கு உபயோகப்படுத்தப்பட்டு, அதிக வேதனையைக் கொடுக்கும் பாரங்களைச் சுமந்து, மனிதர்களால் தள்ளப்பட்ட வைக்கோலையே ஆகாரமாகப் பெற்று, விவேகமற்று இருக்கும் பசுமுதலிய நாற்கால் பிராணிகளுக்கு ஸமமாக, காமாதிகளுக்கு அடிமைகளாகி, தன்னுடைய ஸ்வரூபத்தையும், தன் பேரின்ப நலத்தையும் அறியாது, சரீர, புத்திர களத்திரர்களையே ஆத்மாவாக அபிமானித்து, குடும்பத்திற்கே உழைத்து, அதற்குப் பாடுபடுவதே பரம புருஷார்த்தமாகவும் மதிக்கும் விவேக சூன்யர்களான மானிடர்களும் பசுப்பிராயர்களே. பரமேச்வரன் பசுக்களின் யஜமானன். அவரே மோகபாசத்தால் அவர்களைக் கட்டி, அவர்களைத் தனது ஸ்வரூப ஞானத்தால் விடுதலை செய்கிறார். அந்த ஸ்வரூப ஞானம் எவ்வுபாயத்தால் பெறப்படுகிறது? விபூதிதாரணத்தாலேயே அச்சிவ ஞானம் உதித்து (அக்ஞானம் என்ற கட்டு ஸூர்யனைக்கண்ட இருட்டுப்போல் ஒழிந்து, விடுதலைரூபமான பேரின்பம் பெறப்படுகிறது).'' என்றுகூறும் ஜாபால உபனிஷத்தே இதற்குப்பிரமாணமாகும்.

**आत्मकृत्यं कारयित्वा** ஈசன் தன்னை உபாஸிக்கும் ரூபமானகார்யத்தைச்செய்விக்கிறார். தனது ஆக்ஞா கைங்கர்ய ரூபமான ஸ்வதர்மானுஷ்டானங்களைச் செய்விக்கிறார். **यं उन्निनीषति तं साधुकर्म कारयति** "பகவான் எவனைக் கைதூக்கிவிட விரும்புகிறாரோ அவனை ஸ்வதர்மானுஷ்டானங்களை செய்யும்படி செய்கிறார்" என்ற வேதவாக்கியமே இதற்கு ப்ரமாணமாகும். இதிலிருந்து பகவதாராதன ரூபமான ஸ்வதர்மானுஷ்டான நிஷ்டர்களே பகவத்ப்ர

ஸாதத்தைப் பெற்றவர்களென்றும், மற்றவர்கள் அப்பிரஸா தத்தைப் பெறாதவர்களென்றும், பெறப்படுகிறது. **स्वपदशरणान्** பகவத்பாதங்களில் சரண் புகுந்தோர், அவரது ப்ரஸாதத்தைக் கொடுக்கும் அதிஸுலபமான விபூதி, ருத்ராக்ஷதாரணத்தை பக்திச்ரத்தையுடன் ஏற்கிறார்கள்.

**एतच्छिरोव्रतं विधिवद्यैस्तुचीर्णं** இந்த விபூதித்தாரணத்தை சிரோவ்ரதம் என்றும், பாசுபதவ்ரதம் என்றும், சாம்பவ வ்ரதம் என்றும் மிகப்பிரஸித்தமான, முண்டக உபனிஷத், ஜாபால உபனிஷத், கைவல்ய உபனிஷத், காலாக்னி ருத்ரோபனிஷத், முதலிய உபனிஷத்துக்கள் முமுக்ஷுக் களால் அனுஷ்டிக்க வேண்டியமுக்ய வ்ரதமாக பரம தாத்பர்யத்துடன், உத்கோஷிப்பதே இதற்கு ப்ரமாண மாகும்.

उद्धूलनं त्रिपुण्ड्रं च ज्ञानांगत्वेन सादरम् ।
आमनन्तिसु मुनिश्रेष्ठाः श्वेताश्वतरशाखिनः ॥

பக்திச்ரத்தையுடன் விபூதியை உத்தூளனம்செய்து கொள்வதும், த்ரிபுண்டரதாரணம் செய்து கொள்வதும், ப்ரம்ம ஞானத்திற்கு அங்கமாக ச்வேதாச்வதர உபனிஷத் வாக்யங்கள் கூறுகின்றன.

महापातकयुक्तानां जन्तूनां पूर्वजन्मसु ।
त्रिपुण्ड्रोद्धूलनद्वेषा जायते सुदृढं बुधाः ॥

"பூர்வ ஜன்மங்களில் செய்யப்பட்ட மகா பாதகங்களுடன்கூடிய ஜீவர்களுக்கு,விபூதி உத்தூளனம் த்ரிபுண்ட்ர தாரண மிவைகளில் தீவிர வெறுப்பு ஏற்படுகிறது.

भस्मधारणमाहात्म्यं मयावक्तुं नशक्यते ।
गुरुणा चापि मेविप्राः कल्पकोटिशतैरपि ॥

விபூதிதாரணத்தின் மகிமையை, என்னுடைய குருநாதாளான பகவான் வ்யாஸாசார்யாளாலும், என்னாலும், நூறுகோடி கல்பங்களானாலும் சொல்லி முடிக்க முடியாது" என்றுகூறும் ஸூதஸம்ஹிதை வாக்யங்களும் இதற்குப்ரமாணங்கள்.

தனது பக்தர்களுக்கு விபூதிதாரணத்தில் பக்திச்ரத்தையைக் கொடுத்து அவர்களுக்கு அநுக்கிரஹரூபமான ஞானத்தை அருளும், பரமஸுலபமான பரமனை தஞ்சமடைகிறேன்.

ध्यातोयत्नाद्विजितकरणैः योगिभिर्योविमृग्यः
तेभ्यः प्राणोत्क्रमणसमये सन्निधायात्मनैव ।
तद्व्याचष्टे भवभयहरं तारकं ब्रह्मदेवः
तं सेवेहं गिरिश सततं ब्रह्मविद्यागुरुंत्वाम् ॥ (१८)

ப. உ.

(हे) **गिरिश** கைலாஸ நாதரே! **विजितकरणैः** ஜயிக்கப்பட்ட இந்திரியங்களையுடைய **योगिभिः** த்யானயோகிகளால் **यः** எவர் **यत्नात्** (ச்ரத்தா பக்தி லக்ஷணரூப) ப்ரயத்தினத்துடன் **विमृग्यः** தேடத் தகுந்தவரோ **ध्यातः**

த்யான ஸமாதியால் அறியத் தகுந்தவரோ **यः देवः** எந்த மகாதேவன் **तेभ्यः** அந்த யோகிகளுக்கு **प्राणोत्क्रमणसमये** முக்யப்ராணன் சரீரத்திலிருந்து வெளிக் கிளம்பும்போது **आत्मनैव** தானே(நேரிட) **सन्निधाय** ஆவிர்பவித்து **भवभयहरं** ஸம்ஸாரத்தை ஒழிக்கும் **तारकं** (கர்ப்ப ஜன்ம ஜரா மரணரூப ஸம்ஸார துக்கங்களை) தாண்டுவிக்கும் **ब्रह्म** பரப்ரம்ம ஸ்வரூபத்தை **व्याचष्टे** (அநுபவமாகும்படி) உபதேசிக்கிறாரோ, (அப்படிப்பட்ட) **ब्रह्मविद्यागुरुं** ப்ரம்ம ஞானத்தை அருளும் குருநாதரான **त्वामेव** உம்மையே **सततं** அடிக்கடி **अहं** நான் **सेवे** வணங்குகிறேன்.

வி, உ.

**ध्यातो यत्नात् विजितकरणैः—** அரணிக் கட்டையில் அக்னியிருந்தாலும், அது அதைக்கடைந்தபிறகே காணப் படுவதுபோல், பரமனும் ஜீவர்களின்தேகங்களிலிருந்தாலும் புலப்படாமல், தியானத்தால் கடைந்து தேடுகிறவர் களுக்கே அவர் புலப்படுகிறார்.

**स्वदेहमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम् ।**
**ध्याननिर्मथनाभ्यासाद्देवं पश्येन्निगूढवत् ॥**

“ தன் தேகமாகிய கீழரணியில், ஓம்காரமாகிற மேல் அரணியை வைத்து தியானமாகிற கடைதலை அப்ய ஸித்தால் மறைந்திருக்கிற தேவனைக் காணலாம் ” என்ற ச்வேதாச்வதர உபனிஷத் வாக்கியப்படியும்;

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥

"துன்மார்க்க ஸேவையை விடாதவனும், இந்திரியங்களை அடக்காதவனும், ஏகாக்ரசித்தமில்லாதவனும், ஒழிவடைந்த மனதில்லாதவனும், இப்பரமனை அறியமாட்டான்" என்ற கடோபனிஷத்வாக்யப்படியும் मुक्तोपसृप्यव्यपदेशात् "காமக்ரோதாதி மலங்களை ஒழித்த யோகிகளால் தேடி நாடத்தகுந்தவர் இப்பரமன்" என்று கூறும் ப்ரம்ம ஸூத்திரப்படியும், இப்ப்ரமனை புண்யாத்மாக்கள் மிகப் பிரயத்தினத்துடன் தினமும் 12000 பிரணவஜபம் 12000 பஞ்சாக்ஷர ஜபம், சதருத்ர ஜபம், விபூதிருத்ராக்ஷதாரணத்தில்பக்திச்ரத்தை, சிவபூஜை, சிவத்யானம் வர்ணாச்ரம தர்மஸேவை முதலிய ஸாதனங்களைக் கையாண்டு சிவஞானத்தைப் பெற்று யோகாரூடர்களாக, நித்யானந்தத்தில் களிக்கிறார்கள்.

तेभ्यः प्राणोत्क्रान्तिसमये ஜிதேந்திரியங்களான ஆருருக்ஷுக்கள் தங்களது தீவிர தாரணப்யாஸ பலத்தால் சிவத்யானத்திலீடுபட்டிருந்தாலும், ஸமஸ்தப் பிராணனும் ஒடுங்கும் மரணகாலத்தில், அவர்களுடைய அத்தியானத்திற்கு பங்கமேற்பட்டாலும் ஏற்படலாம். அக்காலத்தில் கருணைமூர்த்தியான பரமன், அவர்களால் அழைக்கப்படாமலிருந்தாலும், தனது திவ்ய ஸ்வரூபதர்சனத்தை அப்பக்தர்களுக்கு அருளி, தாரகப்ரம்ம உபதேசத்தையும் செய்து முக்தியை அருள்கிறார்.

यानि कर्माणि बाह्यानि मरणादूर्ध्वमच्युत ।
मम ज्ञानप्रदानीति कथितानि मयातव ॥
तानि कल्याणवृत्तस्य विद्धि नान्यस्य कस्य चित् ।
पापिष्ठानामपि श्रद्धाविहीनानां जनार्दन ।
मुक्तिदं मरणादूर्ध्वं शिवक्षेत्रैकवर्तनम् ॥

"ஹே மகாவிஷ்ணோ! சிவஞானத்தைப்பெற ஸாதனங்களான, வர்ணாச்ரமதர்மஸேவை, ஜபம், தபம், முதலிய பாஹ்யகர்மாக்கள், மரணகாலத்திற்குமுன் அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று எவைகள் என்னால் கூறப்பட்டனவோ, அவைகளெல்லாம், நன்நடத்தையிலுள்ள ஆஸ்திகனை அதிகாரிக்குக் கூறப்பட்டனவே ஒழிய, மற்ற எவனுக்குமல்ல. பாபங்களில் ஈடுபட்டு வைதீக ஸ்வதர்மானுஷ்டானங்களில் நம்பிக்கையற்றவர்களுக்கோவெனில், சிவக்ஷேத்திரத்தில் வசிப்பது ஒன்றே மரணத்திற்குப் பிறகு மோக்ஷத்தை அளிக்கக் கூடியது," என்ற ஸூதஸம்ஹிதா வசனப்படியும்;

त्रिशूलायां काशीमधिश्रित्य त्यक्तासवोपि मय्येव संविशन्ति ।
न तत्त्याज्यं न तत्त्याज्यं मोचकोहं अविमुक्ते निवसताम् ।
तत्राहमासीनः काश्यां त्यक्तकुणपानानीय स्वस्यांके
सन्निवेश्य भसितरुद्राक्षभूषितानुपस्पृश्य मा भूदेतेषां जन्म
मृतिश्चेति तारकं शैवं मनुमुपदिशामि । ततस्ते मुक्ताः मामनु
विशन्ति विज्ञानमयेनांगेन । न पुनरावर्तन्ते हुताशनप्रतिष्ठंहविरिव ॥

"மரணகாலத்தில் காசீ க்ஷேத்திரத்தை அடைந்து ஆங்கு மரித்தவர்கள் என்னையே அடைகிறார்கள். அவி முக்தமென்ற காசி க்ஷேத்திரத்தில் வசிக்கிறவர்களுக்கு நான் விடுதலையை அளிப்பதால், அந்த காசி க்ஷேத்திரம் (எக்காரணத்தாலும்) விடத்தகுந்ததல்ல. காசியில் விபூதி ருத்ராக்ஷங்களைத்தரித்து மரித்தவர்களின் சரீரங்களை ஆங்கு இருக்கும் (விச்வேசனான) நான் என் மடியின்மேல் தூக்கி எடுத்துவைத்து, இவர்களுக்கு இனி ஜனன மரணம் வேண்டாமென்று, என் கரத்தால் அவர்களுக்கு ஸ்பர்ச தீக்ஷைசெய்து தாரகமான பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை உபதேசிக்கிறேன். அதனால் அவர்கள் விக்ஞானமய சரீரத்துடன் முக்தியை அடைந்து என்னிடம் ஐக்யமாகிறார்கள்' அக்னியில் ஆகுதிசெய்யப்பட்ட ஹவிஸ் மறுபடியும் அதிலிருந்து திரும்பாமல் அக்நியின் நிலையில் நிற்பது போல், இஜ்ஜீவர்களும் என்னுடன் கலந்து மறுபடியும் திரும்பாமல், நானாகநிற்கிறார்கள் " என்று பஸ்மஜாபால உபனிஷத் கூறுகிறபடி மகாபாபிகளையும் தனது அவ்யாஜ கருணையால் பெற்றோர்களைக்காட்டிலும் பன் மடங்கு அன்புடன் அருளும் வள்ளல் பரமேச்வரனன்றோ !

மரணகாலத்தில் ஸமஸ்த ஜீவர்களும் ஸ்வாதீன சித்தத்துடனிருக்க முடியாததலால், சிவத்யானத்திலோ சிவபூஜையிலோ, சிவஸ்தோத்திரத்திலோ, அப்போது, மனது நில்லாது. தன்னைபஜித்து வந்த பக்தர்களுக்குப் பரமன், அவர்களால் அப்பொழுது மனதாலும் ஸ்மரிக்கப் படாம லிருந்தும் தனது அவ்யாஜ கருணையால், அவர்கள் முன் தோன்றி, தாரகப்ரம்ம உபதேசம் செய்து

ஜனன மரண ஸம்ஸாரக் குழியில் மறுபடியும் விழாமல் அவர்களை கரையேற்றுகிறார். அத்தகைய பரம குருவை நானிப்போதே தஞ்சமடைகிறேன்.

भक्ताग्र्याणां कथमपि परैः योचिकित्स्याममर्त्यैः
संसाराख्यां शमयतिरुजं स्वात्मबोधौषधेन ।
तं सर्वाधीश्वर भवमहादीर्घतीव्रामयेन
क्लिष्टोहं त्वां वरदशरणं यामि संसारवैद्यम् ॥ (१९)

ப. உ.

(हे) **सर्वाधीश्वर** ஹே தேவாதி தேவனே, **परैः** சிரேஷ்டர்களான **अमर्त्यैः** மரண தர்மமற்ற தேவர்களாலும் **कथमपि** கஷ்டப்பட்டும் ஒருபோதும் **अचिकित्स्यां** சொஸ்தம் செய்ய முடியாத **संसाराख्यां** ஸம்ஸாரமென்ற **रुजं** துக்கத்தை **यः** எவர் **भक्ताग्र्याणां** பக்த சிகாமணிகளுக்கு **स्वात्मबोधौषधेन** சிவஞானமென்ற மருந்தை அருள்வதால் **शमयति** சமனம் செய்கிறாரோ (हे) **वरद** ஸமஸ்த புருஷார்த்தங்களையும் அருளும் வள்ளலே, **भवमहादीर्घतीव्रामयेन** அனாதிகாலமாய் அதிகதாபத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரமாகிற ரோகத்தினால் **क्लिष्टः** கஷ்டத்தை அனுபவிக்கும் **अहं** நான் (அப்படிப்பட்ட) **संसारवैद्यं** ஸம்ஸாரமான ரோகத்திற்கு வைத்யனாக உள்ள **त्वां** உம்மை **शरणंयामि** சரணமடைகிறேன்.

வி. உ.

ஜனன மரணக் கிலேசங்களுடன் கூடிய ஸம்ஸாரமே ஒரு பெரும் வியாதி. இப்பெரியவியாதிக்கு இந்திராதி

தேவர்களுக்கும் வைத்யர்களான அச்விநீதேவர்களாலும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை யென்றால், மானிட வைத்யர்களின் சக்தியைப்பற்றிக்கூறவும் வேண்டுமோ!

**साम्बसंसारभेषजं** என்றபடி அம்பிகாநாதனை பரமேச்வரனே இச்சம்ஸாரரோகத்தைத் தீர்க்கும்வைத்யர்.

உபனிஷத்துக்களே வைத்ய சாலை.

'ஸ்வாத்மபோதம்' (ஸ்வரூபஞானமான, அகண்டாகாரவிருத்தி ஞானமே) இதற்கு மருந்து. நாரதர், பிருகு, ச்வேதாச்வதரர், பிப்பலாதர், யாக்ஞவல்க்யர், முதலியவர்களே இந்த உபனிஷத் வைத்ய சாலையில், ஸாம்ப பரமேச்வரனாகிய வைத்யரால், அருளப்பட்ட ஸ்வாத்ம போதமென்ற மருந்தை ஸேவித்து ஸம்ஸாரரோகத்திலிருந்து சொஸ்தமடைந்தவர்கள்.

**मामृते साम्बमीशानं मोचकोन्यो न विद्यते ।**
**अहमप्राप्तसंसारः सर्वज्ञश्च स्वभावतः ॥**

"ஸ்வப்ரகாச ஆனந்த வடிவான நான் ஒருவனே ஸம்ஸார நோய் வாய்ப்படாதவன். (மற்ற தேவமனுஷ்யாதி ஸமஸ்த ஜீவர்களும் இந்த நோயால் வருந்துவோர்களேயாவர்.) அம்பிகாநாதனை என்னைத்தவிர ஸம்ஸார நோயிலிருந்து விடுவிக்கிறவன் மூவ்வுலகிலும் ஒருவருமில்லை. (ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கி கரையேற சக்தியற்று வருந்துவோர்களால், அக்கடலில் தத்தளிக்கும் மற்ற

ஜீவர்களை ஒருக்காலும் கரையேற்றமுடியாது)'' என்று கூறும் ஸூதஸம்ஹிதாவாக்யமும் இதற்குச்சான்று.

மஹோதரம் என்ற நோய்வாய்ப்பட்டவன், தன்னுடைய வயிறு தினமும் பெருப்பதைக் கண்டும், தன்னுடைய வியாதியால் தான் அது பெருக்கிறது என்று கருதாமல் பணத்தொந்திபோடுவதாகக்கருதி, சந்தோஷித்து வைத்யர்களைத்தேடி சிகித்ஸையை நாடாததுபோல், பாமரர்களான ஜீவர்களும், ஸம்ஸாரரோகத்துடன் இருந்தாலும், அதை ரோகமாகக்கருதாமலும், அதை ஒழிக்க வைத்யனைத்தேடாமலும் சிகித்ஸையை நாடாமலுமிருக்கிறார்கள். சில புண்யாத்மாக்கள் ஸம்ஸாரமே பெரிய நோய் என்று அறிந்து, அதை ஒழிக்கவல்ல வைத்யனை பரமனைத் தேடுகிறார்கள். இப்படிப் பரமனைத் தேடுவோர்களே பக்தர்கள் எனப்படுவர். அப்பரமன் தன்னுடைய பக்தர்களுக்கு ஆத்மஞான மென்ற மருந்தான ஸ்வரூப ஞானத்தைத்தானே குருநாதரின் ரூபமாகப் பிரகாசித்துவைக்கிறார். அக்குருநாதனின் பாதங்களை நாடுவோர்களே உத்தம பக்தர்கள். **भक्ताग्रयाणां** அந்த உத்தம பக்தர்களுக்கு பரமன் ஸ்வாத்மபோத மென்ற மருந்தை அருள்கிறார்.

**स्वात्मबोधौषधेन—** இருட்டிலுள்ள தூண், திருடனைப் போல் தோன்றுகிறது. விளக்கைக் கொண்டுபார்த்தால தூண்மட்டும் நிற்கிறது. திருடனைக் காணோம். உண்மையாகவே ஆங்கு திருடன் இருந்தால், விளக்கின் பிரகாசத்திலும் அவன் காணப்படவேண்டும். பிரகாசத்தில் பார்க்கும்போது காணப்படாத திருடன் கல்பிதமானவனேயாகும். வாஸ்தவமல்ல. அப்படியே, ஸ்வாத்ம

போதமென்ற ஆத்ம ஞானத்தால், ஸம்ஸாரதுக்கங்கள் ஒழியப்படுகின்றனவாயின், அவைகள் கல்பிதங்களே யாகும், வாஸ்தவமல்ல என்று ஏற்படுகிறது.

ஸம்ஸாரதுக்கங்கள் வாஸ்தந்தானென்றால், உண்மை யாக உள்ள வஸ்துக்களுக்கு நாசமேற்பட முடியாதாத லால், ஜீவனுக்கு துக்கநிவ்ருத்திரூப மோக்ஷமும் ஸம்ப விக்கமுடியாது. அதற்கு ஸாதனமான மோக்ஷ சாஸ்த் ரங்களும் பிரயோஜனமற்றவைகளாகிவிடும். தன் ஸ்வரூப ஞான அனுபவத்தால் ஸம்ஸார துக்கங்கள் ஒழிகின்றன என்றே வேதங்கள் கூறுகின்றன **तरति शोकमात्मवित्** ஆத்மாவை அறிந்தவன் சோகத்தைக் கடக்கிறான் **ब्रह्मवि-दाप्नोति परं** ப்ரம்மத்தை அறிந்தவன் ப்ரம்மத்தை அடை கிறான் **ज्ञानेनैव तु कैवल्यं** ஆத்ம ஞானத்தால்தான் மோக்ஷம் ஏற்படுகிறது **विदित्वामृतमश्नुते** ஆத்மாவை அறிந்து அமரண தர்மத்தை அடைகிறான். எனறு வேதாந்தங் களும் **पुरुषार्थो अतः शब्दात्** "மோக்ஷம் ஞானத்தினால் தான் ஏற்படுகிறது, வேதமவ்வண்ணம் கூறுகிறபடியால்" என்று கூறும் ப்ரம்மஸூத்ரப்படியும், தன் ஸ்வரூப ஞானத்தால் துக்கங்கள் ஒழிகின்றன என்றேற்படுவதால், இது பழுதை என்று அறியாததால் அதில் தோன்றும் பாம்பு, இது பழுதைதான் என்ற ஞானத்தால் அழிவது போல், ஆத்ம அக்ஞானவஸ்தையில் தோன்றும் ஸம்ஸா ரித்வம், ஆத்மஞான அநுபவமேற்பட்ட மாத்திரத்தில் மறைந்து வாஸ்தவமான தன் ஸ்வரூப ப்ராப்திரூபமான முக்தி அடையப்படுகிறது என்பதே பொருத்தமாகும். இதுதான் வஸ்துதத்வம்.

சிவஞானத்தால், தன்னுடைய ஸம்ஸாரித்வம் ஒழி கிறதென்பதால், சிவனும் ஆத்மாவும் (தானும்) ஒன்று தான் என்றும் ஏற்படுகிறது. இப்படி உத்தம பக்தர் களுக்குப் பரமன் தன்நிலையை அருள்கிறார்.

घोरं भवमुपहातुंकेचिदघोरं भवं प्रपद्यन्ते ।
संसरणकातराणां संसरणि: शांभवी भक्ति: ॥

(இந்திராதி தேவர்களுக்கும் வைத்யர்களான அச்வினி தேவர்களாலும் தீர்க்கப்பட முடியாத) பயங்கரமான ஸம்ஸார ரோகத்தை ஒழிக்க சிலபாக்யசாலிகள் அகோர மென்றும் பவனென்றும் பெயருள்ள பரமனைத் தஞ்ச மடைகிறார்கள். ஸம்ஸார தாபங்களால் வருந்துவோர்க ளுக்கு அவைகளைப் பரிகரிக்க பரமேச்வர பக்தியே உத்தமமான ஸாதனமென்ற ஆப்தவாக்யப்படி, அப் பரமனே, எனக்குத் தஞ்சம். மற்றெவராலும் ஒழிக்க முடி யாத இந்தரோகத்தைஒழித்து அவரே எனக்கு அருள வேண்டும்.

दासोसीति त्वयिशिवमया नित्यसिद्धं निवेद्यं
जानास्येतत्त्वमपि यदहं निर्गतिस्संभ्रमामि ।
नास्त्येवान्यन्मम किमपि ते नाथ विज्ञापनीयं
कारुण्यान्मे शरणवरणं दीनवृत्तेर्गृहाण ॥ २०

ப. உ.

**(हे) शिव** பரமசிவனே! **त्वयि** உம்முடைய முன்னிலையில்

**दासोस्मि** நான் தாஸனாக இருக்கிறேனென்ற **नित्यसिद्धं** எப்பொழுதும் ப்ரஸித்தமான உண்மை **मया** என்னால் **निवेद्यं** தெரிவிக்கத் தகுந்தது **तत्** அதை **त्वमपि** நீங்களும் **जानास्येव** அறிந்தேயிருக்கிறீர். **निर्गतिः** திக்கற்றவனாக **संभ्रमामि** நான் அல்லாடுகிறேன் என்ற **यत्** யாதொரு (விஷயமோ அதையும்) **जानास्येव** அறிந்தேயிருக்கிறீர் **नाथ** ஸ்வாமியே **ते** உமக்கு **विज्ञापनीयं** தெரிவிக்கத் தகுந்த **अन्यत्** வேறு **किमपि** எதுவும் **मम** எனக்கு **नास्त्येव** இல்லவே யில்லை **दीनवृत्तेः** தீன நடத்தையுடன் கூடிய **मे** என்னுடைய **शरणवरणं** தங்களை ரக்ஷகனாகக் கோருவதை **कारुण्यात्** கிருபையால் **गृहाण** ஏற்றுக்கொள்ளுங்கள்.

**வி. உ.**

கயிற்றால் கட்டப்பட்ட பக்ஷி பறந்து பறந்து சென்று, போக்கிடமில்லாமல் கட்டப்பட்ட இடத்திற்கே திரும்புவதுபோல், நானும், இந்த தனிகன் என்னைக் காப்பானா, இந்த தெய்வம் என்னைக்காக்குமா என்று கண்ட ஜனங்களையும், கண்ட கோபுரங்களையும், கண்ட அச்வத்த மரங்களையும் அஞ்சலிசெய்து, நாலு திசைகளிலும் சுற்றி அலைந்து, ஒரு விதமான ஸுகத்தையும் பெறுமல் திக்கற்று உம்மையே சரண்புகுகிறேன். எல்லாமறிந்த உமக்குநான் அறிவிக்கவேண்டியது யாது மில்லை. என் நடத்தை மிகவும் துச்சமாகினும் உம்மை தஞ்சம் புகுந்த இந்தமகாபாபியான என்னையும் உமது கருணையால் கை தூக்கிவிடவும்.

ब्रह्मोपेन्द्रप्रभृतिभिरपि स्वेप्सितप्रार्थनाय

स्वामिन्नग्रे चिरमवसरस्तोषयद्भिः प्रतीक्ष्यः ।

द्रागेवत्वां यदिह शरणं प्रार्थयेकीटकल्पः
तद्विश्वाधीश्वर तव कृपामेव विश्वस्यदीने ॥ (२१)

ப. உ.

(हे) **विश्वाधीश्वर** ஸர்வலோக நாதனே **स्वेप्सितप्रार्थनाय** தங்களபீஷ்டங்களை பிரார்த்தித்துப் பெற **तोषयद्भिः** துதிகளால் பிரீதியை உண்டாக்கும் **ब्रह्मोपेन्द्रप्रभृतिभिरपि** நான்முகன், திருமால் மகேந்திரன் முதலியவர்களாலும் **अग्रे** உமது ஸன்னிதியில் **चिरं** வெகுகாலமாக **अवसरः** அனுக்கிரஹம் செய்யும் காலம் (எப்பொழுது கிடைக்குமென்று) **प्रतीक्ष्य:** ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. **स्वामिन्** பரமனே **कीटकल्पः** புழுவுக்கு ஸமமான **अहं** (அல்பனான) நான் **त्वां** உம்மை **इह** இப்பொழுதே **द्रागेव** சீக்கிரமாகவே **शरणं** ரக்ஷிக்கவேண்டு மென்று **प्रार्थये** வேண்டுகிறேன் **इतियत्** என்று யாதுண்டோ **तत्** அக்காரியத்தை **दीने** எளியோனிடமுள்ள **तव** உம்முடைய **कृपामेव** கருணையையே **विश्वस्य** நம்பியே (செய்கிறேன்)

வி. உ.

நான்முகன் உலகைப் படைக்கும் ஸாமர்த்தியத்தைப் பெறவும், திருமால் அதைப் பாலனம் செய்யும் சக்தியைப் பெறவும், இந்திரன், வ்ருத்திராசுரன் முதலிய சத்ருக்களை ஒழிக்கவும், வருணாதி தேவர்கள் தங்கள் ஸ்தானங்களில் நிலைக்கவும், ஸ்ரீகைலாயம், காளஹஸ்தி, சிதம்பரம், வ்ருத்தாசலம், ஹாலாஸ்யம் முதலிய திவ்ய சிவக்ஷேத்திரங்களில் கோயில்கொண்டு விளங்கும் உம்மையடைந்து, பக்தி ச்ரத்தையுடன் உம்மை உபாஸித்து உமது அநுக்ரகம்

எப்பொழுது கிடைக்குமென்று எதிர் பார்த்தவண்ணமா யிருக்கிறார்கள். அம்மும்மூர்த்திகளாலும் உபாஸிக்கப் பட்ட தேவதேவனே! இறப்பதற்கே பிறந்தும், பிறப்ப தற்கே இறந்தும் உள்ள அல்ப புழுவைப்போலுள்ள எளியோனான நான் என் துக்கங்களிலிருந்து விலகி பேரின் பத்தைப் பெற உம்மைத் தவிர வேறு எவரைத் தஞ்ச மடைவது?

கர்ம, பக்தி, ஞானம் இந்த ஸாதனங்களுடன் கூடிய வனை நீர் ரக்ஷிப்பதால் உமது காருண்யம் அவ்வளவு பிர காசிக்காது. இச்சாதனங்களில் ஒன்றுகூட இல்லாத பசுப்ராயமான என்னைக் காப்பாற்றினால்தான், தீனபந்து என்று கீர்த்திவாய்ந்த உம்முடைய கருணைக்கும் மகிமை யுண்டு. ஒருவேளை, யோக்யதையற்றவனென்று என்னை நீர் நிராகரித்தாலும் "**जयतिकरुणा काचिदरुणा**" என்றபடி உமது சக்தி ரூபமாக விளங்கும் ஜகன்மாதாவான தயா தேவிஎன்னை ஸ்வீகரிப்பாளென்பது நிச்சயம்.

**कर्मज्ञानप्रचयमखिलं दुष्करं नाथ पश्यन्**
**पापासक्तं हृदयमपि चापारयन्सन्निरोद्धुम् ।**
**संसाराख्ये पुरहर महत्यन्धकूपे विषीदन्**
**हस्तालंबप्रपतनमिदं प्राप्यते निर्भयोस्मि ॥** ( २२ )

ப. உ.

**(हे) नाथ** பரமேச்வரனே! **कर्मज्ञानप्रचयं** கர்மயோகம் ஞானயோகம் இவைகளின் விஸ்தாரம் **अखिलं** எல்லாம் **दुष्करं** கஷ்டப்பட்டுச் செய்யக்கூடியது என்று **पश्यन्**

**अस्मि** அறிந்தவனாக யிருக்கிறேன். **पापासक्त** பாபகார்யங்களில் பதிந்த **हृदयमपि** மனதையும் **निरोद्धुंच** தடுக்கவும் **अपारयन् अस्मि** ஸாமர்த்யமற்றவனாக யிருக்கிறேன். **पुरहर** காமனை எரித்த பரமனே **संसाराख्ये** ஸம்ஸாரமென்ற **अन्धकूपे** பாழுங்கிணற்றில் (விழுந்து) **विषीदन्नास्मि** (மேலேகிளம்பமார்க்கமறியாது) வருந்துகிறேன் **ते** உம்முடைய **इदं** இந்த **हस्तालंबप्रपतनं** எனது பிடிப்பிற்கு ஸாதனமாகக் கீழேவிழுந்த (உமது) கரத்தை **प्राप्य** பெற்று **निर्भयोस्मि** பயமற்றவனா யிருக்கிறேன்.

வி. உ.

பரமனது ப்ரஸாதத்திற்கு ஸாதகங்களான கர்ம பக்தி ஞான யோகங்கள் பசுப்ராயர்களான பாவிகளுக்கு ச்ரம ஸாத்யமானவைகள். அவர்கள் பாபகர்மங்களைச் செய்வதால், சித்தத்தில் தமோ வாஸனைஊன்றி விவேகமிழந்து, புல்லின் ஆசையால் புல்தரைபோல் தோன்றும் பாழுங் கிணற்றின்மேல் செல்லும் மதயானை பொத்தென்று அதில்விழுந்து அழிவதுபோல்,துக்கங்களுக்கிருப்பிடமான தும் மேல் தோற்றத்தால் ஸுகம்போல் தோன்றும் விஷய மார்க்கங்களில் சென்று ஸம்ஸாரமாகிற பாழுங்கிணற்றில் விழுந்து அழிகிறார்கள்.

இப்படி திக்கற்று, ஸம்ஸார பாழுங்கிணற்றில் விழுந்து கதறும் என்னைத் தடுத்தாட்கொள்ள, உமது கருணையால் சிவபஜனத்தில் ருசியைக்கொடுத்து அப் பஜனத்தால் ஹ்ருதய குஹையில் பிரகாசிக்கும் நீரேயெனக்குத் துணைவனாகத் தோன்றி **संसारपंकनिमग्नसमुद्धरण पण्डिता**

என்ற ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தின்படி, ஸம்ஸாரமாகிற பாழுங் கிணற்றில் விழுந்து சேற்றில் அழுந்தித் தவிக்கும் என்னை கைகொடுத்துத் தூக்கி ரக்ஷிக்கிறீர்.

त्वामेवैकं हतजनिपथे पान्थमस्मिन्प्रपञ्चे
मत्वा जन्मप्रचयजलधेः बिभ्यतः पारशून्यात् ।
यत्ते धन्यास्सुरवरमुखं दक्षिणं संश्रयन्ति
क्लिष्टं घोरे चिरमिह भवे तेनमां पाहि नित्यम् ॥ २३ ॥

ப. உ.

**हे सुरवर** தேவசிகாமணியே! **हतजनिपथे** ஜனன மரணரூபமார்க்கத்துடன் கூடிய **अस्मिन्** இந்த **प्रपञ्चे** உலகில் **पान्थं** வழித்துணைவனுக **मत्वा** (உம்மை) கருதி **पारशून्यात्** அக்கரையற்ற **जन्मप्रचयजलधेः** ஜனனமரண ரூபமான விஸ்தாரமான ஸமுத்திரத்திலிருந்து **बिभ्यतः** பயப்படுகிறவர்களாய் கொண்டு **ते** உம்முடைய **यत्** யாதொரு **दक्षिणं मुखं** தெற்கு நோக்கி விளங்கும் (அகோரமென்ற) முகத்தை **संश्रयन्ति** நன்றாக வழிபடுகிறார்களோ **ते** அவர்கள் **धन्याः** பாக்யசாலிகள் **इह** இந்த **घोरे** பயங்கரமான **भवे** ஸம்ஸாரத்தில் **चिरं** வெகுகாலம் **क्लिष्टं** துக்கங்களால் வருந்தும் **मां** என்னை **तेन** அந்த தக்ஷிணமூர்த்தி முகத்தால் **नित्यं** எப்பொழுதும் **पाहि** காத்து அருளும்.

வி. உ.

अजात इत्येव कश्चिद्भीरुः प्रपद्ये ।
रुद्रयत्ते दक्षिणं मुखं तेनमां पाहि नित्यम् ॥

என்ற ச்வேதாச்வதர உபநிஷத் வாக்கியமே இந்த ச்லோகத்திற்கு விஷய வாக்யமாகும். "பரமேசனே! தாங்களோ, ஜனனமரணாதி தர்மமற்ற பரமாத்மா. நானோ அப்படிப்பட்டவனல்ல—ஜனனாதி ஷட்பாவ விகாரத்தாலும், பசிதாகம் முதலியவைகளாலும் நடுங்கினவனாய், அதை ஒழிக்க, (முக்திபர்யந்தமான எல்லாபுருஷார்த்தங்களையும் யாசிப்போர்களுக்கு அருளும் ஸாமர்த்தியத்தையுடைய) யாதொரு உமது தக்ஷிணமுகமுண்டோ அதை (தக்ஷிணாமூர்த்தி ரூபத்தை) சரணமடைகிறேன். ஸாம்ஸாரிக துக்கத்தை கருணையால் ஒழிக்கும் ஸ்வபாவத்துடன் கூடிய ஹேருத்ர மூர்த்தியே! அம்முகத்தால் என்னை எப்பொழுதும் ரக்ஷிப்பீராக" என்றபடி.

பரமேச்வரன் ஒருவரே கர்ப்ப, ஜன்ம, ஜரா, மரண, நரக ஸ்வர்க்காதி ஸம்ஸார மார்க்கங்களில் செல்லும் ஜீவர்களுக்கு வழித்துணைவராய் (மார்க்க பந்துவாய்) அவர்களுடன் தொடர்ந்து செல்கிறார். இச்சம்ஸாரத்தில் வெறுப்பை அடைந்து, நிவ்ருத்தி மார்க்க நிஷ்டையிலுள்ள ஸனகாதிகள் முதலிய மகரிஷிகளே பரம பாக்ய சாலிகள். அவர்கள் கோரமான ஸம்ஸார பயத்தை ஒழிக்க ஸமர்த்தரான தக்ஷிணாமூர்த்தி ரூபமாய் விளங்கும் பரமனது பஜனானந்த வெள்ளத்தால் ஸாம்ஸாரிக தாபங்களைத்தீர்த்து, பரமனது கிருபானந்த வாரிதியில் முழுகி, ஜீவர்கள் உய்வதற்குக் காரணமான குருநாதனின் கைங்கர்ய மகிமையைப் புகட்ட, முக்கரணத்தாலும் அவரையே மேலும் பஜித்தவண்ணமாயிருக்கிறார்கள். அந்த தக்ஷிணாமூர்த்தியே அடியேனுக்கும் சிவஞானத்தை அருளவேண்டுகிறேன்.

एकोसि त्वं शिव जनिमतामीश्वरो बन्धमुक्त्योः
क्लेशांगारावलिषु लुठतः कागतिस्त्वांविना मे ।
तस्मादस्मिन्नपि पशुपते घोरजन्मप्रवाहे
खिन्नं दैन्याकरमतिभयं मां भजस्व प्रपन्नम् ॥ २४ ॥

ப.உ.

**शिव** *பரமனே!* **जनिमतां** *(எல்லா) ஜந்துக்களுக்கும்* **बन्धमुक्त्योः** *கட்டுதல், விடுதலை இவைகளுக்கு* **ईश्वरः** *நியந்தாவாக* **त्वं** *நீர்* **एक एव** *ஒருவரே* **असि** *இருக்கிறீர்.* **क्लेशांगारावलिषु** *துக்கங்களாகிற தணல் கூட்டங்களில்* **लुठतः** *புரண்டுகொண்டு இருக்கும்* **मे** *எனக்கு* **त्वांविना** *உம்மையன்றி* **कागतिः** *வேறுகதியேது?* **पशुपते** *பசுபதியே* **तस्मात्** *அக்காரணத்தால்* **अस्मिन्** *இந்த* **घोरजन्मप्रवाहे** *பயங்கரமான பிறவி வெள்ளத்தில்* **खिन्नं** *(விழுந்து) துக்கத்தை அடைந்து* **दैन्याकरं** *எளிமைக்கே இருப்பிடமாயும்* **अतिभयं** *மிகவும் பயத்தை யடைந்தும்* **प्रपन्नं** *(உம்மையே) தஞ்சமென்று அடைந்த* **मामपि** *என்னையும்* **भजस्व** *ஏற்றுக் கொள்ளுங்கள்.*

வி. உ.

*பரமேச்வரன் ஒருவரே ஸர்வ நியந்தாவாக இருக்கிறார்.*

तमीश्वराणां परमं महेश्वरं तं देवतानां परमं च दैवतम् ।
पतिंपतीनां परमं पुरस्तात् विदाम देवंभुवनेशमीड्यम् ॥

*"ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யும் ப்ரம்மா விஷ்ணு ருத்ராதி ஈச்வரர்களுக்கும் மேலானவராதலால்,*

மஹேச்வரரென்றும், இந்திராதி தேவர்களுக்கும் மேலானவராதலால் மகாதேவனென்றும், அஷ்டதிக்பாலர்களுக்கும் மேலானவராதலால் பசுபதியென்றும், எல்லோராலும் போற்றத்தகுந்த மகிமை வாய்ந்த ஸர்வலோகநாதராக உம்மை நாங்கள் அறிகிறோம்'' என்ற ச்வேதாச்வதர உபனிஷத் வாக்கியமே இதற்கு ப்ரமாணம்.

ईश्वरः चेतनः कर्ता पुरुषः कारणंशिवः।
विष्णुः ब्रह्मा शशी सूर्यः शक्रो देवाश्च सान्वयाः ॥
सृजते ग्रसते चैतान् तमोभूतमिदं यथा ॥

''சைதன்ய வடிவான பரமசிவனே இவ்வுலகத்தைப் படைப்போன். அவரே ஸர்வஸமர்த்தன். அவரே எங்கும் நிறைந்தபொருள். அவரே ஸர்வகாரணன். ஸத்வ, ரஜோ தமோகுண உபாதி விசிஷ்டாளாயுள்ள விஷ்ணு ப்ரம்மா ருத்ரன், சந்திரன் இந்திரன் மற்றுமுள்ள தேவர்கள், அவர்களின் பரம்பரைகள், எல்லோரையும் அவரே தன்னிடமிருந்து உண்டுபண்ணி தன்னிடத்தில் லயப்படுத்திக்கொண்டு பிரளயத்தில் தான்ஒருவரே விஞ்சி நிற்கிறார்'' என்று கூறும் ஸ்ரீமத்மகாபாரத வாக்யமும் இதற்குப் பிரமாணமாகும்.

ஸர்வலோகநாதனுடைய அப்பரமனது அனுக்ரகத்தைப் பெற்றவர்களுக்கு அடிமைப் பிணியிலிருந்து விடுதலையும் அதைப் பெறாதவர்களுக்கு க்லேசங்களுக்கு இருப்பிடமான ஸம்ஸார பந்தமும் ஏற்படுகிறது.

சைவாகமங்களில், மலம், மாயை, கர்மம், தத்வ திரோதானம் என்று நான்கு விதங்களாக இக்கிலேசங்கள்

கூறப்படுகின்றன. ஞானக்ரியாசக்தியைம்மறைக்கும் தோஷமே 'மலம்' என்றும், ராகத்வேஷாதிகளுக்குக் காரணமே 'மாயை' யென்றும், பாப புண்ய கார்யங்களே 'கர்மங்கள்' என்வும், பொய்யானவைகளை மெய்யாகவும், மெய்யான பரமன் இல்லை போலும் எல்லோராலும் அனுபவிக்கப்பட்டுவரும் அஞ்ஞானமே 'தத்வதிரோதான' மெனவும் கூறப்படுகிறது.

தெய்வ வசத்தால் கிடைத்த இவ்வரிய மானிடப் பிறவியை வீணாக்கி மிருகப்பிராயமாயிருக்கும் எனக்கு என்னகதி கிடைக்கும் என்று யோசிக்குங்கால்,பகீரென்று என் ஹ்ருதயம் நடுங்குகிறது. உமது திருவடிகளைத்தஞ்ச மென்று புகுந்தேன். என்னைத்தள்ளுவது உமக்குத் தகுதியோ, இது தர்மந்தானோ? என் குற்றங்களைப் பொறுத்து அடியேனை ஏற்றுக்கொள்ளவும்.

योदेवानां प्रथममशुभद्रावको भक्तिभाजां
पूर्वं विश्वाधिक शतधृतिं जायमानं महर्षिः ।
दृष्ट्यापश्यत्सकलजगतीसृष्टिसामर्थ्यदात्र्या
स त्वं ग्रन्थिप्रविलयकृते विद्यया योजयास्मान् ॥ (२५)

ப. உ.

(हे) **विश्वाधिक** ஸர்வலோக நாதனே ! **भक्तिभाजां** பக்தர்களுடைய **अशुभद्रावकः** துக்கங்களை நாசம் செய்கிறவராயும் **महर्षिः** ஸ்வயம் பிரகாசவடிவாயுமுள்ள **यः** எந்த (பரமேச்வரரான) நீர் **देवानां प्रथमं** (ஒவ்வொரு கல்பத்திலும்) தேவர்களுக்குள் முதல்வராய் **पूर्वं जायमानं** (சிவஸங்

கல்பத்தால்) எல்லோருக்கும் முன் உற்பத்தியாகிற **शातधृतिं** (தேவவர்ஷங்களால்) நூறுவர்ஷங்கள் (பரமனுல் அருளப்பட்ட) வாழ்க்கையை உடையவராயும் உள்ள **तं** அப்பிரம்ம தேவனை **सकलजगतीसृष्टिसामर्थ्यदात्र्या** ஸமஸ்த லோகங்களையும் படைக்கப் போதிய ஸாமர்த்தியத்தை அருளக்கூடிய **दृष्ट्या** கடாக்ஷத்தால் **अपश्यत्** பார்த்து அருளினுரோ **सः** அவ்வண்ணம் மகிமை வாய்ந்த **त्वं** நீர் **ग्रन्थिप्रविलयकृते** அவித்யா விலஸாபந்தங்களை நாசம் செய்யும் பொருட்டு **अस्मान्** எங்களை **विद्यया** சிவஞானத்துடன் **योजय** சேர்த்து அருளும்.

வி. உ.

योे देवानां प्रभवश्चोद्भवश्च विश्वाधिको रुद्रो महर्षिः ।
हिरण्यगर्भं पश्यत जायमानं सनो बुद्ध्या शुभया संयुनक्तु ॥

என்ற ச்வேதாச்வதரஉபனிஷத் வாக்யமே இந்த ச்லோகத்திற்கு விஷயவாக்ய மாகும்.

**अशुभद्रावकः** க்லேசங்களை ஒழிக்கிறவர் என்பதாகும். பாதஞ்சலயோக ஸூத்ரத்தில், அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபினிவேசம் என்ற ஐந்து விதமாக க்லேசங்கள் கூறப்படுகின்றன. அவித்யைதான் மற்ற நான்குவித க்லேசங்களுக்கும் மூலகாரணமாகும். அனித்யமான தேகாதிகளில் நித்யமென்றும், அசுத்தமான சரீராதிகளில் சுத்தமென்றும், துக்கங்களான விஷய போகங்களில் ஸுகமென்றும், அனாத்மாக்களான தேகாதிகளில் ஆத்மா வென்றும், பாப கார்யங்களில் புண்ணிய மென்

றும், அனர்த்தத்தில் அர்த்தமென்றும் ஏற்படும் அவிவேக ரூபமான அத்யாஸமே அவித்தையின் லக்ஷணமாகும்.

சேதனனான புருஷனையும் ஜடமான அந்தக்கரணத்தையும் பிறித்து அறியாமல், இரண்டையும் ஒன்றாக அபிமானிப்பதே 'அஸ்மிதை' எனப்படும். ஸுகத்தை அனுபவித்தவனுக்கு ஸுகஸாதனங்களில் ஏற்படும் ஆவலே, 'ராக' மெனப்படும். துக்கத்தை அனுபவித்தவனுக்கு துக்க ஸாதனங்களில் ஏற்படும் வெறுப்பே த்வேஷமெனப் படும். 'எனக்கு மரணமுண்டாகவேண்டாம். உயிருடனேயே நான் இருக்கவேண்டும்' என்று ஸர்வஜீவர்களுக்கும் தொடர்ந்து விளங்கும் அபிமானமே 'அபினிவேசம்' எனப்படும்.

ப்ரகாசத்தைத் தவிற வேறு ஸாதனங்களால் இருட்டை ஒழிக்கமுடியாததுபோல், இக்கிலேசங்களுக்கு மூலகாரணமான அக்ஞானமும் (அவித்தையும்) அதற்கு விரோதியான ஞானத்தாலன்றி வேறு முறைகளால் ஒழிக்கப்படமுடியாது. பரம குருநாதனாக விளங்கும் பரமேச்வரன் தன்னை சரண்புகுந்தோர்களுக்கு தன் ஸ்வரூப ஞானத்தை அருளி க்லேசங்களிலிருந்து விடுதலை செய்வதால், அவரே 'அசுபத்ராவகர்'. உலகைப் படைக்கும் சதுர்முக பிரம்மதேவனுக்கும் அப்பரமனே ஞானத்தை அருளினார் என்றால் அவருடைய ஞானாதிசயத்தின் மகிமையை யாரே நிர்ணயிக்கக்கூடும்!

குருநாதன் சிஷ்யர்களுக்கு ஞானோபதேசம் செய்யும் முறையும் மூன்று விதங்களாகயிருக்கின்றன—இம்முறை

களுக்கே தீக்ஷை என்று பெயர். **मान्त्रिकी** சிஷ்யனுக்கு மந்த்ரோபதேசரூபமாயும் **स्पार्शिकी** கையால் சிஷ்யனுடைய தலையைத் தொட்டு அனுக்ரகிக்கும் ரூபமாயும் **चाक्षुषी** கடாக்ஷத்தால் சிஷ்யனை உற்றுநோக்கும் ரூபமாயும், இம் மூன்றுவிதமாக வைதிகர்களுக்கு தீக்ஷை கூறப்படுகின்றது. இவைகளுள் சாக்ஷுஷதீக்ஷையே மிகவும் மேலானது.

**दीपनादात्मबोधस्य क्षारणात्तमसोस्य च ।**
**दीक्षाशब्देन कथितं गुरोः साक्षान्निरीक्षणम् ॥**

"ஆத்மஸ்வரூபத்தை விளக்கம் செய்வதாலும், அந்தக்கரணத்திலுள்ள அஞ்ஞானமான இருட்டை நாசம் செய்வதாலும், குருநாதனது கடாக்ஷ வீக்ஷண்யமே, தீக்ஷை என்ற பதத்தால் கூறப்படுகிறது" என்று ஸ்காந்த புராணம், ஹிமாசல கண்டத்தில் உள்ள வாக்யமே இதற்குப் பிரமாணம்.

**चक्षुरुन्मील्य यस्तत्वं ध्यात्वा शिष्यं समीक्षते ।**
**पशुपाशविमोक्षाय दीक्षेयं चाक्षुषी मता ॥**

"கண்களை மூடிக்கொண்டு, சிவஸ்வரூபத்தை த்யானித்து, அத்தியானத்துடன், கண்களைத்திறந்து இவனுக்கு பசுபாசமோசன மேற்பட வேண்டுமென்றுவிரும்பி குருநாதன் சிஷ்யனை உற்றுநோக்குவதே, சாக்ஷுஷதீக்ஷை" என்று கூறும் பரசுராம தந்திரமும் இதற்கு. பிரமாணமாகும்.

ददातिशिवतादात्म्यं क्षिणोति च मलत्रयम् ।
अतो दीक्षेति सा प्रोक्ता दीक्षाशब्दार्थवेदिभिः ॥

"மலத்ரயங்களை நசிக்கச்செய்து, சிவஸ்வரூபத்தை சிஷ்யனுக்கு அருள்வதால் அது தீக்ஷை என்று அறிஞர்களால் கூறப்படுகிறது" என்று கூறும் புருஷார்த்த போதவாக்யமும் இதற்கு ப்ரமாணமாகும்.

இந்த சாக்ஷாத்தீக்ஷையையே ஸூதஸம்ஹிதையில், 'சக்திபாதம்' என்று உத்கோஷிக்கப்படுகிறது.

இவ்வண்ணம், ஒருவித ப்ரயாஸமுமின்றி அநாயாஸமாக பக்தர்களுக்கு பேரின்பத்தை அருளும் பரம குருநாதனை பரமேச்வரன் என்னுடைய அவித்யாபந்தங்களை ஒழிக்க வல்ல தனது சாக்ஷாத்தீக்ஷையால் எனக்கு அருளும்படி அவரை நான் பிரார்த்திக்கிறேன்.

यद्याकाशं शुभद मनुजाश्चर्मवद्वेष्टयेयुः
दुःखस्यान्तं तदपि पुरुषं त्वामविज्ञाय नैति ।
विज्ञानं च त्वयि शिव ऋतेत्वत्प्रसादान्नलभ्यं
तद्दुःखार्तः कमिहशरणं यामि देवं त्वदन्यम् ॥ २६ ॥

ப. உ.

**हे शुभद** ஸமஸ்த மங்களங்களையும் அருளும் பரமனே! **मनुजाः** மனிதர்கள் **आकाशं** ஆகாசத்தை **चर्मवत्** தோலைப்போல் **वेष्टयेयुः यदि** (மழை வெயில் காற்று இவைகளின் பரிகாரத்திற்காக, குடைபோல்) வளைத்துப்

போர்த்திக்கொண்டாலும் (கொள்ளலாம்); **तदपि** அப்படியாயினும் **पुरुषं** பரிபூரணனை **त्वां** (மகாதேவனை) உம்மை **अविज्ञाय** அறியாமல் **दुःखस्य** (ஸம்ஸாரக்) க்லேசத்தினுடைய **अन्तं** முடிவை **न एति** அடைகிறானில்லை. **शिव** பரமசிவனே **त्वयि** உமது விஷயமான **विज्ञानं** அநுபவ அறிவும் **त्वत्प्रसादादृते** உமதநுக்ரகத்தாலன்றி **नलभ्यं** அடையமுடியாது **तत्** அக்காரணத்தால் **दुःखार्तः** ஸம்ஸாரதாபங்களால் வருந்தும் **अहं** நான் **त्वदन्यं** உம்மைத் தவிர **कं** (வேறு) எந்த **देवं** தேவனை **इह** இப்பொழுது, (இக்கஷ்டநிவிருத்தியின் பொருட்டு) **शरणयामि** தஞ்சமடைவேன்.

வி. உ.

यदाचर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः ।
तदाशिवमविज्ञाय दुःखस्यान्तो न भविष्यति ॥

என்ற வேதவாக்கியமே இதற்கு விஷய வாக்யமாகும். "அதிஸூக்ஷ்மமானதும், புலன்களுக்குப் புலப்படாததும், எங்கும் பரவிநிற்கும் ஆகாசத்தை எவ்வளவு வன்மைவாய்ந்தவனும் எக்காலத்திலும் பிடிக்க முடியாது. வளைக்கவும் முடியாது, மழைவெயிலுக்குப் பரிகாரமாக, போர்வைபோல் போர்த்திக்கொள்ளவும் முடியாது என்பதில் ஆக்ஷேபணையில்லை. அப்படிப்பட்ட ஆகாசத்தை ஒருவன் பிடித்து வளைத்து போர்த்திக்கொண்டாலும், பரமசிவஞானமின்றி ஒருபொழுதும், ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுதலை எவனுக்கும் ஏற்பட முடியாது என்பது

ஸர்வநிச்சயம்'' तमेवं विद्वानमृतइहभवति இந்த பரமேச்வரனை ப்ரத்யகாத்மாவாக ஸாக்ஷாத்கரித்தவன் அழிவற்ற தன்மையை இப்போதே அடைகிறான். नान्यःपन्था अयनायविद्यते சிவஞானத்தைத்தவிர மோக்ஷத்தைப்பெற வேறு மார்க்கம் கிடையாது. तरतिशोकमात्मवित् (சிவாகாரமாகவிளங்கும்) தன் (ஆத்ம) ஸ்வரூபத்தை அறிந்தவனே கிலேசங்களைத் தாண்டுகிறான்.

य एतद्विदुः अमृतास्तेभवन्ति अथेतरे दुःखमेवापियन्ति

இந்த பரமாத்ம ஸ்வரூபத்தை தனது ஆத்மாவாக ஸாக்ஷாத்கரித்தவர்களே மரணமற்றவர்களாகிறார்கள். மற்றவர்களோ, துக்கரூபமான ஸம்ஸாரத்தையே அடைகிறார்கள்—என்று கூறும் எல்லா உபநிஷத்துக்களும் இதற்கு ப்ரமாணங்சள். இந்த ஆத்மஞானத்திற்கு, பரமேச்வரனது ப்ரஸாதமே அந்தரங்கஸாதனம்.

शिवप्रसादेन विनानमुक्तयः शिवप्रसादेन विनानभुक्तयः ।
शिवप्रसादेन विनानदेवताः शिवप्रसादेन हि सर्वमास्तिकाः ॥

"சிவப்ரஸாதமின்றி முக்தியில்லை, சிவப்ரஸாதமின்றி இகலோக பரலோக போகங்களும் கிடையாது. சிவப்ரஸாதமின்றி தேவதைகளுமில்லை. ஆகவே சிவப்ரஸாதத்தால்தான், முக்தி, புக்தி எல்லாம் ஜீவர்களுக்கு உண்டாகின்றன" என்றுகூறும் ஸூதஸம்ஹிதா வாக்யமும் இதற்குச்சான்று.

இப்படி வஸ்துஸ்வபாவமிருக்கிறதால், அப்பரமனது ப்ரஸாதத்தைப் பெற, அவரது திவ்ய சரணாரவிந்தங்களை

எனது இரு கைகளாலும் கெட்டியாகப்பிடித்து என்சிரசில் ஏற்றி கண்களில் ஒத்திக்கொண்டு அவைகளையே எனது பேரின்ப பொக்கிஷமாக நான் வழிபடுகிறேன்.

किं गूढार्थैरकृतकवचोगुंफनैः किं पुराणैः
तन्त्राद्यैर्वा पुरुषमतिभिः दुर्निरूप्यैकमत्यैः ।
किं वा शास्त्रैरफलकलहोल्लासमात्रप्रधानैः
विद्याविद्येश्वर कृतधियां केवलंत्वत्प्रसादात् ॥ ( २७ )

ப. உ.

(हे)विद्येश्वर வித்யாஸ்தானங்களுக்கு அதிபனே! **गूढार्थैः** ரகஸ்யமான விசேஷார்த்தங்களுடன் கூடிய வையாயும் **अकृतकवचोगुंफनैः** புருஷப்ரயத்னத்தால் அமைக்கப்படாத (வேதவாக்யங்களின்) கூட்டங்களால் **किं** யாது லாபம்? **पुराणैः** புராணங்களை (ப்ரவசனம் செய்யும்)சாமர்த்தியத்தாலும் **किं** யாதுபயன்? **पुरुषमतिभिः** மனிதர்களின் புத்தியுக்திகளால் **दुर्निरूप्यैकमत्यैः** ச்ரமப்பட்டும் ஸாதிக்கமுடியாத பலதரப்பட்ட ஸமயா சாரங்களின் ஸமரஸத் தன்மைகளுடன் கூடிய **तन्त्राद्यैः** (காமிகம், காபாலம், பாஞ்சராத்ரம் முதலிய) தந்திர சாஸ்த்ரங்களாலும் **किं** என்ன உபயோகம்? **अफलकलहोल्लासमात्रप्रधानैः** (பரமபுருஷார்த்தமாகிற) பல னென்றுமின்றி, பரஸ்பர சண்டை சச்சரவு, ஹாஸ்யம் இவைகளையே முக்யலாபமாகக் கொண்ட **शास्त्रैः** சாஸ்தி ரப்ரவசனங்களால் **किं** என்ன லாபம்? **कृतधियां** பக்குவ மடைந்தமனம் படைத்தவர்களுக்கு **त्वत्प्रसादात्** உமது

அனுக்ரகத்தால் **केवलं** மட்டும் **विद्या** சிவஞானம் (**जायते** உண்டாகிறது.)

வி. உ.

**तस्यमहतो भूतस्य निश्वसितं यदेतदृग्वेदः** அனாயாஸமாக எந்த பரமனது மூச்சுக்காற்று ரூபமாக (ஸஹஜமாக) வெளிவந்ததோ இந்த ருக்வேதம்" என்ற வேதவாக்யப்படி, புருஷ ப்ரயத்தினத்தால் செய்யப்படாதவைகளான வேதங்களே **अकृतकवचोगुंफनैः** என்பதால் குறிக்கப்படுகின்றன. அவ்வேதங்களை அத்யயனம் செய்வதால் மட்டும் சிவஞானம் ஏற்படமாட்டாது. பதினெட்டு புராணங்களை ரமணீயமாகச் சொற்பொழிவு நிகழ்த்தும் ஸாமார்த்தியத்தால் மட்டும், சிவஞானம் கிட்டாது. ஒன்றுக்கொன்று முறண்பாடுடன் கூடிய சைவம், பாஞ்சராத்திரம், காபாலம், ஆர்ஹதம் முதலிய தந்திர சாஸ்த்திரங்களால் மட்டும் என்ன உபயோகம்? அக்னி ஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம, ரஸக்ரியை முதலிய அஷ்டமாஸித்திகளாலும் பேரின்பம் கிட்டாது. இவ்வளவு சாஸ்திரங்களில் பாண்டித்யமிருந்தும், பேரானந்த வடிவான பரமனிடம் பக்தியில்லையேல், குங்குமம் சுமந்த கழுதையைப்போல், அப்பாண்டித்யம், அவனுக்குப் பெரும் சுமையாகி கர்வமாகப்பரிணமித்து, நரகக்குழியில் நேரிடச் சேர்க்கும் பாபபாரமாகவே முடியும். எஜ்ஜாதியிலுதித்தவனாயினும்,பரமனிடம் பக்தியுடன் கூடியவனேயாகில், அவன் ஒருவித சாஸ்திரமும் உணராதவனாயினும், பரமனது கருணைக்குப் பாத்திரமாகி பரம பாக்யத்தைப் பெறுகிறான் என்பதில் ஐயமில்லை.

சிவ ப்ரஸாதத்தின் மகிமையை ஒருவராலும் நிர்ண யித்துமுடிக்க முடியாது.

षद्लृ विशरण, गति, अवसादनेषु प्रसादोनाम

பகவத் கருணை ஜீவர்களுடைய அவித்யாகாமாதிகளை நாசம் செய்வதாலும், அவர்களுடைய புண்ய பாவங்களை ஒழித்து பேரின்பத்தில் சேர்ப்பிப்பதாலும், எல்லாவித ஸம்ஸாரக்லேசங்களின்முடிவையளிப்பதாலும்,'ப்ரஸாதம்' என்ற சப்தத்தால் அக்கருணையே கூறப்படுகிறது.

प्रसादे सति कीटो वा पतंगो वाथवा नरः ।
देवो वा दानवोवापि लभदे ज्ञानमुत्तमम् ॥

"பரமனது ப்ரஸாதம் எந்த ஜீவனிடத்தில் ஏற்படு கிறதோ, அந்த ஜீவன் புழுவாயினும், பறவையாயினும் நரனுயினும், தேவனுயினும் அஸுரனுயினும் அவனே ஸம்ஸார நிவ்ருத்திக்குக் காரணமான சிவஞானத்தைப் பெறுகிறுன்" என்ற ஸூதஸம்ஹிதை ப்ரம்ம கீதா வாக்ய மும் இதற்கு ப்ரமாணமாகும். ஆகவே,ஜீவனுடைய எல்லா முயற்சிகளும், காரியங்களும் இக்கருணையை அடைய ஸாதனங்களாக இல்லாவிடில் அவைகள் பாபங்களே யாகும். ஆகவே, பரமனே! எனக்கு உமது கருணை பெருகுமாறு அருள வேண்டுகிறேன்.

पापिष्ठोहं विषयचपलः सन्ततद्रोहशाली
कार्पण्यैकस्थिरनिवसतिः पुण्यगन्धानभिज्ञः ।

यद्यप्येवं तदपिशरणं त्वत्पदाब्जं प्रपन्नं
नैनं दीनं स्मरहर तवोपेक्षितुं नाथयुक्तम् ॥ (२८)

ப. உ.

(हे) स्मरहर காமனை எரித்த பரமனே! अहं நான் पापिष्ठः பாபகார்யங்களிலேயே நிலை கொண்டவன் विषयचपलः சப்தாதி விஷயலம்படன். सन्ततद्रोहशाली எப்பொழுதும் (குருநாதன் பரமேச்வரன் ஆத்மா இவர்களுக்கு) வஞ்சனை செய்யும் இயல்புடையோன் कार्पण्यैकस्थिरनिवसतिः கருமித்தன்மைக்கு நித்ய வாஸஸ்தானமானவன் पुण्यगन्धानभिज्ञः புண்ய கார்யங்களின் வாஸனையைக்கூட அறியாதவன் एवं இவ்வண்ணம் यद्यपि (தோஷங்களுடன் கூடியவனாய்) இருந்தாலும் नाथ பரமனே तत् (மகா மகிமையுடன் கூடிய) அந்த त्वत्पदाब्जं உமது திருவடித் தாமரையை शरणं ஆச்ரயமாக प्रपन्नं தஞ்சமென்று (கெட்டியாகப்) பிடித்தவனையும், दीनं ஏழையுமான मामपि என்னையும் उपेक्षितुं வெறுப்பது तव உமக்கு नयुक्तं தகுதியல்ல .

வி. உ.

यो वा एवदक्षरंगार्गि अविदित्वा अस्माल्लोकात्प्रैतिसकृपणः

"ஹேகார்க்கியே! ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வாதாரமாய், நித்யானந்த வடிவான இந்த பரமாத்மாவை, ப்ரத்யகாத்மாவாக எவன் அறிந்து கொள்ளாமல் மறிக்கிறானோ, அவனே மானிடப்பதர், அவனே க்ருபணன்" என்ற ப்ருஹதா

ரண்யக உபனிஷத்தில் ஸ்ரீயாக்ஞவல்கிய மகரிஷி கூறியபடி, நான் கார்ரப்பண்யத்திற்கு இருப்பிடமாயிருக்கிறேன்.

**पुणाति शिवंकरोतीति पुण्यं** சுபத்திற்குக்காரணமான கார்யமே புண்யமெனப்படும். தர்மமான வாஸனையில்லாத போது, தர்மியான புண்யத்திற்கு என்னிடம் இடமேது.

உமது திருவடிகளேயே தஞ்சமென்று கெட்டியாகப் பற்றினேன். வேறு வகையறியேன். 'என்னைத் தள்ளலாகாது, இவ்வேழை படும்பாடு உமக்குத் திருவுள்ளச் சம்மதமோ, இது தகுமோ, இது முறையோ, இதுதருமந் தானோ, கொடுத்தருள் நின் அருள் ஒளியை, கொடுத்தருள் இப்பொழுதே'.

**आलोच्यैवं मयि यदि भवान्नाथ दोषाननन्तान्**
**असत्पादाश्रयणपदवीं नार्हतीति क्षिपेन्माम् ।**
**अद्यैवेमं शरणविरहात् विद्धि भीत्यैवनष्टं**
**ग्रामोगृह्णात्यहिततनयं किन्नुमात्रानिरस्तम् ॥** ( २९ )

ப. உ.

**( हे ) नाथ** பரமனே! **मयि** என்னிடமுள்ள **अनन्तान्** முடிவற்ற **दोषान्** குற்றங்களை **आलोच्य** பரீக்ஷை செய்து பார்த்து **भवान्** தாங்கள் **असत्पदाश्रयणपदवीं** நம்முடைய பாதங்களில் சரண் புகும் மார்கத்திற்கு **अयं नार्हति** இவன் தகுந்தவனல்ல **इति** என்று **एवं** இவ்வண்ணம் **मां** என்னை **क्षिपेत् यदि** உதறி விடுவீரேல் **तदा** அப்பொழுது **शरणविरहात्** வேறு ரக்ஷகனற்றகாரணத்தால் **इमं** இந்த **मां** என்னை **भीत्या**

பயத்தினால் **अद्यैव** இப்பொழுதே **विनष्टं** அழிந்தவனாக **विद्धि** தெரிந்து கொள்ளும். **मात्रा** பெற்றெடுத்த தாயால் **निरस्तं** தள்ளப்பட்ட **अहिततनयं** கெட்ட பிள்ளையை **ग्रामः** கிராமத்திலுள்ள ஜனம் **किन्नु गृह्णाति** ஏற்றுக்கொள்ளுவ துண்டோ? (இல்லவே யில்லை).

வி. உ.

**मातृमान् पितृमान् आचार्यवान्वेद** என்ற வேத வாக்ய ப்படி மாதா, பிதா, குரு மூவரும் ஜீவர்களுக்கு ரக்ஷகர்கள். பிதாவும், குருவும், பிள்ளை ஸ்வல்ப அபராதம் இழைத் தாலும் அதை ஸகிக்காமல் உடனேயே அவனை த்யாகம் செய்யும் தன்மை வாய்ந்தவர்கள். தாயோவெனில், **कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति** "பெற்ற தாய்க்குத்ரோக மிழைக்கும் பிள்ளை உண்டு, ஆனால் எந்த லோகத்திலும், எக்காலத்திலும் தனக்கு அபராதமிழைத்த பிள்ளையை புறக்கணிக்கும் தாய் கிடையாது" என்ற பகவத்பாதாள் வாக்யப்படி, எக்காரணத்தாலும் தள்ள மனம்ஸகிக்காத பெற்றதாயே தன்பிள்ளையைப் புறக்கணிப்பாளேயாகில், "தாயாராலும் தள்ளப்பட்ட இந்தப் பிள்ளை என்ன பொறுக்கவியலாத அபசாரங்களை இயற்றியிருப்பானோ" என்று கருதி, ஊரில் மற்ற எவரும் அவனை விரும்பமாட்டார்கள். அவ்வண்ணம், தாய்போல் கருணை மூர்த்தியான உம்மால் நான் தள்ளப்பட்டால், வேறு திக்கற்று அப்பயத்தால் ஹ்ருதயம் வெடித்து இறந்து விடுவேன். ஆகவேபாபியான என்னை தாங்கள்தான் ஏற்றுரக்ஷிக்கவேண்டும்.

क्षन्तव्यं वा निखिलमपि मे भूतभाविव्यलीकं
दुर्व्यापारप्रणवमथवा शिक्षणीयं मनो मे ।
न त्वेवार्त्या निरतिशयया त्वत्पदाब्जं प्रपन्नं
त्वद्विन्यस्ताखिलभरममुं युक्तमीशप्रहातुम् ॥ (३०)

ப. உ.

**हे ईश** பரமசிவனே **मे** என்னுடைய **भूतभाविव्यलीकं** செய்யப்பட்டதும் இனி செய்யப்போகும் பாவம் **निखिलमपि** எல்லாம் **क्षन्तव्यंवा** (பரமேச்வரரான தங்களால்) பொறுக்கத் தகுந்ததேயாகும். **अथवा** அப்படியில்லாவிடில் **दुर्व्यापारप्रणवं** கெட்ட கார்யங்களில் மிகவு மீடுபட்ட (என்னுடைய) **मनः** மனது **शिक्षणीयं** (உம்மால்) தண்டிக்கத் தகுந்தது. **निरतिशयया** மிகவும் அதிகமான **आर्त्या** (ஸாம்ஸாரிக) கஷ்டத்தால் **त्वयि** உம்மிடத்தில் **विन्यस्त** ஸமர்ப்பிக்கப்பட்ட **अखिलभरं** எல்லா பொறுப்பையும் உடையவனுகி **त्वत्पदाब्जं** உமது திருவடித்தாமரையை **प्रपन्नं** தஞ்சமென்று கெட்டியாகப் பிடித்த **अमुं** இந்த (நீசனை) என்னை **प्रहातुं** உதறித்தள்ளுவது **न त्वेवयुक्तं** (உமக்கு) எவ்விதத்திலும் தகுதியல்ல.

அடியேனது குற்றங்களை மன்னிப்பது, அல்லது அவைகளைப் பொருட்படுத்தாது உமது ஆக்ஞா கைங்கரியத்தில் ஈடுபடும்படி மனதை சிக்ஷித்து என்னையே தடுத்தாட்கொள்வது, இவ்விரு விதமுறைகளைத் தவிற வேறு முறையான என்னை பகிஷ்கரிப்பது என்பது தீனதயாளுவான உமது கீர்த்திக்கு உசிதமல்ல. சர்வேசனல்லவா

நீர். நீர் எது செய்தாலும் அதைத்தடுப்பவரோ, காரணம் கேட்பவரோ உமக்கு எவருமில்லை. எவ்விதமாகிலும் உம்மை ரக்ஷகனுகத் தஞ்சமடைந்த அடியேனை ஏற்றுக் கொள்ளுங்கள். என்னைக் காப்பது உமது பொறுப் பல்லவோ!

सर्वज्ञस्त्वं निरवधिकृपासागरः पूर्णशक्तिः
कस्मादेनं न गणयसि मामापदब्धौ निमग्नम् ।
एकं पापात्मकमपिरुजा सर्वतोऽत्यन्तदीनं
जन्तुं यद्युद्धरसि शिव कस्तावताऽतिप्रसंगः ॥ (३१)

ப. உ.

**हे शिव** பேரின்பமூர்த்தியே **त्वं** நீர் **सर्वज्ञः** எல்லா வற்றையும் அறிந்தவராயும் **निरवधिकृपासागरः** எல்லையற்ற கருணைக்கடலாயும் **पूर्णशक्तिश्च** பரிபூர்ணமான (இச்சா, ஞான, க்ரியா) சக்தியுடன் கூடியவராயும் (இருக்கிறீர்) **आपदब्धौ** கஷ்டங்களாகிற கடலில் **निमग्नं** முழுகின **मां** என்னை **कस्मात्** எக்காரணத்தால் **न गणयसि** பொருட்படுத்தாமலிருக்கிறீரோ! **पापात्मकं** பாவமே ரூபமெடுத்த மனதுடன் கூடியவனும் **सर्वतः रुजा** எல்லா விதத்திலும் துக்கத்தால் (தாக்கப்பட்டு) **अत्यन्तदीनं** மிகவும் எளியோனுன **एनं** இந்த **एकं** ஒரு **जन्तुमपि** ஜீவனையும் **यदि उद्धरसि** தூக்கிவிடுவீரேயாகில் (**तव** உமக்கு) **तावता** அச்செய்கையால் **कः अतिप्रसंगः** சாஸ்த்ர உலகவ்யவகார எல்லையை மீறின தன்மை எப்படி உண்டாகும்?

விஉ. .

**त्वं सर्वज्ञः—ईशानः सर्वविद्यानां** "எல்லா சாஸ்திரங்களுக்கும் அதிபன் இப்பரமசிவன்" **यः सर्वज्ञः सर्ववित् यस्य ज्ञानमयं तपः** "எவர் எல்லாவற்றையும் அறிகிறவரோ, எவர் ஒவ்வொரு வஸ்துவின் விசேஷ ஞானத்துடன் கூடியவரோ, எவருடைய ஸங்கல்பம் ஞானரூபமோ" என்று கூறும், நாராயண, முண்டக, உபனிஷத் வாக்கியங்களின்படியும்;

**ज्ञानानि च वशे यस्य तारकादीन्यशेषतः**

'பிரணவாதி ஞானங்களெல்லாம் எந்த பரமேச்வரனுடைய வசத்திலிருக்கின்றனவோ" என்று கூறும் ஸ்ரீமன்மகாபாரத வசனப்படியும், பரமன் ஒருவரே, ஸர்வக்ஞன்.

**निरवधिकृपासागरः—कृपासमुद्रं सुमुखं त्रिणेत्रं** 'பக்தர்களுக்குத்தனது மந்தஹாஸத்தாலேயே இஷ்டங்களை அருளும் ப்ரஸன்னமான முகத்துடன் கூடியவரும், முக்கண் படைத்தவரும், க்ருபாஸமுத்ரமாயும் உள்ளபரமன்" என்றபடியும், இத்தீக்ஷிதேந்திரரே, தனது ப்ரம்ம தர்க்க ஸ்தவத்தில் 35—வது ச்லோகத்தில் அருளியபடி,

गंगाधृता न भवता शिव पावनीति<br>
नास्वादितो मधुरइत्यपि कालकूटः ।<br>
संरक्षणाय जगतां करुणातिरेकात्<br>
कर्मद्वयं कलितमेतदनन्यसाध्यम् ॥

"ஹே பரமேச்வரனே! பரிசுத்தமானவள் என்பதற்காக உம்மால் கங்கை (சிரஸில்) தாங்கப்படவில்லை. (பாற்கடலிலிருந்து அம்ருதமதன காலத்தில் கிளம்பின) பயங்கரமான காலகூட விஷமும், மதுரமாக (இனிப்பாக) இருந்தது என்பதற்காகவும் உம்மால் விழுங்கப்படவில்லை. மும்மூர்த்திகளாலும், முப்பத்து முக்கோடி தேவர்கள், முதலிய எவராலும் செய்யமுடியாத இவ்விரு கார்யங்களும், மூவ்வுலகிலுள்ள ஸமஸ்த ஜீவர்களையும் ரக்ஷிக்கும் பொருட்டல்லவோ, உமது காருண்யாதிசயத்தால் செய்யப்பட்டன" என்றபடி, பரமன் ஒருவரே எல்லையற்ற கருணையுடன் கூடியவர் என்றேற்படுகிறது.

**पूर्णशक्तिः** பரமேச்வரனே பரிபூரண சக்தியுடன் கூடியவர். பகீரதன் தபஸால் கங்கையைப் பிராத்திக்க, அவளும்,

वेगं तु मम दुर्धार्यं पतन्त्यागगनाच्युतम् ।
न शक्तस्त्रिषुलोकेषु कश्चिद्धारयितुं नृप ॥
अन्यत्र विबुधश्रेष्ठात् नीलकण्ठान्महेश्वरात् ॥

"(ஹே பகீரதமகாராஜனே! உன்னுடையப் பிரார்த்தனைப்படிச் செய்வேன். ஆனால்) ஆகாயத்திலிருந்து பூமியில் விழும் எனது தாங்கமுடியாத வேகத்தைத் தாங்க, மூவ்வுலகிலும் தேவாதி தேவனாய், நீலகண்டனாய் விளங்கும் மஹேச்வரன் ஒருவரைத் தவிற வேறு எவருக்கும் சக்திகிடையாது" என்ற ஸ்ரீமன்மகாபாரத வசனப்படியும்;

गंगायाः पतनंराजन् पृथिवी न सहिष्यते ।
तांवैधारयितुं वीर नान्यं पश्यामि शूलिनः

சதுர்முக ப்ரம்மதேவன் பகீரதனைப் பார்த்து "ஹே ராஜன்! (ஆகாயத்திலிருந்து) கங்கை விழும் வேகத்தை பூமிதேவி தாங்கமாட்டாள். ஹே வீரனே! சூலாயுதத்தைத் தாங்கிய பரமேச்வரனைத்தவிற வேறு (மூவ்வுலகிலும்) எவனும் அவளைத் தாங்கக்கூடியவனாக நான் காணவில்லை" என்ற ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனப்படியும்,

"நான் பூமியில் விழும்போது என்னைத் தாங்க ஒருவருமில்லையேல், பூமியை பேதித்துக் கீழேயுள்ள (அதல,விதல,ஸுதல,தலாதல, மகாதலங்களையும் தாண்டி) ரஸாதலம் வரையிலும் சென்றுவிடுவேனே!" என்று கங்காதேவி பகீரதனிடம் கூற, அவளைப்பார்த்து பகீரதன்,

धारयेद्भवतीवेगं रुद्रस्त्वात्मा शरीरिणां ।
यस्मिन्नोतमिदं प्रोतं विश्वं शाटीव तन्तुषु ॥

"குருக்கு நெடுக்குச் செல்லும் நூற்களில் வஸ்திரம் போல், இந்த பிரபஞ்சம் எவரிடம் கோர்க்கப்பட்டிருக்கிறதோ, எவர் ஸமஸ்தஜீவர்களுக்கும் ப்ரத்யகாத்மாவாக விளங்குகிறாரோ, அந்த பரமேச்வரன் உங்களுடைய வேகத்தைத் தாங்குவார்" என்ற ஸ்ரீமத் பாகவத வசனப்படியும், இந்த கங்கையைத் தாங்குவது மற்றெவராலும் ஸாதிக்கமுடியாத கார்யமென்றும், அவளைத் தாங்கினதால் பரமேச்வரரே பரிபூர்ண சக்தரென்றும் ஏற்படுகிறது.

तदुग्रवीर्यैदिशिदिश्युपर्यधो विसर्पदुत्सर्पदसह्यवीर्यम् ।
भीताः प्रजाः दुद्रुवुरंग सेश्वराः अरक्ष्यमाणाः शरणं सदाशिवम् ॥

"பயங்கரமான வேகத்துடன், திசைகளெல்லாம் பரவி, மேலும் கீழும் வியாபித்து பொருக்க வியலாத அந்த (காலகூட) விஷத்தைக்கண்டு பயந்தவர்களாய், தங்கள் நாதர்களுடன் தேவாதி பிரஜைகள், எவராலும் ரக்ஷிக்கப் படாதவராய் சதாசிவனை சரணமடைந்தனர்" என்ற ஸ்ரீமத்பாகவதவசனப்படி, காலகூட விஷத்தால் நடுங்கி ஓட்டம் பிடித்த தேவாதிகளை ரக்ஷிக்க, அவ்விஷத்தை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, விழுங்கும்போது, தனது வயிற்றிலிருக்கும் 14 அண்டங்களையும், அதிலுள்ள ஜீவர்களையும் கண்டு, அவ்விஷத்தை உள்ளே விட்டால் அவர்களுக்கும் அழிவு ஏற்படுமே என்று கருதி, தனக்கு வெளியே யுள்ளவர்களையும், உள்ளே உள்ளவர்களையும் ஒரேகாலத்தில் ஸம்ரக்ஷிக்க வேண்டி, அவ்விஷத்தை வெளியே உமிழாமலும், கழுத்துக்குகீழே செலுத்தாமலும் தனது அபார காருண்யத்தாலும் பரிபூர்ண சக்தியாலும், கழுத்திலேயே நிறுத்திக்கொண்டதால், (**शितिकण्ठः** வெளுத்த கழுத்துடன் கூடியவர் இப்பொழுது) **नीलकण्ठः** நீலகண்டர் என்ற பிரஸித்தியுடன் இப்பரமன் விளங்குகிறார்.

परास्यशक्तिःविविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रियाच ॥

"இப்பரமனது சக்தி உயர்ந்தது என்றும் பலவித மானதென்றும் கேள்விப்படுகிறோம். இச்சக்தி அவருடைய

ஸ்வபாவமாயும், ஞானம், பலம், தொழில்ரூபமாயு மிருக்கிறது" என்றுகூறும் ச்வேதாச்வதர உபனிஷத் வாக்யப்படியும் பரமனே, பரிபூர்ண சக்தியுடன் கூடியவர்.

மும்மூர்த்திகளாலும் வணங்கப்பட்ட பரமேச்வரனை எவன் நிந்திக்கிறானோ, அவனுக்குக் கணக்கற்ற சதுர்யுகங்களிலும் ப்ராயச்சித்தம் இல்லை என்று பாத்ம புராணம் கூறுகிறபடி, சிவ நிந்தையின் பாவமிருக்க, தக்ஷப்ரஜாபதி அதைச் செய்து, வீரபத்ரஸ்வாமியால் கழுத்துத் துண்டிக்கப்பட்டு, யக்ஞ பூமியில் புரள, கருணாமூர்த்தியான பரமன், அவனது தலையைப் புணைக்கும்படி செய்து அவனுக்கும் உயிர் கொடுத்து, காணாபத்ய ஸ்தானத்தையும் அருளினார் என்று ஸ்காந்த புராணம் கூறுகிறபடி, பரமனது கருணை அளவிற்கு அடங்காத வைபவத்துடன் கூடியதே.

சிலருக்கு கஷ்டப்படுபவர்களிடம் கருணை உண்டாகலாம், ஆனால் அக்கஷ்டத்தை ஒழிக்கப் போதிய சக்தியிருக்கமாட்டாது. மற்றும் சிலருக்கு அச்சக்தியிருந்தாலும் போதிய கருணை இருக்கமாட்டாது. பரமனே கருணையும் சக்தியும் இரண்டும் உருக்கொண்ட வள்ளல். காளகூட விஷபானம், காமதகனம், திரிபுர மர்தனம், கங்காதாரணம் முதலியவைகளால், அன்யாத்ருசமான சிவ சக்தி மகிமை, அவரது எல்லையற்ற கருணை, இவை வெளியாகின்றன. பரமனே என்னைக்கருணையால்! நீர் அழைத்து உமது சக்தியால் பிரம்ம லிபியான என் கெட்டதலையெழுத்தை அழித்து என்னைக்காக்க வேண்டி உமது திருவடிகளைத் தஞ்சமடைகிறேன். தாங்கள் என்னை

ஏற்பதால், ஸாதுக்கள் உமது அபார கருணையைக் கண்டு பரவசப்படுவார்களேயன்றி, உம்மை அதிகப்ரஸங்கி யென்று, தூஷிக்க மாட்டார்கள்.

अत्यन्तार्तिव्यथितमगतिंदेवमामुद्धरेति
क्षुण्णोमार्गस्तवंबत पुरा केन वाऽनाथनाथ ।
कामालंबे बत तदधिकां प्राथनारीतिमन्यां
त्रायस्वैनं सपदि कृपया वस्तुतत्वं विचिन्त्य ॥ (३२)

ப. உ.

**अनाथनाथ** திக்கற்றவர்களுக்கும் ரக்ஷகனே **अत्यन्तार्तिव्याथितं** மிகுந்த கஷ்டங்களால் நொந்து **अगतिं** கதியற்றிருக்கும் **मां** என்னை **हे देव** பரமனே **उद्धर इति** கை பிடித்துத்தூக்கிவிடுமென்று (உம்மை வேண்டிக்கொள்ளும்) **मार्गः** வழி **पुरा** முன்னால் **केनवा** எவனால் **क्षुण्णः** சீர்குலைக்க ப்பட்டது? **बत** கூறும் **अन्यां** அதைக்காட்டிலும் மேலான வேறு **कां** எந்த **प्राथनारीतिं** உம்மைத்தொழுது பிரார்திக்கும் முறையை **आलंबे** கையாளுவேன் **बत** கூறும் **तस्मात्** ஆத லால் **त्वं** நீர் **वस्तुतत्वं** (ஸ்ரீவேச்வரர்களுடைய) ஸ்வபா வத்தை **विचिन्त्य** ஆலோசித்துப் பார்த்து **सपदि** உடனே **कृपया** கருணையால் **एनं** இந்த (எளியோனை) **त्रायस्व** காத் தருளும்.

வி. உ.

மகாபாபியாயினும், சிவநாமஸங்கீர்த்தனம் செய்

வரனேயாகில், அவனுடைய பாவங்களைப் போக்கி, "உனக்கும் நான் நாதன்" என்று அவனை ரக்ஷிப்பதால், மகாதேவனே 'அநாதநாதன்'.

त्वमेकोलोकानां परमफलदःदिव्यपदवीं
वहन्तः त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः ।

"ஹேபரமசிவ! ஸர்வ ஜனங்களுக்கும் மேலான பலன்களைக் கொடுப்பவர் நீர் ஒருவரேயன்றோ! மகாவிஷ்ணு முதலிய தேவர்களெல்லாரும் (உம்மை பஜித்து அந்த பூஜாபலனாக) உம்மால் கொடுக்கப்பட்ட வைகுண்டாதி பதவிகளைப்பெற்று, மறுபடியும் (உலகிற்கு வழிகாட்ட) உம்மையே (மேலும்) ஸேவிக்கிறார்கள்." என்று சிவானந்த லஹரியில் ஸ்ரீபகவத்பாதாள் அருளிய படியும்,

सवाएष महानज आत्माऽन्नादो वसुदानः ॥

"பிறப்பற்றவராயும், எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் இப்பரமனே ஸமஸ்த பிராணிகளுக்கும் (அவரவர்கள் கர்மானுஸாரமாக) அன்னத்தை அருள்கிறவர். இவரே தனதான்யாதிகளையும் கொடுக்கிறவர்" என்ற பிருகதாரண்யக உபனிஷத் வாக்யப்படியும்,

**फलमतः उपपत्तेः** 'இந்த பரமேச்வரனிடமிருந்தே (ஜீவர்களுக்கு கர்ம) பலன்கள் கிடைக்கின்றன. (நித்யராயும் ஸர்வக்ஞராயுமுள்ள அவரே கர்ம பலன்களை அருள) தகுந்தவராயிருப்பதால், என்று கூறும் ப்ரம்ம ஸூத்திரப்படியும்,

உலகாரம்பம் முதல், ஜீவர்களுக்குத் தங்கள் இஷ்டங்களைப் பெறவும், அனிஷ்டங்களிலிருந்து விலகவும், பரமனை பிரார்த்திப்பது என்ற ஒரே மார்க்கம் தானுண்டு. அந்த மார்க்கம் நாசமடைய வில்லையே. இப்பொழுது அம்மார்க்கம் அழிந்ததென்றால் ஜீவர்களின் க்ஷேமத்திற்கு வேறு கதியேது?

என்னுடைய பாக்யவசத்தால், நம்மிருவர்களுடைய வஸ்துத்வத்தை விசாரிக்கும் காலம் ஏற்பட்டது. ஜீவன் யார்! ஈசன் யார்! மலின ஸத்வப்ரதானமான அவித்தையில் ப்ரதிபலிக்கும் பரபிரம்மமே ஜீவனெனப்படுவான். சுத்த ஸத்வப்ரதானமான மாயையில் ப்ரதிபலித்த பரப்பிரம்மமே ஈசனெனப்படுவான். மலின்ஸத்வம், சுத்த ஸத்வமென்ற மாயா உபாதிபேதத்தால், ஜீவன் வேறாகவும் ஈசன் வேறாகவும், இருவரும் பரஸ்பரம் விலக்ஷணமான ஸ்வபாவத்துடன் கூடியவர்களைப் போலும் தோன்றுகிறார்கள். அப்பேதத்திற்குக் காரணமான உபாதிகளை நீக்கிப்பார்க்குங்கால், பாரமார்த்திகமாக இருவரும் ஒரே அகண்டசைதன்ய தத்வமல்லவா.

ஈசனே, என்னை உம்மைக்காட்டிலும் வேறாக மதிக்கக்காரணமான அவித்யையை உமது ஸ்வரூபபோதத்தால் ஒழித்து, என் ஸ்வபாவானந்தத்தை நான் அனுபவிக்கச் செய்யுங்கள்.

एतावन्तं भ्रमणनिचयं प्रापितोऽयंवराकः
श्रान्तस्वामिन्नगतिरधुना मोचनीयस्त्वयाहम् ।

कृत्याकृत्यव्यपगतमतिः दीनशाखामृगोऽयं
सन्ताडयैनं दशनविवृतिं पश्यतस्ते फलंकिम् ॥ (३३)

ப. உ.

**हे स्वामिन्** நாயகனே! **एतावन्तं** இதுகாறும் **भ्रमणनिचयं** (கோடிக்கணக்கான யோனிகளில்,நரக, கர்ப்ப, மரண ரூபமான) சுழல் கூட்டத்தில் **वराकः** ஹீன ஜந்துவான **अहं** நான் **प्रापितः** சேர்க்கப்பட்டேன் **श्रान्तः** களைத்தவனும் **अगतिः** திக்கற்றவனும் (இருக்கிறேன்) **अधुना** இப்பொழுது **त्वया** உம்மால் **अहं** நான் **मोचनीयः** விடுவிக்கத்தகுந்தவன். **कृत्याकृत्यव्यपगतमतिः** செய்யத்தகுந்ததையும், விலக்கத்தகுந்ததையும் அறியாது புத்தியற்றவனாய் **दीनः** எளிய**शाखामृगः** (வாலில்லாத) வானரத்திற்கு ஸமமாக **अयं (अस्मि)** இந்த நானிருக்கிறேன். **एनं** இந்த குரங்கை **सन्ताडय** தடியாலடித்து **दशनविवृतिं** (அது நடுக்கத்தால்) பல்லைக்காட்டுவதை **पश्यतः** பார்க்கும்படியான **ते** உமக்கு **किंफलं** என்னலாபமோ (தெரிய வில்லை.)

வி. உ.

பரமனது மாயையால் இந்த ஸம்ஸார ஸமுத்திரத்தில் வீழ்த்தப்பட்டு **पश्वादिभिश्च अविशेषात्** "நாற்கால் பிராணிகளுக்கும், ஆத்ம ஞானமற்றவர்களுக்கும், ஒருவித வித்யாஸமும் இல்லை" என்று பிரம்ம ஸூத்திர பாஷ்யாரம்பத்தில் ஸ்ரீபகவத்பாதாள் அருளியபடி, நானும் என் ஸ்வரூபத்தை அறியாது, மிருகப்ராயமாய், விதிவிலக்கற்று மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டு, மேலும் கஷ்டங்களையே பலனாகப் பெற்று வருந்துகிறேன்.

கிடைப்பதற்கரிய இம்மானிடப்பிறப்பில், பசுப்பிராய மான எளியோனான என்னை பசுபதியான நீர் உமது கட்டி லிருந்துவிடுதலையைச் செய்யாவிட்டால்,எனக்கு வேறு கதி யேது ? எனக்கு மருபிறப்பு என்னவாகுமோ! இப்பிறவியி லேயே, இப்பொழுதே, (அடுத்த க்ஷணம் என் உயிர் இச் சரீரத்தில் நிற்பது ஸந்தேகமாதலால்,) என் சரீரம் இந் திரியங்கள் சித்தம் எல்லாம் ஸ்வாதீனமாயிருக்கும்போதே சிவ ஞானத்தை அருளி என் அக்ஞான பாசத்தை அவிழ்த்து விடவும்.

நான் குரங்குக்குமேல் சபலசித்தன். மோகமென்ற காட்டில் அலைந்து கொண்டு, யுவதிகளின் குசங்களாகிற மலைகளில் ஏரிக் குதித்துக்கொண்டு, விஷய ஆசைகளாகிற கிளைகளை ஒன்றொன்றாக தாண்டிக்கொண்டும் விதிவிலக் கற்று அலைந்து திரியும் குரங்குக்கு ஸமமாக நானிருந்தா லும், என்னைக்கட்டி வாட்டுவதால், பரமனே உமக்கு என்னலாபம்? குரங்காட்டிக்கு குரங்கைக் கட்டிவைப்பது ஜீவனோபாய மென்றாலும், அவாப்தஸமஸ்தகாமனாயுள்ள பரமேசனான உமக்கு, என்னை இப்படிக்கட்டிவைப்பதில் லாபமொன்றுமில்லாததால், ஆசாபாசமாகிற என் கட்டை யும் அவிழ்த்து, எனக்கு ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடு தலையை அளிக்கும்படி யாசிக்கிறேன்.

मातातातस्सुतइति समाबध्य मां मोहपाशैः
आपात्यैवं भवजलनिधौ हा किमीश त्वयासम् ।
एतावन्तं समयमियतीमार्तिमापादितेऽस्मिन्
कल्याणी ते किमिति न कृपा कापि मे भाग्यरेखा ॥ (३४)

ப. உ.

हे ईश பரமசிவனே! माता तातः सुतः इति தாய் தந்தை புத்திரனென்ற मोहपाशैः மோகமாகிற கயிற்றால் मां என்னை समाबध्य நன்குகட்டி भवजलनिधौ ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் आपात्य தள்ளி त्वया உம்மால் किं என்ன (லாபம்) आप्तं பெறப்பெற்றது? हा கஷ்டம் एतावन्तं समयं இந்த க்ஷணம்வரையில் इयतीं இப்படிப் பட்ட आर्तिं கஷ்டத்தை आपादिते அடைவிக்கப்பட்ட अस्मिन् இந்த என்னிடத்தில் कल्याणी பரம மங்களகரமான ते உம்முடைய कृपा கருணை किमिति न ஏன் இல்லையோ! (அக்கருணைக்குக் காரணமான) कापि ஏதாவது भाग्यरेखा ஸௌபாக்கியத்தை ஸூசிக்கும் ஒரு ரேகையும் मे எனக்கு किमिति न இல்லையா என்ன?

வி. உ.

मातातातस्सुतइति—

का ते कान्ता कस्तेपुत्रः संसारोयमतीवविचित्रः ।
कस्यत्वं कुत आयातः तत्त्वं चिन्तय तदिदंभ्रातः ॥

"உன்னுடைய மனைவி யார்? உனது புத்திரன் யார்? இந்த ஸம்ஸாரம் மிகவும் விசித்திரமாயிருக்கிறது. நீ யாருடையவன்? எவ்விடத்திலிருந்து வந்திருக்கிறாய்? ஏ தம்பி! இதனது உண்மையை நன்கு விசாரி" என்ற ஸ்ரீபகவத்பாதாள் வசனப்படி, நன்கு விசாரிக்காமல் அவிவேகத்தால் தன்னுடைய பந்துக்களாக புத்திர பார்யா

திகளைக் கருதுகிறோம். இந்த அவிவேகமே மோகமெனப் படும். இந்த மோகந்தான் ஸம்ஸார வ்யவகாரங்களுக்குக் காரணம்.

यदध्रुवस्य देहस्य सानुबन्धस्य दुर्मतिः ।
ध्रुवाणि मन्यते मोहात् गृहक्षेत्रवसूनिच ॥
आत्मजायासुतागारपशुद्रविणबन्धुषु ।
निरूढमूलहृदयः आत्मानं बहुमन्यते ॥

"விவேகமற்ற இந்த ஜீவன், புத்ரகளத்திராதிகளுடன் கூடிய நிலையற்ற இந்த தேகத்தைச் சார்ந்த, வீடு, காணி, பணம் இவற்றை மோகத்தால் (என்னுடையவை என்ற அபிமானத்தால்) சாச்வதமாகக் கருதுகிறான். சரீரம், பத்னீ, புத்திரன், வீடு, பசு, பணம், பந்து இவைகளில் நிலைத்து வேரூன்றின மனமுள்ளவனாய், தன்னை (வாழ்க்கையின் பரம லக்ஷியத்தை அடைந்த) கிருதார்த்தனாக எண்ணிக்கொள்கிறான்.

अर्थैरापादितैर्गुर्व्या हिंसयेतस्ततश्चतान्
पुष्णाति येषां पोषेण शेषभुग्याति अधःस्वयम् ॥
न तथास्य भवेन्मोहो बन्धश्चान्यप्रसंगतः ।
योषित्संगाद्यथा पुंसः तथा तत्संगसंगितः

"இங்குமங்கும் செய்த பெரிய ஹிம்ஸையால் ஸம்பாதித்த பொருள்களைக்கொண்டு, எவர்களை போஷிப்பதால் நரகத்தை அடைவனோ அவர்களைப் போஷித்து, மிகுந்ததைத்தான் புஜித்தவனாயிருக்கிறான். புருஷனுக்கு

ஸ்த்ரீகளிடம் சேர்க்கையுள்ளவர்களின் ஸங்கத்தால் மோக மெவ்வித முண்டாகுமோ, அவ்விதம் ஸ்த்ரீஸங்கத்தால் மோகமுண்டாகாது. ஸ்த்ரீகளின் ஸங்கத்தால் எவ்விதம் பந்தமுண்டாகுமோ அவ்விதம் இவனுக்கு வேறு பொருளின் ஸங்கத்தால் பந்தமுண்டாகாது'' என்று ஸ்ரீமத்பாகவதத்தில் கூறியபடி, ஸ்த்ரீஸங்கத்தையே தொழிலாகக்கொண்டு குடும்பராமனாக ஸம்ஸாரப் படுகுழியில் விழுந்து தபிக்கிறேன்.

புண்யங்களால் தேவசரீரங்களையும், பாபங்களால் ஸ்தாவராதி சரீரங்களையும், பாபம் புண்யம் இரண்டின் கலப்பால் மனுஷ்ய சரீரங்களையும் ஜீவர்கள் அடைகிறார்கள் என்று சாஸ்த்ர ஸித்தாந்த மிருக்கிறது. ஆகவே மனுஷ்ய ஜன்மமெடுத்திருக்கும் எனக்கும், பாபங்களுடன் கூட சிறிதளவாவது புண்யக்கலப்பு இருந்தே தீரவேண்டும். அந்த புண்யமான பாக்ய ரேகை இருந்தும், உமது அருள் ஏற்பட வில்லை யென்பது தகுதியல்ல. அத்துடன் உமது அவ்யாஜகருணையும் சேர்ந்தால் எனக்கு என்ன குறை? ஆகவே, புத்ர மித்ராதிகளிடமுள்ள, துக்கங்களுக்குக் காரணமான என்னுடைய மோகபாசத்தை உமது கருணையால் விலக்கி என்னை ரக்ஷித்தருளும்.

भुंक्षे गुंसंवत सुखनिधिं तात साधारणं त्वं
भिक्षावृत्तिं परमभिनयन्मायया मां विभज्य ।
मर्यादायास्सकलजगतां नायकस्थापकस्त्वं
युक्तं किं तद्वद विभजनं योजयस्वात्मना माम् ॥ (३५)

ப. உ.

**हे तात** அப்பனே **त्वं** நீர் **मायया** மாயையால் **मां** என்னை **विभज्य** பிரித்து **भिक्षावृत्तिं** பிச்சை யெடுக்கும் தொழிலை **परं** நன்றாக **अभिनयन्** மேல் வேஷமாகக்காட்டிக் கொண்டு **साधारणं** (நம்மிருவருக்கும்) பொதுவான **गुप्तं** மறைந்துள்ள **सुखनिधिं** ஆனந்த பொக்கிஷத்தை **भुंक्षे** அனுபவிக்கிறீர். **त्वं** நீர் **सकलजगतां** எல்லா உலகங்களுக்கும் **नायकः** ஆட்டிவைக்கும் யஜமானன். **मर्यादायाः** (லோக சாஸ்த்ர) எல்லைக்கும் **स्थापकश्च** நிலை நாட்டுபவராகவும் **असि** இருக்கிறீர். **तस्य** அப்படிப்பட்ட **ते** உமக்கு **इदं** இந்த **मद्विभजनं** என்னைப் பிறித்திருப்பது **युक्तं किं** தகுதிதானோ! **वद** கூறும் **आत्मना सहैव** உம்முடன் கூடவே **मां** என்னை **योजय** (ஆனந்தத்தை அனுபவிக்கும்படி) சேர்த்துக்கொள்ளுங்கள்.

வி. உ.

பரமேச்வரன் பிச்சைக்காரன் போலும் ஆண்டி போலும் பித்தன் போலும் தோன்றுவது, வேஷத்திற்கல்லவா, உண்மையில் அவர் அப்படிபபட்டவரல்ல.

**यस्यब्रह्म च क्षत्रं च उभेभवत ओदनः ।**

**मृत्युः यस्योपसेचनं क इत्थावेद यत्रसः ॥**

“ எவருக்கு ப்ரம்மக்ஷத்ராத்மகமாகவுள்ள ஸமஸ்த உலகங்களும் அன்னமோ, யமனே எவருக்கு சட்னியோ (வ்யஞ்சனமோ) அப்படிப்பட்ட பரமனை எவன்தான் இப்படிப்பட்டவன் ஏன்று தீர்மானிக்கமுடியும்” என்று

கடோபநிஷத் கூறும்போது, இவர் உண்மையான பிச்சைக்காரரென்றால், இப்படி ஸர்வபக்ஷகரான இவருக்கு பிச்சைபோட எவனுக்குத்தான் சக்தியுண்டு? இவரல்லவோ உலகிற்கு அன்னத்தைக்கொடுத்து அருள்பவர். ஆகவே பரமார்த்தமாக நித்யசுத்த புத்த முக்த வடிவான பரமன், பேரானந்த பொக்கிஷமாக இருந்து, வெளிநோக்கமுள்ளவர்களுக்கு வேஷதாரிபோல் பல்வேறு தோற்றங்களுடன் தோன்றினாலும், பேரின்பத்திலேயே நிலையுள்ள ஸ்வபாவமுள்ளவர் என்பதில் ஆக்ஷேபணையில்லை.

இந்த பேரின்ப பொக்கிஷத்திற்கு ஜீவாத்மாவும் பாத்யதையுள்ளவன். இதையே ஆப்தவாக்யமும் ருஜுப்படுத்துகிறது.

केयं दुर्नीतिरेषा वदभवति कदावाऽस्ति किं नौ विभाग:
दैवादैश्वर्यमाप्तं निरवधिभवता किं न भोक्तृता मे ।
तत्कुर्वेतन्नकुर्वित्यपिवदसि समं पश्य नो चेत्
कूटस्थे त्वां निवेद्यस्थिरमपिभवेदैश्वर्यमुन्मूलयामि ॥

“உம்மிடத்தில் இந்த நியாய விரோதமெதற்கோ! நம்மிருவர்களுக்கும் பாகபத்திரம் எப்பொழுதாவது இருக்கிறதா? ப்ரம்மத்தினிடமிருந்து எல்லையற்ற ஈச்வரத்தன்மை உம்மால் அடையப்பட்டதே. அதின் அனுபவ பாத்யம் எனக்குமட்டும் ஏனோ இல்லை. இதைச்செய், இதை விலக்கு என்று உத்திரவு செய்கிறீர். என்னை ஸமமாகப் பார்க்கவேண்டும். இல்லையேல் ஈசனை உம்மை கூடஸ்தனை ப்ரம்மத்தினிடம் தெரியப்படுத்தி, ஸ்திர

மாயிருக்கக்கூடியதாயினும், உமது ஸம்பத்தை அழியும் படி செய்வேன்'' என்றபடி,

ப்ரம்மத்திற்கு மாயையென்ற ஸ்த்ரீயிடம் பிறந்தவர்களே ஈச்வரன், ஜீவன் என்ற இருகுமாரர்கள். ஆகவே, ப்ரம்மத்தின் சொத்தான பேரின்ப பொக்கிஷம், இந்த இரு குமாரர்களுக்கும் சொந்தமானதே. ஈச்வரன் அச்சொத்தை அநுபவித்து, அவ்வைச்வர்ய மகிமையால்,ஜகத்தின் ஜன்ம, ஸ்திதி, பங்கம், திரோதானம், அனுக்கிரகம் என்ற கார்யங்களைச் செய்துகொண்டு, தனது தம்பியான ஜீவனுக்கு அந்த பொது சொத்தான பேரின்பஸுக அநுபவ பாத்யம் இருந்தும், அதைக் கொடுக்காமல் 'நீ தர்மத்தைச்செய், அதர்மத்திலிருந்து விலகு' என்று வேலைக்காரனைப் போல் ஏவி,ஊழியம் செய்யச் சொல்லுவதும் நீதியாகுமோ

**स सेतुः विधृतिः एषां लोकानां असंभेदाय** "இவரே தர்ம ஸேது. இந்த உலகங்களின் வ்யவஸ்தை நழுவாமலிருக்க தர்மரூபமாக இருந்து தாங்குகிறவர் இப்பரமனே'' என்ற வேதவாக்யப்படி, தர்மரக்ஷகராகவும், தர்மஸ்தாபகராயுமுள்ள பரமேச்வரன் தன்தம்பியான ஜீவனுக்கு நியாயப்படிச் சேரவேண்டிய ஸுகநிதியை கொடுத்தே தீரவேண்டும்.

ஜீவன் அவித்யை யென்ற வேசியுடன் கலந்து, தன்னுடைய ப்ரம்மபரம்பரா தர்மத்தை அறியாமல், அக்ஞானத்தால்,ஸுகதுக்காதி ஸம்ஸாரதர்மத்தை அபிமானித்து, மைனராக இருக்கும்தன்மையில், ஈசன் அவ்விதம் அவனை தாஸனைப்போல் ஊழியம் செய்வித்து, படிகூலி கொடுத்து வந்தாலும், அந்த வேசியாகிற அவித்

த்தையைத் தள்ளிவிட்டு "நானும் பரப் பிரம்மபாம்பரையிலிருந்து உதித்தவன், ஆகவே ஆத்மஸாம்ராஜ்யத்திற்குயுவராஜா" வென்று மேஜராக இருக்கும் தன்மையில், ஸகோதரனை ஈசன் தன் பித்ரார்ஜித சொத்தான பேரின்பநிதியினனுபவத்திலிருந்து இனியும் மறுத்தால், நியாயாதிபதியான பகவான் வ்யாயாசாசார்யாளின் முன்னிலையில் வியாஜ்யம் தொடுத்து, இவ்விருவர்களின் வ்யவஹாரமூலமாய் இவர்களுடைய ஸகல ஐச்வர்யத்திற்கும் மூலமான மாயைக்கு நாசம் ஏற்பட்டு 'நாமிருவர்' என்ற பேதமும் ஒழிந்து அதிஷ்டானமான நிர்விசேஷ ப்ரம்மரூபமாகவே மிச்சமாகும்.

ஆகவே, இனியாவது உம்முடன் என்னையும் சேர்த்துக்கொண்டு பேரின்பநிதியின் அநுபவத்தை கொடுத்தருளும்.

नत्वा जन्मप्रचयजलधेरुद्धरामीतिचेद्धीः
आस्तां तन्मे भवतु च जनिर्यत्रकुत्रापि जातौ ॥
त्वद्भक्तानामनितरसुखैः पादधूलीकिशोरैः
आरब्धं मे भवतु भगवन् भाविसर्वं शरीरम् ॥ (२६)

ப. உ.

**हे भगवन्** ஷாட்குண்ய பரிபூரணரே! **त्वा** உன்னை **जन्मप्रचयजलधेः** பிறவிகளின் கூட்டமாகிற ஸமுத்திரத்திலிருந்து **न उद्धरामीति** கரையேற்றமாட்டேனென்று (உமக்கு) **धीः** தீர்மானம் **चेत्** இருக்குமேயாகில் **तत्** அது **आस्तां** (சிவஸங்கல்பப்படியே) இருக்கட்டும் **मे**

எனக்கு **जनिः** பிறப்பு **यत्रकुलापि जातौ** எவ்விடத்திலோ எந்த ஜாதியிலோ **भवतुच** ஏற்படட்டும் **त्वद्भक्तानां** உமது பக்தர்களுடைய **अनितरसुखैः** ஒப்பற்ற ஸுகத்தை அளிக்கக்கூடிய **पादधूलीकिशोरैः** பாத கமலங்களிலிருந்து உதிர்ந்த சிறிய பரமாணுக்களால் **मे** என்னுடைய **भावि** இனி வரப் போகும் **सर्वं** எல்லா **शरीरं** தேகமும் **आरब्धं** உண்டாக்கப் பட்டதாக **भवतु** ஆகட்டும்.

வி. உ.

ஸம்ஸாரக் கடலிலிருந்து அக்கரையான மோக்ஷத்தில் என்னைத் தூக்கிவிட உமக்கு திருவுள்ள மில்லையேல், உமது ஸங்கல்பப்படியே நானிப்பிறவிக்கடலில் பிறந்து கஷ்டப்பட்டு மரிக்கின்றேன். நான் பிறந்து கஷ்டப்படுவது உமக்கு ஸம்மதமானால், உம்முடைய ப்ரீதியை வளர்க்கும் என்னுடைய பிறவிகளை நான் வெறுக்கமாட்டேன். ஆகவே நான் உம்மிடம் மோக்ஷத்தை யாசிக்கவில்லை. பின் எப்பிறவியிலும்,(அது தேவ மனுஷ்ய மிருக பக்ஷி தாவர சரீரமாயிருந்தாலும்,) சிவயோகிகளின் பாதாரவிந்த தூள்களால் செய்யப்பட்ட சரீரத்தை எனக்குக் கொடுங்கள். அதாவது, பகவத்பாதாளின் சரணங்களில் ரதியும், ஸேவையும் எனக்கு அருளுங்கள் என்பதாம்.

**निरपेक्षं मुनिंशान्तं निर्वैरं समदर्शिनं ।**
**अनुव्रजाम्यहं नित्यं पूयेयेत्यंघ्रिरेणुभिः ॥**

“ எங்கும் வியாபித்து விளங்கும் பரமனைப் பார்க்கும் ஸ்வாபவத்துடன் கூடியவராயும், பேதத் தோற்ற மில்லாத

தால், த்வேஷபாவ மற்றவராயும், அக்காரணத்தாலேயே நிரபேக்ஷராயும், அமைதி நிலையுடன் கூடியவராயும், முனியாயுமுள்ளவரை, அவர்களுடைய பாததூள் என்மேல் பட்டு நான் பரிசுத்தனாக ஆவதற்கு நான் பின் தொடர்கிறேன்" என்று ஸூதஸம்ஹிதையிலுள்ள பரமேச்வரனின் வாக்யமே இதற்கு ப்ரமாணமாகும். அப்படி மகா மகிமைவாய்ந்த ஞானிகளின் பாததூள்களால் என் சரீரம் பூசப்பட்டதாக இருந்தால் அதே எனக்குப்போதும். வேறு ஒருவிதகுறைவுமில்லை.

कीटानागास्तरवइति वा किन्नसन्तिस्थलेषु
त्वत्पादांभोरुह परिमलोद्वाहिमन्दानिलेषु ।
तेष्वेकंवासृज पुनरिमं नाथ दीनार्तिहारिन्
आतोषन्ते मृड भवमहांगारनद्यां लुठन्तम् ॥ (३७)

ப. உ.

**नाथ** பரமனே! **त्वत्पादांभोरुहपरिमलोद्वाहिमन्दानिलेषु** உமது பாதங்களாகிற தாமரை மலர்களின் வாஸனையுடன் கூடிய தென்னல் காற்று வீசும் **स्थलेषु** பிரதேசங்களில் **कीटाः** புழுக்கள் **नागाः** பாம்புகள் **तरवः** மரங்கள் **इति** என்ற (ஜந்துக்கள்) **किन्नसन्ति** இருக்கவில்லையா? **मृड** ஸுகத்தை அருளும் பரமனே! **दीनार्तिहारिन्** எளியோர்களின் துக்கங்களைத் தொலைப்பவரே! **भवमहांगारनद्यां** ஸம்ஸாரமாகிற பெரிய நெருப்புத்தணல்களுடன் கூடிய நதியில் **लुठन्तं** புரளும் **इमं** இந்த

என்னை **तेषु** அந்த ஜந்துக்களுக்குள் **एकवा** ஒரு ஜந்துவாக வாவது **ते** உமக்கு **आतोषं** ஸந்தோஷமேற்படும்வரையில் **पुनः सृज** அடிக்கடிபடையுங்கள்.

வி. உ.

नरत्वं देवत्वं नगवनमृगत्वम्मशकता
पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादि जननम् ।
सदा त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरी
विहारासक्तं चेत् हृदयमिह किन्तेन वपुषा ॥

"மனிதன் தேவன், மலை, வனம், மிருகம், பக்ஷி, கொசு, பசு, புழு, முதலியபல்வேறு பிறவிகளில் (எனது கர்மாதீனமாக எனக்கு) எப்பிறயாவது உண்டாகட்டும். ஆனால் (அப்பிறவிகளிலெல்லாம்) என்மனம் மட்டும் எப்பொழுதும் உமது பாதாரவிந்த ஸ்மரணமாகிற சிவானந்த வெள்ளத்தில் மூழ்கிக்களிக்கப் பெறுவேனேயாகில், மேல் கூறிய சரீரங்களால் எனக்குநேரும்குறையென்ன? எந்த சரீரத்தை அடைந்தாலும் குற்றம்யாது மில்லை" என்று அன்வயமுகமாக சிவானந்த லஹரியிலும்

शरीरं सुरूपं ततोवा कलत्रं यशश्चारुचित्रं धनं मेरुतुल्यम् ।
गुरोरंघ्रिपद्मेमनश्चेन्नलग्नं ततः किं ततः किं ततः किं ततःकिम् ॥

"நல்ல அழகிய சரீரலாவண்யம் பெற்றென்னலாபம்? நல்ல அழகிய பத்னியை அடைந்தென்னலாபம்? பலதரப் பட்ட அற்புதமான கீர்த்தியையும் அடைந்தென்னலாபம்?

மேருமலைக்கு ஸமமானசெல்வம் படைத்தும் லாபந்தான் என்ன? தனது அடியார்களுடைய ஸமஸ்தஸாம்ஸாரிக துக்கங்களையும் ஒழிக்கும் குருநாதராக விளங்கும் பரமனின் பாதாரவிந்தங்களில் மனம் பதியாவிடில் இவையாவும் வீணேயாகும்.'' என்று வ்யதிரேக முகமாகவும் ஸ்ரீபகவத்பாதாள் திருவாய் மலர்ந்தருளியபடி,சிவபக்தியல்லவோ விவேகிகளால் நாடத்தகுந்தது. அப்பக்தியை அடையவல்லவோ மனுஷ்யாதி சரீரங்கள் அறிக்ஞர்களால் விரும்பப்படுகின்றன. பக்திக்கு ஆச்ரயமாக இருக்கிற காரணத்தாலல்லவோ, அந்த மனுஷ்யாதி சரீரங்கள் மகான்களால் மகிமையுடன்கூறப்படுகின்றன.

உமது பக்தர்கள் உமது திவ்ய கல்யாண குணாதிசயங்களை அனுபவித்து, அந்த வாஸனையுடன் கூடிய அந்தக்கரணத்துடன், லோகத்திற்கே மந்த மாருதம்போல் ஹிதத்தைச்செய்யும் சீலர்கள். அவர்களுடைய ஸம்பந்தம் படும் படியான பாறையின் ஜன்மமாயினும், அதே மேலானது. அதே பரம பாக்யம். உமது திருவடி மலர்களில் பக்தி லேசமற்றவர்களின் ஸம்பந்தமடைந்த மேலான மனுஷ்ய ஜன்மமும் இகழத்தகுந்ததன்றோ!

कालेकण्ठस्फुरदसुकलालेश सत्तावलोक

व्याघ्रोदग्रव्यसनिसकलस्निग्धरुद्धोपकण्ठे ।

अन्तस्तोदैरवधिरहितैः आर्तिमापाद्यमानेपि

अंघ्रिद्वंद्वे तवनिविशतामन्तरात्मन् ममात्मा ॥ (३८)

ப. உ.

**हे अन्तरात्मन्** ஸர்வாந்தர்யாமியே.

**कण्ठस्फुरदसुकलालेशसत्तावलोकव्यग्रोदग्र व्यसनिसकलस्निग्धरुद्धोपकण्ठे**

கழுத்தில் (துடிப்பதால்) ப்ரகாசிக்கும் (ப்ராண)வாயு சிறிது இருப்பதைக்கண்டு அதிக பரபரப்புடன், மிக வ்யாகூலத்தையடைந்த எல்லா பந்து மித்ராதிகளால் கழுத்துக்கு ஸமீபத்தில் பிடிக்கப்பட்டு **अवधिरहितैः** எல்லையற்ற **अन्तस्तोदैः** உள்ளே (ஊர்த்வச்வாசத்தால், நாக்கு வற்றி, கபாதிகளால் கண்டமடைபட்டு, யமதூதர்களைக் கண்டு மனம் ஊஞ்சலாட) இது முதலிய சரீரபாதைகளால் **आर्ति** கஷ்டத்தை **आपाद्यमानेऽपि काले** அடையும் காலத்தில் கூட **मम** என்னுடைய **आत्मा** மனம் **तव** உம்முடைய **अंघ्रिद्वंद्वे** இருபாதகமலங்களிலும் **निविशतां** நுழையட்டும்.

வி. உ.

ப்ராணோத்க்ரமண காலத்திலுள்ள வேதனைகளை முழுமையும் வர்ணிக்கமுடியாது. ஸந்திபந்தங்கள் தளர, தேகம் ஸ்வாதீனமற்று கட்டையைப்போலாக, இந்திரியங்கள் சக்தியிழந்து, கண்கள் பஞ்சடைய, வாக்கு உளர, கண்டத்தில் கபமடைக்க, பெண்டீர் பிள்ளைகளின் பண ஸமாசாரக்கேள்விகளாலும் மனம் கலங்க,ஸர்ப்பம்,தேள் பாழும் கிணறு இவைகளுடன் கூடிய ஸ்வப்னங்கள் ஏற்பட்டு நடுநடுங்க, யமதூதர்களைக் கண்டு பயந்து மனம் துடிக்கும் இச்சரமாவஸ்தையில், பரமனிடம் ஒருகாலும் சித்தம் செல்ல சக்தியற்றதாகிறது. கடைசி காலத்தில்

ஏற்படும் பகவத் ஸ்மரணம் தான் மோக்ஷத்திற்கு ஸாதன மானதால், அக்காலத்தில் பகவத்ஸ்மரணம் பகவத் கருணை யாலல்லாது வேறு முறையால் கிடைக்காது. ஆகவே, அம் மரணகாலத்திலும் பகவத்ஸ்மரணையை கொடுத்தருளும்.

अन्तर्बाष्पाकुलितनयनानन्तरंगानपश्यन्
अग्रेघोषंरुदितबहुलं कातराणामशृण्वन् ।
अप्युत्क्रान्तिश्रममगणयन्नन्तकाले कपर्दिन्
अंघ्रिद्वंद्वे तवनिविशतां अन्तरात्मन् ममात्मा ॥ (३९)

ப. உ.

**हे कपर्दिन्** கங்கையை ஜடையில் தரித்தவரே! **मम** என்னுடைய **अन्तकाले** மரணகாலத்தில் **अन्तर्बाष्पाकुलितनयनान्** மனதிலுள்ள துக்கவேதனையாலுண்டாகும் கண்ணீரால் கலங்கிய கண்களை யுடையவரும் **अन्तरंगान्** மிக நெருங்கிய (பார்யாள் புத்ராள் முதலான) வர்க ளையும் **अपश्यन्** பார்க்காமல் **अग्रे** (என்)முன்னால் **कातराणां** மிக ஆவலுடன் கூடியவர்களுடைய **रुदितबहुलं** மிகுந்த கதறுதலை **अशृण्वन्** கேட்காமல் **उत्क्रान्तिश्रममपि** முக்யப்ராணன் வெளிக்கிளம்புவதாலேற்படும் வேதனை யையும் **अगणयन्** பொருட்படுத்தாதவனாக **अन्तरात्मन्** ஸர்வாந்தர்யாமியான பரமனே **मम** என்னுடைய **आत्मा** மனம் **तव** உம்முடைய **अंघ्रिद्वंद्वे** இருபாத கமலங்களிலும் **निविशतां** நுழையட்டும்.

வி. உ.

ஸுகதுக்கங்கள், ராகத்வேஷங்கள், சீதோஷ்ண ங்கள், சிறுமைபெருமை இவை முதலிய த்வந்தங்களாகிய

விஷயங்களில் மனம் சென்று, ஜீவன் அந்தந்த ஸுகதுக்கா திகளை அனுபவிக்கிறுன். இந்த விஷயத்வந்தங்களில் மனம் செல்வதைத் தடுத்து, உமது சரணாரவிந்த த்வந்தங்களில் அம்மனதை அனுபவிக்கும்படிச் செலுத்தினுல், நிவர்த்திக்க முடியாத துக்கங்களுடன் கூடிய மரணகாலத்திலும் கூட, பந்துக்களின் வியோகத்தைப் பார்க்காது, அவ்விஷயத்தில் குருடாகவும், அவர்கள் கதறும் கோஷத்தைக் கேளாமல், அதில் செவிடாகவும், மரண வேதனையைக்கூட அநுபவிக் காமல் உமது பாதாரவிந்தங்களிலிருந்து பெருகும் பேரின்ப மாதுர்ய ரஸானுபவத்துடன் விளங்கி, பிராரப்தம் முடிந்த உடன் விதேக கைவல்யத்தை அடைவேன் என்பது நிச்சயம். ஆகவே, விஷயங்களில் செல்லும் என் மனதை உமது திருவடி மலர்களில் சென்று ரமிக்கும்படி நீர் எனக்கு அருளவேண்டும்.

चारुस्मेराननसरसिजं चन्द्रलेखावतंसं
फुल्लन्मल्लीकुसुमकलिकादामसौभाग्यचोरम् ।
अन्तः पश्याम्यचलसुतया रत्नपीठे निषण्णं
लोकातीतं सकलशिवदं रूपमप्राकृतंते ॥ (४०)

ப. உ.

**चारुस्मेराननसरसिजं** மனோஹரமான மலர்ந்த தாமரை மலர்போல் மந்தஹாஸ முகத்துடன் கூடியவராயும் **चन्द्रलेखावतंसं** சந்திரகலையை சிரோபூஷணமாகக் கொண் டவரும் **फुल्लन्मल्लीकुसुमकलिकादामसौभाग्यचोरं** மலர்ந்த மல்லிகைப் புஷ்பத்தின் காந்தியின் ஸௌந்தர்யத்தை

தோற்கடித்த ஸ்வரூபலாவண்யத்துடன் கூடியவரும் **अचलतनया** மலைமகளான கௌரீதேவியுடன் **रत्नपीठे** ரத்னமயமான ஆஸனத்தில் **निषण्णं** வீற்றிருக்கிறவராயும் **लोकातीतं** ஸமஸ்த லோகங்கள், அவைகளிலிருக்கும் ஜீவர்கள் இவர்களுக்கும் மேலானவரும் **सततशिवदं** நித்ய மங்கள ஸ்வரூபமான மோக்ஷத்தை அருள்பவரும் **अप्राकृतं** மாயா ஸம்பந்தமற்றவராயுமுள்ள **ते** உம்முடைய **रूपं** ஸ்வரூபத்தை **अन्तः** அந்தக்கரணத்தில் **पश्यामि** பார்க்கிறேன் (தியானிக்கிறேன்).

வி. உ.

பரமேச்வரனுக்கு 'நிஷ்களம், ஸகலம்' என்று இருவித ரூபங்கள் உள.

**निष्कलं निष्क्रियं शान्तं निरवद्यं निरञ्जनम्**

'நிஷ்களமாயும், சலனமற்றும், சாந்தமாயும், நிர்மலமாயும், மாயா ரஹிதமாயும் உள்ளவர்' என்றும் **सत्यं ज्ञानमनन्तं ब्रह्म** 'ஸத்ய ஞான அனந்த வடிவானதே ப்ரம்மம்' என்று நிர்குணமான பரமேச்வர ஸ்வரூபத்தையும்;

**या ते रुद्रशिवा तनूरघोरापापकाशिनी ।**
**तयानस्तनुवा शन्तमया गिरिशन्ताभिचाकशीहि ॥**

ஹேருத்ர! (கைலாய) கிரியிலிருந்துகொண்டு ஸுகத்தை அருளும் ஈசனே! உமது மங்களகரமாயும், கோரமில்லாததாயும், புண்ணியத்தை அருளும் மூர்த்தியால் எங்களை நோக்கி கிருபைசெய்யயும்'' என்றும், **इन्द्रोमायाभिः**

**पुरुरूप ईयते** 'பரமாத்மா (தனது) மாயையால் பல ரூபத்தை அடைகிறார்' என்றும், **उमासहायं परमेश्वरं प्रभुं** 'பார்வதியுடன் கூடிய பரமேச்வரனை ப்ரபுவை' என்றும்

**अम्बिकापतये उमापतये पशुपतये नमोनमः ॥**

'அம்பிகா நாதனும், உமாகாந்தனும், பசுபதியுமான பரமனுக்கு அனந்தகோடி நமஸ்காரம்' என்று ஸகுண மான பரமேச்வரரூபத்தையும், தைத்திரீய, ச்வேதாச்வதர, நாராயண உபனிஷத்துக்கள் உத்கோஷிக்கின்றன.

**तथैव योगिनां चापि ज्ञानिनां मन्त्रिणामपि ।**
**जपपूजानिमित्ताय निष्कलं सकलं भवेत् ॥**

'அப்படியே, யோகிகள், ஞானிகள், மந்திரஜபம் பண்ணுகிறவர்கள் இவர்களுடைய, ஜபம், பூஜை, த்யான மிவைகளுக்காக ரூபமற்ற பரம்பொருள், ரூபத்தைத் தாங்குகிறார்' என்று 'வாதுலசுத்தத்தில்' கூறியபடியும்;

**अव्यक्ताहि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ।**
**मय्येव मन आधत्स्व मयि बुद्धिं निवेशय ।**
**निवसिष्यसि मय्येव अत ऊर्ध्वं न संशयः ॥**

'நிஷ்கல ப்ரம்ம (த்யான) மார்க்கம் தேகாபிமானிக ளால் (அவிவேகிகளால்) அடைவது மிகவும் கஷ்டமா னது. (கரசரணாதி அவயவங்களுடன் கூடிய) என்னிடமே உன்மனதை வைப்பாயாக, உன்புத்தியையும் என்ரூபத் திலேயே செலுத்துவாயாக, நீ என்னிடமே வஸிப்பாய்

(நானும் உன் மனதையே வாஸஸ்தானமாகக் கொள்வேன்). அதற்குமேல் உனக்கு மோக்ஷவிஷயத்தில் ஸந்தேகமேயில்லை' என்று கூறும் ஸ்ரீ கீதாசார்யனுடைய அருள்மொழிப்படியும், மந்தமதிகளுக்கு அருள்வதற்காகவே, பரமனும் உமாமகேச்வரரூபமாய்

रूपौदार्यगुणैः पुंसां दृष्टिचित्तापहारिणम् ।

"(தனது லீலையால் ஸ்வீகரிக்கப்பட்ட) ரூபங்களாலும், ஔதார்யத்தாலும், குணங்களாலும் புருஷர்களுடைய கண் சித்தமிவைகளை கொள்ளைகொள்ளும் திவ்ய மங்களமூர்த்தியாக" விளங்குகிறார்.

எந்த பரசிவதத்வம் நிஷ்கலமோ, எது ஓம்கார வடிவோ, ஓம்காரவாச்யமோ, எது பக்தர்களை உஜ்ஜீவிக்க ஜீவரத்தினத்துடன் (சிவ என்ற பெயருடன்) பஞ்சாக்ஷர மகா மந்திரமாக (சப்தப்ரம்ம ரூபமாக) விளங்குகிறதோ, அதே பரமன் அந்த சிவதத்வத்தையும், ஓம்கார ஸ்வரூபத்தையும், பஞ்சாக்ஷர மகாமந்திரத்தையும் அறியாத (உபதேசத்தால் பெறாத) ஸமஸ்த மானிடர்களுக்கும் (வர்ணாச்ரமவயோவஸ்தாவ்யவஸ்தையற்று) அனுக்கிரகம் செய்ய (இந்தச்லோகத்தில் கூறப்பட்டபடி) உமா மகேச்வர ரூபத்துடன் விளங்கி, இந்த கல்யாணரூபத்தை வாயால் கூறுகிறவர்களுக்கும், மனதால் நினைக்கிறவர்களுக்கும், அர்ச்சாரூபமாகப் பார்த்து ஸேவிப்பவர்களுக்கும், அவர்களுடைய இஷ்டங்களை அருள்கிறார் என்பது சாஸ்திர ஸித்தாந்தம்.

**चन्द्रलेखावतंसं—ज्ञानचन्द्रकलाचूडं** என்றபடி ஞானமயமான சந்திரனை பகவான் சிரஸில்விளங்குகிறான்.

**फुल्लमल्ली** — மலர்ந்த மல்லிகையின் காந்திக்குமேல் காந்தியுள்ளவர் என்பதால், வெளுப்பான சுத்த ஸத்வமூர்த்தி யென்றேற்பட்டது. **सत्वात्संजायते ज्ञानं** 'ஸத்வத்திலிருந்து ஞானமுண்டாகிறது,' என்றபடி, இப்பரமனை ஞானமூர்த்தி யென்றும், ஞானத்தையும் பேரின்பத்தையும் விரும்புவோர்களால் இப்பரமனை உபாஸிக்கத் தகுந்தவர் என்றும் பெறப்படுகிறது.

**अन्तः पश्यामि** — இந்த ஜீவன் பேரின்பத்தைப்பெற முடியாதபடி அவனை எதிர்த்து நிற்கும் சத்ரு 'காமன்' எனப்படுவோனே.

**काम एष क्रोध एष रजोगुण समुद्भवः ।**
**महाशनो महापाप्मा विद्धि एनमिह वैरिणम् ॥**
**इन्द्रियाणि मनोबुद्धिरस्याधिष्ठानमुच्यते ॥**

'ரஜோகுணத்திலிருந் துண்டாகும் இந்தக் காமமே; கோபமாகப் பரிணமிக்கிறது. இது எல்லாவற்றையும் விழுங்கக்கூடியது—மகா பாபங்களுக்குக் காரணமானது. இந்த காமத்தையே ஜீவனுடைய பரமசத்ருவாகத் தெரிந்துகொள். கொள்ளைக்காரர்கள் வழிப்போக்கர்களை தக்க இடங்களிலிருந்துகொண்டு சூறையாடுவதுபோல், இந்த காமனென் கொள்ளைக்காரனும், இந்திரியங்கள் மனம் புத்தி இந்த இடங்களில் இருப்பைப்பெற்று, ஜீவனுடைய பேரின்ப பொக்கிஷத்தை சூறையாடுகிறான்" என்ற கீதா வசனப்படி, இந்த சத்ருவான காமபுருஷன் மனதின்

உள்ளே இருந்துகொண்டே (5-வது படையைப்போல்) தன் வேலையை நடத்துகிறான். சப்தாதி விஷயத்யானமே இந்த காமபுருஷனுக்கு முக்ய ப்ராணனைப்போல் பலத்தை அளிப்பதாகும்.

यदासर्वेप्रमुच्यन्ते कामा येऽस्य हृदिस्थिता: ।
अथ मर्त्योऽमृतोभवति अत्रब्रह्म समश्नुते ॥

"மனதில் குடிகொண்ட எல்லா காமங்களும் எப்பொழுது சிதறிப் போய்விடுகின்றனவோ, அப்பொழுது மனிதன் அழியாத் தன்மையை அடைகிறான். இவ்விடத்திலேயே ப்ரம்மத்தை அடைகிறான்" என்ற கடோபனிஷத் வாக்யப்படி, இச்சத்ருவான காமனை ஒழித்தாலல்லாது ஜீவனுக்குப் பேரின்பமில்லை. அக்காமனுக்கு சத்ரு எவனோ, அவனது தயவைக்கொண்டே, நமது சத்ருவான காமனை சிர்குலைக்க முடியும். இக் காமனுக்குச் சத்ரு (காமாரி) பரமேச்வரன் ஒருவரேயாகும்.

க்ரோதம், லோபம், மோகம், மதம் மாத்ஸர்யமென்று 5-தம்பிமார்களுடன், மனதாகிற வனத்தில் மிகுந்த அட்டகாஸம் செய்யும் அரக்கனை காமனை ஒழிக்கவல்ல பரமசிவனாகிய ஆதிகிராதனையே (வேடனையே) சரணமடைய வேண்டும். வேறுகதியில்லை.

मागच्छस्त्वमितस्ततो गिरिश भोमय्येव वासंकुरु
स्वामिन्नादिकिरात मामकमनः कान्तारसीमान्तरे ।
वर्तन्ते बहुशो मृगामदजुषः मात्सर्यमोहादयः
तान्हत्वा मृगया विनोदरुचिता लाभंच संप्राप्यसि ॥

"ஆதிகிராதனே! இங்குமங்கும் நீங்கள் அலைய வேண்டாம். என் மனமாகிய காட்டில் மிகவும் மதம் பிடித்த காம க்ரோத லோப மோக மதமாத்ஸர்யம் முதலிய மிருகங்களிருக்கின்றன. அவைகளை வேட்டையாடிக் கொன்று, உமது இஷ்டப்படி விநோதமடைய என் மனதில் நித்ய வாஸத்தைக் கொள்வீராக." என்று சிவானந்த லஹரியில் ஸ்ரீபகவத்பாதள் அருளியபடி, பரமேச்வர த்யானமே காமங்களான சத்ருக்களை ஒழித்து நித்யானந்தத்தை அளிக்கக்கூடியது என்று பெறப்பட்டது.

புலன்களுக்குப் புலப்படாத நிஷ்கலப்ரம்மம் பக்தர்களுக்கு அனுக்ரகம் செய்ய உமாமகேச்வர ரூபத்தைத் தாங்கி, மாயாகார்யமான ஜகத்திற்கு அதிஷ்டானமாயிருந்து கொண்டு அப்ராக்ருத மங்களவடிவுடன் உபாஸ்ய மூர்த்தியாய் விளங்குகிறார். இதற்குக் காரணம் கருணை ரூபமான பராசக்தியே ஆகும். அப்பராசக்தியோ (ஹிம வானுன) மலையின் பெண். கல்லின் பெண் கருணைரூபமென்பது எப்படி அனுபவிக்கப்படுகிறதோ, அப்படியே நிஷ்கலமாயும், நிர்குணமாயுமுள்ள பரப்ரம்மம், ஸகுணமாய், ஸாம்ப பரமேச்வரமூர்த்தியுடன் விளங்குவதிலும் ஆக்ஷேபணை இல்லை. அப்பரமன் என் ஹ்ருதயத்தில் எப்பொழுதும் த்யானிக்கப்படும் விஷயமாக இருக்கட்டும்.

स्वप्नेवापि स्वरसविकसद्दिव्यपंकेरुहाभं
पश्येयं किं तव पशुपते पादयुग्मं कदाचित् ।
काहं पापः कत्वचरणालोकभाग्यं तथापि
प्रत्याशां मे घटमति पुनर्विश्रुता तेऽनुकंपा ॥ (४१)

ப. உ.

**हे पशुपते** பரமேச்வரனே! **स्वप्नेपि** ஸ்வப்னகாலத்திலாவது **स्वरसविकसद्दिव्यपंकेरुहाभं** நல்ல பக்வமாய் தானேமலர்ந்த தேவலோகத்து தாமரை மலர்போல் காந்தியுடன் கூடிய **तव** உம்முடைய **पादयुग्मं** இரு பாதங்களையும் **कदाचित्** எப்பொழுதாவது **पश्येयं किं** நான்பார்ப்பேனா! **पापः** பாவியான **अहं** நான் **क्व** எங்கேயோ (இருக்கிறேன்) **तव** உம்முடைய **चरणालोकभाग्यं** திருவடிகளைப் பார்க்கும் பாக்யம் **क्व** எங்கேயோ (இருக்கிறது) **तथापि** அவ்வண்ணம் (பாபியான நானும் புண்யங்களான உமது திருவடிகளும் ஒன்றோடொன்று அதிதூரத்தில்) இருந்தாலும் **ते** உம்முடைய **विश्रुता** ஸர்வலோக ப்ரசித்தமான **अनुकंपा** தயவு **पुनः** மறுபடியும் **मे** எனக்கு **प्रत्याशां** (உம்மிடத்தில்) ஆசையை **घटयति** உண்டாக்குகிறது.

வி. உ.

**स्वप्नेवापिपश्येयं**—'பரமனைப் பார்ப்பேனாநான்' என்ற ஆவலின் உத்ரேகமுள்ளவனுக்கு பரமன் காணப்படுகிறார்.

ஒரு ஸாதுவை "பரமனை நீர் பார்த்திருந்தால் எனக்கும் காட்டுங்கள்" என்று ஒருவன் கூற, ஸாது அவனை அழைத்து ஆங்குள்ள தடாகத்திற்குச் சென்று, அவனைத் தண்ணீரில் மூச்சுக்குத் தபிக்கும்படி முக்கி, அவன் கதறும் தறுவாயில் அவனை மேலே தூக்கிவிட, அவன் ஸாதுவைப்பார்த்து "கண்டேன் கடவுளை. மன்னிக்கவும்" என்று கூற, ஸாதுவும் "நீ கண்ட கடவுளை உல

கமும் அறியட்டும், கூறுவாய்" என்று சொல்ல, அவனும் "தண்ணீரில் முக்கப்பட்ட எனக்கு "தண்ணீரிலிருந்து வெளிவந்து நான் காற்றைச்வாஸிப்பேனே" என்று வேக மும் தாபமும் ஏற்பட்டதுபோல், ஸம்ஸாரக் கடலில் அழுத்தப்பட்டவனுக்கு தணலிலிட்ட புழுவைப்போல் தபித்து "பேரின்ப மூர்த்தியான பரமனை நான் அடை வேனே" என்று தாபமும் வேகமும் ஏற்பட்டால், அப் பொழுதே அவனுக்குக்கடவுள் பிரத்யக்ஷம்" என்றபடியும்.

**त्रुटियुगायतेत्वामपश्यतां** உம்மைப்பார்க்காமல் ஒரு நொடிநேரம் ஒருயுகமாக வளர்கிறதே" என்று ஸ்ரீகிருஷ்ண விரகத்தால் கோபிகள் தபித்தபடியும், எவர்களுக்கு பரமனை அடையாததால் தாபமேற்படுகிறதோ, அவர்கள் அவ்விரகதாபத்தால் பகலிலும், இரவிலும், விழிப்பிலும், கனவிலும் தங்கள் மனதை கொள்ளைகொண்ட பரமனையே நாடுவார்கள்.

மகாதரித்திரன் தனது வாழ்நாட்களில் ஒரு நாளி லாவது ஸ்வப்னத்திலாவது தனத்துடன்கூடியவனாகத் தன்னைக்கண்டுகளிப்பான். அதுபோல, புண்யாத்மாக்க ளான சிவயோகிகளுக்குப்பிரத்யக்ஷமாக அனுபவிக்கப் படும் பரமனின் ஸ்வரூப ஸுகத்தை, மகாபாபியான நான் ஜாக்ராவஸ்தையில் பார்க்கமுடியாவிடினும், அதி லுள்ள ஆவலால் ஸ்வப்னத்திலாவது பார்க்கமாட்டேனோ என்று என் உள்ளம் உருகுகிறது.

சிவத்ரோகிகளான, தக்ஷன், பாணாஸுரன் முதலிய வர்களுக்கும் உமது தயவால் மன்னிப்பு ஏற்பட்டதுமட்டு

மல்லாமல், காணாபத்யஸ்தானத்தையும் அவர்களுக்கு அருளினீர் என்ற உமது அவ்யாஜ கருணையை ஸ்மரிக்கும் போது "நீயும் ஸர்வஜன ஸுலபனான பரமசிவனை பஜிப்பாய். உனக்கும் ரக்ஷகன் அவரே" என்று அக்கருணை யென்னைத் தூண்டுகின்றது. ஆகவே பாபத்தால் விலகி நிற்கும் என்னை, உமது கருணையே இழுத்து உம்மிடம் என்னைத் தள்ளுகிறது.

**भिक्षावृत्तिं चर पितृवने भूतसंघैर्भ्रमेदं**
**विज्ञातं ते चरितमखिलं विप्रलिप्सोः कपालिन् ।**
**आवैकुण्ठद्रुहिणमखिलप्राणिनामीश्वरस्त्वं**
**नाथ स्वप्नेऽप्यहमिह नते पादपद्मं त्यजामि ॥** (४२)

ப. உ.

**कपालिन्** ப்ரம்மதேவன் மண்டையோட்டை கையில் கொண்டவரே! **भिक्षावृत्तिं** யாசிப்பதை ஜீவனமாக **चर** ஆதரியுங்கள் **पितृवने** ச்மசானத்தில் **भूतसंघैः** பூதக்கூட்டங்களுடன்கூட **भ्रम** அலைந்து திரியுங்கள். **विप्रलिप्सोः** வெளிவேஷம் போடும் **ते** உம்முடைய **इदं** இந்த **चरितं** **अखिलं** நடத்தையெல்லாம் **विज्ञातमेव** அறியப் பட்ட விஷயமே. **आवैकुण्ठद्रुहिणमखिलप्राणिनां** மகா விஷ்ணு ப்ரம்மதேவன் முதலிய எல்லா ஜீவர்களுக்கும் **त्वं** நீர் **ईश्वरः** பரமேச்வரன் (என்ற விஷயம் அறியப் பட்டதே) **नाथ** (ஸர்வஜீவர்களாலும் தங்கள் யோகக்ஷேமங் களைப்பெற யாசிக்கப்படும்) பெருமானே! **इह** இப்பொழுது **अहं** நான் **ते** உம்முடைய **पादपद्मं** பாதகமலத்தை **स्वप्ने अपि** ஸ்வப்பனத்திலும் **न त्यजामि** விடமாட்டேன்.

வி. உ.

**विप्रलिप्सोः**—பரமனே கபடநாடக ஸூத்திரதாரி.

हसन्ति यस्याचरितं हि दुर्भगाः स्वात्मन्रतस्याविदुषः समीहितम् ।
यैः वस्त्रमाल्याभरणानुलेपनैः श्वभोजनं स्वात्मतयोपलालितम् ॥

இறந்தபிறகு நாய்களால் பக்ஷிக்கப்படும் இந்த சரீரங்கள், எவர்களால் தங்களுக்குச் சொந்தமானவை என்று (விதவிதமான விலையுள்ள பட்டு ஜரிகை) வஸ்திரங்கள் (ரோஜா, மல்லி, கதம்ப) மாலைகள் (வைர வைடூர்ய மரகதாதி நவரத்தினங்களால் செம்பொன்னிலிழைக்கப்பட்ட கிரீட கேயூராதி) ஆபரணங்கள், (அத்தர், புனுகு, ஜவ்வாது, சந்தனம் முதலிய வாஸனை) பூச்சுக்கள் இவைகளால் லாலனம் செய்யப்படுகின்றனவோ, அந்த மூடர்கள்

एवस्यैव आनन्दस्य अन्यानि भूतानि मात्रामुपजीवन्ति ॥

'இப் பரமனது ஆனந்தத்தின் ஒரு திவலையால் மற்ற எல்லா ஜீவர்களும் பிழைக்கிறார்கள்' என்றபடி, நிரதிசய ஸ்வாத்மானந்த பூரணத்தால், தனக்கு விஷயாதிகளில் வைராக்யத்தைத் தெளிவாகக்காட்டச் செய்யப்பட்ட (பிக்ஷாடனம் செய்வது, கரித்தோல் உடுப்பது, நாகத்தை ஆபரணமாகக் கொள்வது, ச்மசானத்தில் வசிப்பது, பஸ்மத்தை பூச்சாகக்கொள்வது, பாதி சரீரத்தை பார்யாளுக்கு ஸமர்ப்பிப்பது இவை முதலிய) கார்யங்களின் கருத்தை அறியாது பரிகசிக்கிறார்கள்.'' என்ற ஸ்ரீமத் பாகவத வசனப்படி, பரமனது மகிமையை அறியாத பாவிகள், லோகக்ஷேமார்த்தம் அவர் செய்யும் கார்யங்களை நிந்திப்பது ஸகஜமே. ஆனால் நானோ உமது மகிமையை அறிந்தவன்.

स्वप्नेऽपि न ते पादपद्मं त्यजामि ।
तवामृतस्यन्दिनि पादपंकजे निवेशितात्मा कथमन्यदिच्छति ।
स्थितेऽरविन्दे मकरन्दनिर्भरे मधुव्रतः नेक्षुरकंहि वीक्षते ॥

'மலர்ந்து மகரந்தம்கொட்டும் தாமரஸபுஷ்பமிருக்கும் போது, வண்டு உள்ளிப்பூண்டின் (புஷ்பத்தை) கண்ணெடுத்தும் பார்க்காததுபோல், பேரானந்தம் கசியும் உமது பாதகமலத்தில் மனம் பதிந்தவன், மற்ற ஒரு பொருளையும் (மும்மூர்த்திகளுடைய ஆதிபத்யத்தையும்) எப்படி விரும்ப முடியும்? என்றபடியும்.

नहिभिक्षुकः भिक्षुकान्तरं याचितुमर्हति, सति अन्यस्मिन्नभिक्षुके

'ஒரு பிச்சைக்காரன், பக்கத்தில் ஒருபிரபு இருக்கும் போது, மற்ற ஒரு பிச்சைக்காரனை யாசிப்பது தகுதியல்ல' என்றபடி, **एषसर्वेश्वरः** ஸர்வலோக நாதனுக உள்ள பரமனை உமது பாதபஜனாஸத்தை அநுபவித்த நானும், **अतोऽन्यदार्तं** "பரமனைக்காட்டிலும் வேறு எவ்வஸ்துவும் அல்பம், துக்கஸ்வரூபம்" என்றபடி, மற்றவரையும் ஸ்வப்னத்திலும் நினைக்கமாட்டேன்.

हंसःपद्मवनं समिच्छतियथा नीलंबुदंचातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरस्तथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभो
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदं ॥

"ஹே கௌரீநாதா! ஹம்ஸப்பக்ஷி தாமரை வனத்தையும், சாதகபக்ஷி நீருண்ட மேகத்தையும், சக்கிரவாக பக்ஷி ஸூர்யனையும், சகோரபக்ஷி சந்திரனையும் விரும்புவது போல், என் சித்தமும், உபனிடதங்களால் தேடி அடையத்தகுந்த கேவல நிர்குண ப்ரம்மபதமென்ற ஸுகத்தை அருளும் உமது பாதாரவிந்தங்களை விரும்புகின்றது. அப்பாதாரவிந்தங்களை ஸ்வப்னத்திலும் விட எனக்கு மனமில்லை" என்று ஸ்ரீசிவானந்த லஹரியில் ஸ்ரீ பகவத்பாதாள் அருளியபடி,

பரமனது மகிமை எவராலும் அறிந்து அளவிடமுடியாத விஷயம். கபாலத்தைக் கையில் தாங்கி, பிக்ஷாடனம் செய்வதும், ச்மசானத்தில் பூதகணங்களுடன் வசிப்பதும் இவைமுதலிய கார்யங்களால், பாமரர்கள் உமது ஸ்வரூபத்தை அறிந்துகொள்ள முடியாதபடி மறைக்கிறீர்.

எந்த ப்ரம்ம தேவனால் ஜீவர்களுடைய ஸுகதுக்கங்கள் அவரவர்கள் தலையில் எழுதப்பட்டு, ஒருவராலும் அழிக்கமுடியாது என்று கூறப்படுகிறதோ, அந்த பிரம்ம தேவனுடைய தலையையே, புஷ்பத்தைக் கொய்வதுபோல், தனது கைவிரல் நுனியால் பரமன் அறுத்து பிக்ஷாபாத்திரமாகக்கொண்டு பிக்ஷாடன மூர்த்தியாக வேஷம் தாங்குகிறாரென்றதால்,அப்பரமசிவனே ஸர்வ ஜீவர்களுக்கும் தங்கள் தலையிலெழுதப்பட்ட பிரம்ம லிபி நல்ல படியாக இருக்க வேண்டுமென்பதற்கு பிரார்த்திக்கத்தகுந்த முழு முதற் கடவுள் என்றதத்வம் ப்ரகாசமாக வில்லையா? பிரளய

காலத்தில் உலகமெல்லாம் நசித்து ருத்ர பூமிபோல் விளங்குவதால், ப்ரம்மாண்டமே மகாச்மாசானம். அதில், தான் ஒருவரே அழியாதவராய், ஆனந்த தாண்டவம் பண்ணுவதால்,பரமன் ஒருவரே நித்யானந்த வஸ்து என்ற தத்வம் பிரகாசமாகவில்லையா ?

இம்மகிமையின் ஏகதேசத்தை உணர்ந்த நான், உமது பாத பஜனத்தை ஸ்வப்பனத்திலும் மறவேன்.

आलेपनं भसितमावसतिःश्मशानं
अस्थीनि ते सततमाभरणानि सन्तु ।
निह्नोतुमीश सकलश्रुतिपारसिद्धं
ऐश्वर्यमम्बुजभवोपिच न क्षमस्ते ॥ (४३)

ப. உ.

**हे ईश** பரமசிவ ! **ते** உமக்கு **आलेपनं** மேலே பூசிக் கொள்வது **भासितं** திருநீறு **आवसतिः** வஸிக்குமிடம் **श्मशानं** ருத்ர பூமி **अस्थीनि** (சரீரத்தின்) எலும்புகள் **सततं** எப்பொழுதும் **आभरणानि** பூஷணங்களாக **सन्तु** இருக்கட்டும் **सकलश्रुतिप्रसिद्धं** எல்லா வேதாந்தங்களிலும் பிரஸித்தமான **ते** உம்முடைய **ऐश्वर्यं** பரமேச்வரத் தன்மையை **निह्नोतुं** மறைக்க **अंबुजभवोपिच** திருமாலின் உந்திக்கமலத்திலுதித்த ப்ரம்ம தேவனும் **नक्षमः** ஸாமர்த்திய மற்றவன்.

வி. உ.

கர்ப்பூரம், கோரோஜனை, காச்மீரம்,சந்தனம் இவைகளைப் பன்னீரில் கலந்து சரீரத்தில் பூச்சாகக் கொள்ளாமல்,

ப்ரளயகாலத்தில் தன் நெற்றிக் கண்ணின் ஜ்வாலையில் ஸமஸ்த ஜகத்தையும் ஆஹுதி செய்து, அவைகளின் லயஸ்தானமான பஸ்மத்தை,பரமன் பூச்சாகக்கொண்டவர். அப்பிரளய காலத்தில் பரமன் ஒருவரே மிஞ்சி,சராசராத்மக மான 14-புவனங்களும் ஆஹுதி செய்யப்பட்டு மகா ச்ம சானமாக விளங்கும் அவ்விடத்தில், ஆனந்ததாண்டவம் பண்ணுவதாலேயே அவர் 'மகாச்மசான வாஸி' என்று கூறப்படுகிறார். ஸர்வ வ்யாபகனாய், அஷ்ட மூர்த்தியான பரமனுக்கு சிதம்பர சித்ஸபை எப்படி நடனரங்கமோ அப்படியே எல்லாவிடமும் நடனரங்கமேயாகும்.

சரீரத்திற்கு ரூபத்தைக் கொடுப்பது எலும்புகளே. அணியப்படும் ஆபரணங்களுக்கும் எலும்புகளால் தான் சோபை ஏற்படுகிறது. அந்த எலும்புகளை பரமன் ஆபரண மாகக்கொள்வதால், அவைகளை தரிக்கிற காரணத்தால், அவைகளுக்கும் ஆதாரமாக பரமனிருப்பதால், 'சோபைக் கும் சோபையை உண்டு பண்ணுகிறவன் பரமன்' என்பது ஸித்திக்கிறது.

எல்லா உபனிஷத்துக்களும், பாரதாதி இதிஹாஸங் களும், 18 புராணங்களும், பரமேச்வரனது மகிமையைத் தான் உத்கோஷிக்கின்றன. அவ்வேத சாஸ்திரங்களின் தாத்பர்யத்திற்கு விரோதமாக சதுர்முகபிரம்மதேவனும் அர்த்தம் கூறமுடியாது. அப்படிப்பட்ட உமது தத்வஸ்வரூ பத்தை நினைத்து மகிழ்கிறேன்.

विहर पितृवने वा विश्वपारेपुरे वा
रजतगिरितटे वा रत्नसानुस्थले वा।

दिश भवदुपकण्ठे देहि मे भृत्यभावं
परमशिव तव श्रीपादुकावाहकानाम् ॥ (४४)

ப. உ.

**हे परमशिव** பரமேச்வரரே! **पितृवने** ச்மசானத்தில் **विहर** விளையாடுங்கள் **विश्वपारेपुरेवा** 204—உலகங்களுக்கும் அப்பாலுள்ள சிவ புரத்தில் (விளையாடுங்கள்) **रजतगिरि तटेवा** வெள்ளி மலையான கைலயங்கிரியின் அடிவாரத்திலாவது **रत्नसानुस्थलेवा** ரத்னமலையான மேருமலையிலாவது (விளையாடுங்கள்) **भवदुपकण्ठे** உமது கழுத்துக்கு சமீபத்தில் **तव** உம்முடைய **श्रीपादुकावाहकानां** ஸ்ரீபாதுகைகளை சுமக்கிற (நந்தி ப்ருங்கி முதலிய) வர்களுடைய **भृत्यभावं** சேவகத் தன்மையை **मे** எனக்கு **दिश** அருளுங்கள்.

வி. உ.

भृत्यभावं मे देहिः—
तस्मादात्मज्ञं हि अर्चयेत् भूतिकामः ॥

"ஞான ஐச்வர்யாதிகளை விரும்புவோன் ஆத்மஞானியை ஆராதிக்கவேண்டும்" என்ற முண்டக உபநிஷத் வாக்கியப்படியும்,

नतेषां मतिस्तावदुरुक्रमांघ्रिं स्पृशति अनर्थापगमो यदर्थः ।
महीयसां पादरजोभिषेकं निष्किञ्चनानां न वृणीत यावत् ॥
"त्वमेवमाताच पिता त्वमेव त्वमेव बन्धुश्च सखात्वमेव ।
त्वमेवविद्या द्रविणं त्वमेव त्वमेवसर्वं मम देव देव ॥"

“ஹே மகாதேவனே, நீயே எனக்குத்தாய், தந்தை, பந்து, நண்பன், வித்தை, தனம் எல்லாம் நீயே” என்ற படி,பரமசிவனைத் தவிற வேறு தன்னுடையவைகள் என்ற வஸ்துக்கள் சிறிதேனு மற்ற சிவபக்தர்களுடைய பாதாரவிந்த தூளினல் தேகமுழுமையும் அபிஷேகத்தைக் கோராத கர்வி, கஷ்டங்களை ஒழிக்கவல்ல, ஸர்வவியாபியான பரமனின் பாதாரவிந்தத்தை மனதாலும் நினைக்க மாட்டான்.” என்ற ஸ்ரீமத்பாகவத வாக்யப்படி, சிவனடியார்களின் ஆராதனை, கைங்கர்யம் இவைகளே பரமசிவப்ரஸாதத்திற்கு முக்கிய ஸாதனங்களானதால், அம் மகாத்மாக்களுடைய ஸங்கத்தை எனக்குக் கொடுத்து

**साधुसमागमसंकीर्णानां चिन्ता नास्ति किल ।**

‘ஸாதுஸமாகமங்களில் கலந்தவர்களுக்குக் கவலையே கிடையாது’ என்றும் **नेयं सज्जन संगतिरनिशं** ‘எப்போதும் ஸாதுக்களுடன் சேர்க்கை வைக்கத் தகுந்தது.’ என்ற படியும், சிவனடியார்களுடைய சேர்க்கையை எனக்குக் கொடுத்து, அவர்களுக்குத் தொண்டு செய்யும் மனப் பான்மையையும் அருளும்.

கங்கை நீர், கிணற்று நீர், சாக்கடை நீர் முதலிய ஜலங்களில் பிரதிபலிக்கும் ஸூர்யன், அந்தந்த ஜலங்களின் குணதோஷங்களால் ஸம்பந்தப்படாததுபோல், ஸர்வகதனை பரமனும்,ஸ்ரீமகா கைலாஸம்,காளஹஸ்தி முதலிய க்ஷேத்திரங்களிலும், ருத்ரபூமிகளிலும் காணப்படும் தன்மையால், அக்ஷேத்ரங்களின் குணதோஷங்களால் ஸம்பந்தப்படாதவர்.

ஸர்வவியாபியான பரமனுக்கு, உலக முழுமையும் விளையாடுமிடம்—உலகமே நாடக பூமி. ஸம்ஸாரிகளான ஜீவர்களே நடிகர்கள். பார்வதி பரமேச்வரன் இருவரும் அந்நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்.

அக்னி பாஞ்சபௌதிகமான பதார்த்தங்களில் எல்லாம் வியாபித்திருந்தாலும், அதன் ஸான்னித்யம் தீக்குச்சியின் நுனியில், விசேஷமாகக் காணப்படுவதுபோல், ஸர்வவியாபியான பரமனது ஸான்னித்யமும், காசி, காளஹஸ்தி, ஹாலாஸ்யம், சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களில் மிகவும் விசேஷமாக விளங்குகிறது என்பது பொருத்தமே. அப்படியே, பரமனும் தனது ஸ்வரூபத்தை சிவனடியார்கள் மூலமாக விளக்குகிறார். அப்படி விளங்கும் சிவபக்தர்களின் பாதாரவிந்த ஸேவையே பரமசிவ பக்திக்கு முக்ய காரணமானதால், அவர்களுடைய பாதாரவிந்தங்களில் கைங்கர்யம் செய்யும் புத்தியை எனக்கு அருளும்.

विविधमपि गुणौघं वेदयन्त्वर्थवादाः
परिमितविभवानां पामराणां सुराणाम् ।
तनुहिमकरमौले तावता त्वत्परत्वे
कतिकति जगदीशाः कल्पिता नो भवेयुः ॥ (४५)

ப. உ.

**तनुहिमकरमौले** சந்திரகலாதரனே! **अर्थवादाः** அர்த்தவாதமான சில வேதபாகங்கள் **पामराणां** சிவஞான சூன்யர்களாயும் **परिमितविभवानां** எல்லைக்குட்பட்ட மகிமையுடன் கூடிய **सुराणां** தேவர்களுடைய **विविधमपि**

பலதரப்பட்ட **गुणौघं** குணக்கூட்டத்தை **वेदयन्तु** ப்ரகாசப் படுத்தட்டும் **तावता** அவர்களை ப்பிரகாசப்படுத்துவதால் **त्वत्परत्वे** உம்மைக்காட்டிலும் மேலாக இருக்கும் தன்மையில் **कतिकति** எவ்வளவு விதமான **जगदीशाः** ஜகத்திற்கு ஈச்வரர்கள் **कल्पिताः** கல்பிக்கப்பட்டவராக **नो भवेयुः** ஆகமாட்டார்கள்.

வி. உ.

**तनुहिमकरमौलिः** பசியின் கொடுமையால் வருந்துவோர்களுக்கு 'இதோ அன்னஸத்திரமிருக்கிறது வாருங்கள்' என்று அவர்களை அழைப்பதுபோல் விளங்கும் அந்த சத்திரத்தின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் கொடியைப்போல், ஸம்ஸாரதாபத்தால் வருந்தும் புபுக்ஷுக்களுக்கும் முமுக்ஷுக்களுக்கும் 'இதோ உமது இஷ்டங்களைப் பெறத் தகுந்த சாந்நிலயமிருக்கிறது வாருங்கள்' என்று அறிவிப்பதுபோல், பரமேச்வரன் தனது தலையில் ஞானமய சந்திரனைத்தாங்கி விளங்குகிறார்.

**परिमितविभवाः** சக்கரவர்த்தியின் குடைகீழ் உள்ள சிற்றரசர்களுக்கு, இல்வளவு பட்டாளம் தான், இவ்வளவு கிரீடாதி ஆபரணங்களே, வெளியில் செல்லும்போதும் இவ்வளவுதான் பரிவாரம், என்று அவர்களின் மகிமை எல்லைக்குட்படுத்தபட்டிருக்கிறதுபோல், இந்திராதி தேவர்களுக்கும, இவ்வளவு காலம்தான் ஆயுள், இவ்வளவுதான் அதிகாரம், இவ்வளவுதான் ஐச்வர்யம், என்று அவர்களின் மகிமையும் பரமேச்வரனுல் எல்லைக்குட்படுத்தப் பட்டிருக்கிறது.

**अर्थवादाः**— விதிக்கப்பட்டதை ப்ரசம்ஸை செய்வதும், விலக்கப்பட்டதை நிந்திப்பதுமான வேதவாக்யங்களே அர்த்தவாதங்களெனப் படும். தான் எதைத்துதிக்கவோ, நிந்திக்கவோ ஏற்பட்டதோ, அப்படிப்பட்ட விதி விலக்கு வாக்யத்தில், தன் ஸ்வரூபஸமர்ப்பணம் செய்து, அந்தந்த விதிவிலக்கு வாக்யத்தின் தாத்பர்ய நிர்ணயம் பண்ணுவதையே அர்த்தவாத வாக்யம் ப்ரயோஜனமாகக் கொண்டது என்று மீமாம்ஸா சாஸ்திர ஸித்தாந்தம். ஆகவே இந்திராதி தேவதைகளை எவ்வளவு பெருமையாகக் கூறினும், விதிவாக்யங்களில் தாத்பர்யமுள்ள அந்த அர்த்த வாதங்களுக்கு அத்தேவதைகளின் மகிமையைக் கூறுவதில் தாத்பர்யமில்லை என்று ஏற்படுகிறது.

அப்படி இந்திராதிகளின் பெருமையைப் பிரகாசப்படுத்துவதில் அவ்வர்த்தவாதங்களுக்கு தாத்பர்யமென்று வைத்துக்கொண்டாலும், எண்ணிறந்த தேவர்களை ஈச்வரர்களாக கூறவேண்டி வருகிறது. ஒரு ஜகத்திற்கு ஒரு அரசனுக்குமேல் இருந்தால், இரட்டை ராஜ்யத்திற்கு சட்டதிட்டங்களுக்கு பங்கமேற்படும். ஆகையால் அப்படியே இந்த ஜகத்திற்கும் பல ஈச்வரர்களிருந்தால், ஜகத் பரிபாலனம் நடக்கமுடியாது. ஆனால் இந்த ஜகத்தோ நியதப்ரவ்ருத்தியுடன் இருப்பதால், ஸர்வேச்வரராக பரம்பொருள் ஒருவர் தான் இருக்கவேண்டுமென்றும் அர்த்தாபத்தி ப்ரமாணத்தால் நிச்சயிக்கப்படுகிறது. அவரே 'பரமேச்வரன்' என்ற பதத்தால் கூறப்படுகிறார். அவரது அனுக்ரகமே ஸமஸ்த ஜீவர்களாலும் நாடத்தகுந்தது என்பதில் ஆக்ஷேபணையில்லை.

बलमबलममीषां बल्बजानां विचिन्त्यं
कथमपि शिव कालक्षेपमात्रप्रधानैः ।
निखिलमपि रहस्यं नाथनिष्कृष्यसाक्षात्
सरसिजभवमुख्यैः साधितन्नः प्रमाणम् ॥ (४६)

ப. உ.

**शिव** பரமசிவனே! **बल्बजानां** துர்பலர்களான **अमीषां** இந்த (தேவர்)களுக்கு **बलं** (அதிக) பலம் (இருக்கிறது) **अबलं** பலம் (இல்லை) என்று **कालक्षेपमात्रप्रधानैः** காலத்தை கடத்துவதையே முக்ய பிரயோஜனமாகக் கொண்டவர்களால் **कथमपि** கஷ்டப்பட்டு (சாஸ்த்ரத்தாலோ, தர்க்கத்தாலோ) **विचिन्त्यं** ஆலோசிக்கத் தகுந்தது. **नाथ** பரமனே! **निखिलमपि** ஸமஸ்தமான **रहस्यं** (கர்மோபாஸனை ஞான காண்டங்களில் குருநாதரது பிரஸாதத்தால் அறியத் தகுந்த) ரகஸ்யத்தை **साक्षात् सरसिजभवमुख्यैः** நேரிடப்ரம்மாதி தேவர்களாலேயே **निष्कृष्य** (சாஸ்த்ரங்களை விசாரித்து) தீர்மானம் செய்து **साधितं** சித்தாந்தம் செய்யப்பட்டது (யாதொன்று உண்டோ) **तत्** அது **नः** எங்களுக்கு **प्रमाणं** புத்திபுகட்டுவதாக (இருக்கிறது.)

இந்திரன் வாயு அக்னி முதலிய தேவர்களின் பலாபல தாரதம்யத்தை கஷ்டப்பட்டுத் தர்க்கம் பண்ணுவது ஒருவித பிரயோஜனமற்ற முடிவில்லாத யோஜனையே ஆனதால், அப்படிச் சிந்திப்பவர்களும் பொழுது போக்கையே தொழிலாக உள்ள சேம்பேரிகளேயாவர்.

சதுர்முக பிரம்மதேவன், பிரம்ம கீதையில்

परमशिवसमुद्रे अहंहरिः सर्वेदेवा मनुजपशुमृगाद्याः
शीकरा एव सत्यं । विमलमतिभिः एवं वेदवेदान्तनिष्ठैः
हृदयकुहरनिष्ठं वेदितुं शक्यतेहि ॥

"பரமசிவ ஸமுத்திரத்தில் நான் (ப்ரம்மதேவன்) ஹரி, எல்லா தேவர்கள், மனிதர்கள், பசுக்கள், மிருகங்கள் முதலியவை சிறு திவிலைகளாகவே இருக்கிறோம். மலமற்ற புத்தியுள்ளவர்களாலும், வேதவேதாந்த நிஷ்டர்களாலும் ஹ்ருதய குகையிலிருக்கும் இவர் இவ்வண்ணம் அறியப்படக் கூடும். இது ஸத்யம்" என்றுகூறியபடியும்

तमीश्वराणां परमं महेश्वरं तं देवतानां परमंचदैवतं ॥
नवा ओजीयोरुद्र त्वदस्ति ।

"மும்மூர்திகளுக்கும் மேலானவராததால், மகேச்வரனையும், தேவர்களுக்கும் மேலானவராததால், மகாதேவனையும், உள்ள அவரையாரே அறியக்கூடும்? தன்னை அண்டினவருடைய துக்கங்களை ஒழிக்கும் ருத்ரமூர்த்தியே! உமது மகிமை ஒருவராலும் ஜெயிக்கமுடியாதபடி இருக்கிறது" என்றபடி, பரமேச்வரனுடைய வீர்யாதிகள் வேதங்களில் பரந்து கூறப்படுகின்றன. அவ்வேதவாக்யங்களே எங்களுக்குப் பிரமாணம்.

न किंचिन्मेने चेतस्समभिलषणीयं त्रिभुवने
सुखंवा दुःखंवा मम भवतु यद्भावि भगवन् ।

समुन्मीलत्पाथोरुह कुहरसौभाग्यमुषिते
पदद्वन्द्वे चेतः परिचयमुपेयात् मम सदा ॥ (४७)

ப. உ.

**हे भगवन्** ஷாட்குண்ய பரிபூர்ணரே! **त्रिभुवने** மூவ்வுலகிலும் **चेतः समभिलषणीयं** மனதால் விரும்பத்தகுந்ததாக **किंचित्** எதையும் **नमेने** நான் கருதவில்லை **सुखंवा दुःखंवा** ஸுகமோ, துக்கமோ **मम** எனக்கு **यद्भावि** (பிராரப்தாதீனமாக) எது உண்டாகவேண்டுமோ அது **भवतु** உண்டாகட்டும் **मम** என்னுடைய **चेतः** மனம் **सदा** எப்பொழுதும் **समुन्मीलत्पाथोरुहकुहरसौभाग्यमुषिते** நன்கு மலர்ந்த பத்மத்தின் மகரந்தத்தின் ஸௌந்தர்யம் ஸௌகந்த்யம் இவைகளை கொள்ளைகொண்ட **पदद्वन्द्वे** (உமது) இரு திருவடிகளிலும் **परिचयं** அனுபவத்தை **उपेयात्** அடையட்டும்.

வி. உ.

ऐश्वर्यस्य समग्रस्य वीर्यस्य यशसश्श्रियः ।
ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भगइतीरणात् ॥

"நிறைவான ஐச்வர்யம் வீர்யம் கீர்த்தி அஷ்டவித லக்ஷ்மிகள், ஞானம், வைராக்யம் இந்த ஆறும் 'பக' என்ற சப்தத்தால் கூறப்படுவதால், இவ்வாறு குணங்களுடன்கூடியவரே 'பகவான்' என்று சைவாகமம் கூறுகிறது.

षड्भिरंगैरुपेताय विविधैरव्ययैरपि ।
शाश्वताय नमस्कुर्मः वेदाय च भवाय च ॥

சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களுடனும், பலதரப்பட்ட அவ்யயங்களுடனும் கூடிய நித்யமான (சப்தப்ரம்ம ரூபமான) வேதபுருஷனுக்கு நமஸ்காரம். ஐச்வர்யாதி ஆறு வித வைபவங்களுடனும் அழிவற்ற பலதரப்பட்டகல்யாண குணங்களுடனும் கூடிய நித்யனை'பகவான்' என்ற பதத்தால் கூறப்பட்ட பரமேச்வரனுக்கும் நமஸ்காரம் செய்கிறோம் " என்று ஸ்ரீ வாசஸ்பதிமிச்ராள், தனது பாமதீவ்யாக்யானாரம்பத்தில் கூறியபடியும் பரமேச்வரனே பகவத்பதத்திற்கு உரியவர்.

அதர்வசிகா உபனிஷத்தில் **योवैरुद्रः स भगवान्** என்று 33 முறை பரமேச்வரனுக்கு பகவத்சப்தம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

**यः सर्वान् भावान् निरीक्षित्य आत्मज्ञानन्निरीक्षयति योगं गमयति तस्मादुच्यते भगवान् ॥**

" எவர் எல்லாபதார்த்தங்களையும் பார்க்கிறாரோ, ஆத்ம ஞானத்தால் பக்தர்களுக்கு ஜீவப்ரம்மஐக்ய ஞானத்தை அருளுகிறாரோ, அவர் பகவான் என்று கூறப்படுகிறார் ", என்று அதர்வசிகா உபனிஷத் பரமேச்வரனை பகவத் சப்தத்தால் உத்கோஷிக்கிறது.

**चेतस्समभिलषणीयं** நன்கு விசாரித்தால், சைதன்ய வடிவான பரமசிவன் ஒருவரே, பரமானந்த வஸ்து. மற்றவையெல்லாம் துக்கங்களே. **भूमावैसुखं नाल्पे सुखमास्ति** " ஸர்வ பரிபூர்ணமாய் ப்ரத்யகாத்மாவாக விளங்கும் பரமனே

ஸுகஸ்வரூபம். அல்பமான அனாத்மாக்களான விஷயங்களில் ஸுகம் கிடையாது, என்ற வேதவாக்யப்படியும்"

जडवर्गः अनित्यः अनात्मत्वात् घटवत्

"ஜடமான பிரபஞ்சம் அனித்யமானது, ஆத்மாவைக் காட்டிலும் வேறாகயிருப்பதால், குடத்தைப்போல்" என்ற அனுமானமும், ஆத்மாவான பரமேசன் ஒருவரே நித்யானந்தவஸ்து என்பதற்கு பிரமாணமாகும்.

பேரின்ப வடிவான பரமனின் பாதாரவிந்தங்களில் மனம் நிலைகொள்வதே பரமபாக்யம். பரமனிடம் நிலை கொண்ட மனது, பூர்வகர்மானுஸாரியாக ஏற்படும் ஸுக துக்கங்களாலும் பீடிக்கப்படாது.

वृथाकण्ठक्षोभंवहसि तरसा तर्कवचसा ।
पदांभोजं शंभोः भज परमसौख्यं व्रज सुधीः ॥

" தர்க்கம் பண்ணி ஒருவித லாபமுமில்லை. கண்ட க்ஷோபம்தான். பரமனின்பாதாரவிந்தங்களை தஞ்சமென்று கெட்டியாகப்பிடி, ஏ புத்தியே ! பரமானந்தத்தைப்பெறுவாய்" என்று பகவான் பாஷ்யக்காராள் கூறியபடி, உமது பாதஸேவாபரிசயத்தை எனக்கு அருளும்.

उदरभरणमात्रं साध्यमुद्दिश्य नीचेषु
असकृदुपनिबद्धां आहितोच्छिष्टभावाम् ।
अहमिह नुतिभंगीमर्पयित्वोपहारं
तव चरणसरोजे तात जातोपराधी ॥ (४८)

ப. உ.

**हे तात** அப்பனே! **अहं** நான் **उदरभरणमात्रं** வயிற்றை நிரப்புவது மட்டும் **साध्यं** செய்யத்தகுந்ததாக **उद्दिश्य** தீர்மானித்து **नीचेषु** (வர்ணாச்ரம வயோவஸ்தாதி தர்மங்களால் மிக) தாழ்ந்தவர்களிடத்தில் **असकृत्** பன்முறை **उपनिबद्धां** நன்றாகச்செய்யப்பட்ட **आहितोच्छिष्टभावां** (சரீரத்தை வளைத்து, பல்லைக்காட்டி பறக்கவிழித்து அஞ்சலியுடன்) வெளிக்காட்டப்படும் யாசக ரூபமான தனது ஏழ்மை ஸ்வபாவத்தை **इह** இப்பொழுது, இங்கு **तव** உம்முடைய **चरणसरोजे** பாதபத்மத்தில் **नुतिभंगीं** ஸ்தோத்திர ப்ரகாரமான **उपहारं** காணிக்கையாக **अर्पयित्वापि** ஸமர்ப்பித்தும் **अपराधी** குற்றம் செய்தவனாகவே **जातः अस्मि** பிறந்தவனாகயிருக்கிறேன்.

வி. உ.

त्वयिसति शिव दातरि अस्मदभ्यर्थितानां
इतरमनुसरन्तो दर्शयन्तोऽर्थिमुद्राम् ।
चरमचरणघातैः दुर्ग्रहं दोग्धुकामाः
करभमनुसरामः कामधेनौ स्थितायाम् ॥

'மணியில் நினைத்ததை அருளும் காமதேனு இருக்கும்போது அதைப்புறக்கணித்து, தனது பின்கால் உதைகளால் பிடிப்புக்கடங்காத கரவாமாட்டைக் கரக்க விரும்புவதுபோல், நாடின பொருள்களை அருளும், சிந்தாமணி, கல்பதரு, காமதேனுவான பரமசிவனை நீர் இருக்கும்போது, உம்மைப் பொருட்படுத்தாது, தனது ஏழ்மையின் அடையாளத்தைக் காட்டிக்கொண்டு, உதைக்கும் மாட்டுக்கு ஸமமான, உம்மைத் தவிற மற்றவர்களை பின் பற்றுகிறோம். இதே பெரிய மதிமயக்கம்' என்று குவலயா

னந்தத்தில் கூறியபடி, சதுர்வித புருஷார்த்தங்களை அரு ளும் வள்ளலான நீர் இருக்கும்போது, உம்மை அனுசரிக் காமல், அல்பஸுகத்தை நாடி, அல்பர்களிடம் சென்று அஞ்சலிசெய்து, நீதான் இந்திரன், சந்திரன் என்று பல் லைக் காட்டி யாசிப்பது நிந்திக்கத்தகுந்ததே. அவ்வல்பர் களைப்பாடின வார்த்தைகளையே மறுபடியும் உமக்கும் உபயோகித்தால், சாப்பிட்ட அன்ன சேஷத்தை மறுபடி யும் பரமனுக்கு நிவேதனம் செல்வதுபோல், அபராதம் செய்தவனாகவே ஆகிறேன்.

உமது திருப்புகழைத் தவிற வேறு மற்றொருவரு டைய புகழைக் கூறுதபடி என் நாக்கைச் செய்யவும். அப் படியே எல்லா இந்திரியங்களையும் உமது திருப்பணிக்கே வினியோகப்படுத்தி, நீசஸேவையிலிருந்து எனக்கு விடுத லையை நீர் அருளவும்.

सर्वं सदाशिव सहस्व ममापराधं
मग्नं समुद्धर महत्यमुमापदब्धौ ।
सर्वात्मना तव पदांबुजमेव दीनः
स्वामिन्ननन्यशरणः शरणं प्रपद्ये ॥ (४९)

ப. உ.

**हे सदाशिव** ஸாதாக்ய சிவமூர்த்தியே! **मम** என்னு டைய **सर्वं** எல்லாவிதமான **अपराधं** குற்றத்தையும் **सहस्व** பொருத்தருளும் **महति** பெரிய (எல்லையற்ற). **आपदब्धौ** கஷ்ட ஸமுத்திரத்தில் **मग्नं** முழுகின **अमुं** இந்த (தீனனை) **समुद्धर** நீர் தூக்கிரக்ஷிக்கவேண்டும். **हे स्वामिन्** நாதனே **दीनः** எளியோனை (நான்) **सर्वात्मना** முக்கரணத்துடன் **तव** உமது **पदांभोजमेव** மலரடியையே **अनन्यशरणः** வேறு ரக்ஷ கனற்று **शरणं** தஞ்சமென்று **प्रपद्ये** கெட்டியாகப்பிடிக் கிறேன்.

வி. உ.

சித்தத்திலுள்ளதை அருளும் சிந்தாமணியான பரமனை ஒரு போதும் நான் மனதிலாவது போற்றாமலும், நினைக்காமலும், நாடாமலும், நல்கி உருகாமலும் இருந்து, நீசர்களுடைய ஸம்பாவனையால் ஜன்ம ஸாபல்ய மடைந்தவனாக மதிக்கும் மகா கர்வி. ஆகவே, மகாபாபி நானே—சிவத்ரோகி, ஆத்மத்ரோகி.

मेरुमन्दरमात्रोपि राशिः पापस्यकर्मणः ।
ईश्वरं वैद्यमासाद्य नश्यते दुष्टरोगवत् ॥

"கெட்டவியாதி வைத்யனை அடைந்த மாத்திரத்தில் நசிப்பதுபோல், மேருமலை, மந்தரமலைக்கு ஸமமான பாவகர்மாவின் குவியல் (ஸம்ஸார) வைத்யனாக விளங்கும் பரமேச்வரனை அடைந்தமாத்திரத்தில் நசிக்கிறது" என்று சிவதர்மத்தில் கூறியபடியும்.

भिन्दन्तिशैलानुदधीन्प्लवन्ति व्यत्यासयन्तिक्षितिमन्तरिक्षम् ।
तृणीकृतब्रह्मपुरन्दराणां किं दुष्करं शंकरकिंकराणाम् ॥

"மலைகளைப் பிளக்கிறார்கள். ஸமுத்திரங்களை
(காற்றைப்போல்) வீசுகிறார்கள். பூமியை அந்தரிக்ஷமாக
வும், அந்தரிக்ஷத்தை பூமியாகவும் மாற்றுகிறார்கள். பிரம்
மேந்திராதி வைபவங்களை திருணமாகக் கருதும் சங்கர
தாஸர்களுக்குச் செய்யமுடியாத கார்ய மென்ன இருக்கி
றது?" என்று மார்க்கண்டேயன் சிவபக்தர்களுக்கு இவ்
வளவு மகிமையை கூறியிருக்க, அவர்களால் உபாசிக்கப்
படும் பரமனுடைய மகிமையைக் கூறி முடிக்கவும் முடி
யுமோ?

அப்பரமனது பிரஸாதமொன்றே இந்த மகாபாபியான
என்னுடைய அடிமைப்பிணியை ஒழித்து, எனக்கு விடுதலையை அளிக்கப்போதியது. அக்கிருபானந்தவாரிதியான

பரமேச்வரனது இருபாதகமலங்களேயும் கெட்டியாகப் பிடித்து அவரது அருள் அடையும் வரையில் என் மாரோடணைத்து,சிரசில் ஏற்றி, கண்களில் ஒத்திக்கொண்டு பகவத்பாத ஸேவானந்தத்தில் களிப்பேறுகவும்.

अत्मार्पणस्तुतिरियं भगवन्निबद्धा
यद्यप्यनन्यमनसा न मया तथापि ।
वाचापि केवलमयं शरणं वृणीते
दीनो वराक इति रक्ष कृपानिधे माम् ॥ (௫௦)

ப. உ.

**(हे) भगवन्** பூஜ்யரே! **इयं** இந்த **आत्मार्पणस्तुतिः** (பரமனிடம்) ஆத்மாவை ஸமர்ப்பிக்கும் ஸ்தோத்திரம் **मया** என்னுல் **अनन्यमनसा** (உமது ஸ்வரூப குணதிசயங்களில்) ஏகாக்ரமனதுடன்(வர்ண பத வாக்ய அர்த்தமிவைகளைச் சோதித்துத் தகுந்தபடி) **यद्यपि न निबद्धा** தொடுக்கப்படாவிடினும் (ஊமத்தங்காய் ரஸத்தை அருந்தி உன்மாதாவஸ்தையில் ப்ரலாபித்ததாயினும்) **अयं दीनः** இந்த ஏழையான **वराक** ஹீனஜந்து **वाचा अपि केवलं** வார்த்தையால் மட்டுமாவது **शरणं** தஞ்சமென்று **वृणीते** (உம்மை)வரிக்கின்முன் **इति** என்று கருதி **मां** (எளியோனை) என்னை **कृपानिधे** கருணையங்கடலே! (அக்கருணையால்) **रक्ष** காத்து அருளவும்.

வி. உ.

**कृपानिधे ।** தயைக்கு இருப்பிடமே! **कटाक्षस्यन्दिकरुणा** கண்களின் பார்வையாலேயே கருணையைக் கொட்டுகிறவள் **अव्याजकरुणामूर्तिः** நிர்நிமித்தமாக கருணையை அருளும் ஸ்வரூபிணீ. **दयार्द्रा** கருணையாகிற வெள்ளத்தால் எப்

பொழுதும் கசிந்தவள் என்று கூறியபடி, கருணையின் உருவே ஜகன் மாதாவான பார்வதீ தேவி என்று சாஸ்த்திர ஸித்தாந்தம். அப்படிப்பட்ட தேவியின் காருண்யத்தின் அதிசயத்தை ஸ்ரீ பகவத் பாதாள் ஸௌந்தர்ய லஹரியில் 22-வது ச்லோகத்தில் வர்ணித்துள்ளது இங்கு கவனிக்கத் தகுந்தது.

भवानि त्वंदासे मयि वितर दृष्टिं सकरुणां
इति स्तोतुंवाञ्छन् कथयति भवानित्वमिति यः ।
तदैव त्वं तस्मैदिशसि निजसायुज्यपदवीं
मुकुन्दब्रह्मेन्द्रस्फुटमकुट नीराजितपदाम् ॥

ஹே பவானி! "நீ தாஸனை என்னிடம் (உன்னுடைய) கருணையுடன் கூடிய பார்வையைச் செலுத்து" என்று எவனுவது துதிக்க விரும்பி 'பவானித்வம்' என்ற (இருபதங்களை) சொல்கிறானோ, அவனுக்கு நீ (அவ்விரண்டு பதங்களைச்சொன்ன) உடனேயே, (அவைகள் 'த்வம் பவானி' நீயாக நான் ஆவேனாகவும் என்ற 'தத்வமஸி' மகாவாக்யத்தின் அர்த்தமாகிற 'பவானித்வம்' பவானியாக இருக்கும் தன்மையை யாசிக்கிறான் என்று கருணை கூர்ந்து) விஷ்ணு ப்ரம்மா இந்திரன் இவர்களின் பிரகாசமான மகுடங்களால் ஹாரத்தி செய்யப்பட்ட பாதங்களையுடைய உன்னுடைய (மகாவாக்யத்தின் பலனாகிய) ஸாயுஜ்ய பதவியை (சொல்லுகிறவன் அந்த அர்த்தத்தை மனதில்வைத்துச் சொல்லாமற்போனாலும்) அவனுக்குக் கொடுத்துவிடுகிறாய்!' என்றார்.

अनिच्छयापि संस्पृष्टः दहत्येव हि पावकः ।

'(சுடவேண்டுமென்று) விருப்பமின்றி நன்கு தொடப்பட்ட நெருப்பும் சுட்டுவிடுகிறது' என்றபடி, மனதால் கருதப்படாத பலத்தையும், பக்தன் தன் பிரார்த்தனையை

முடிக்குமுன், அவனுக்கு அருளும் அவ்வளவு கருணை மூர்த்தியான பவானியுடன் பிரிக்கமுடியாத சேர்க்கையுடன் விளங்கும் பவானீபதியான பரமேச்வரனே, 'க்ருபாநிதி' என்ற பதத்தால் கூறப்படும் பெருமான். அவரது கருணை வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத வைபவமுள்ளது.

अस्पष्टमपि यन्नाम प्रसंगेनापि भाषितम् ।
ददातिवाञ्छितानर्थान् दुर्लभानपिसर्वदा ॥

"தெளிவாக இல்லாமலும், மற்ற பேச்சுடன் கலந்தும் பரமனின் பெயர் கூறப்பட்டதாயிருந்தாலும், அது எப்பொழுதும் கிடைப்பதற்கரிய கோரப்பட்ட லாபங்களை கொடுக்கிறது" என்று கூறும் தேவீபாகவத வாக்யப்படியும்.

मदात् प्रमादात् दुःस्वप्नात् स्वलनादपि ।
कथितं नाम ते गौरि नृणां पापपनुत्तये ॥

"கொழுப்பாலோ, அசட்டையாலோ, சித்த ஸ்வாதீனமற்றோ, கெட்ட ஸ்வப்னத்தாலோ, வார்த்தை தவறியோ, ஹே மலைகளே! உன்னுடைய பெயர் கூறப்பட்டதாயினும், அது ஜீவர்களுடைய பாபங்களை ஒழிக்கிறது." என்று சக்தி ரகஸ்ய வாக்யப்படியும்.

यद्द्व्यक्षरं नाम गिरेरितं नृणां सकृत्प्रसंगादघमाशु हन्ति वत् ॥

"ஒரு முறையாயினும், பேச்சின் நடுவிலேயாகிலும் மனமில்லாமல் வாக்காலேயாகிலும், இரண்டு அக்ஷரங்கள் சேர்ந்த 'சிவ' என்ற பெயரை, ஜாதிமதமின்றி எந்த மனுஷ்யர்கள் கூறினாலும், அவர்களுடைய பாபத்தை உடனே அந்நாம உச்சாரணம் ஒழிக்கிறது" என்று கூறும் ஸ்ரீமத்பாகவதவசனப்படியும், அளவுகடந்த மகிமையுடன் கூடிய திவ்யநாமத்துடன் விளங்கும் ஹேபரமேச்வரா! வேறுவிஷயசிந்தனையற்று, உம்முடைய ஸ்வரூபலாவண்யாதிசயங்களில் மனம்செல்லாமல், உம்மை

முக்கரணத்தாலும் தஞ்சமென்று அடையாமல், ஸ்வப்னத்திற்குஸமமான, உன்மாதாவஸ்தையில், பிதற்றலுக்கு ஸமமான எனது வாக்கால்மட்டும் இத்துதியைச் சொல்லிச்சரண் புகுந்தேனென்று என்னை புறக்கணிக்காமல்,கிருபானந்தவாரிதியான நீர், ஹீனஜந்துவைப்போல், விவேகமற்று, அதனால், தன்னையும், குருநாதனை பரமரான உம்மையும் மறந்த மகாத்ரோகியான இவன், வாக்காலாவது இத்துதியைச்சொல்கிறானே என்று என்னை ஏற்று, உமது ஸ்வரூபபூதமான கிருபானந்த அம்ருத வர்ஷத்தால் பரிசுத்தி செய்து, சிவானந்தானுபவத்தில் என்னைக் களிக்கச் செய்யவும்.

ஆகவே, இவ்வாத்மார்ப்பணஸ்துதியை ஏகாக்ரசித்தமற்று, ஒருமுறை படிக்கிறவர்களுக்கும் நீர் கட்டாயம் அருள் செய்யும்போது, அர்த்தபாவத்துடன், ஏகாக்ரசித்தத்துடன், உமது ஸ்வரூபாதிசயங்களில் பக்தி ச்ரத்தையுடனும் இதை துதிக்கிறவர்களுடைய பேரின்ப லாபத்தைக் கூறியும் முடியுமோ? அன்பேசிவம்.

ओं तत्सत्

(முற்றிற்று)

गलन्ती शंभो त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम्।
दिशन्ती संसारभ्रमणपरितापोपशमनं
वसन्ती मच्चेतोह्रदभुवि शिवानन्दलहरी ॥

ஹே சம்புவே! உமது சரிதமாகிற நதியிலிருந்து உற்பத்தியாகி, புத்தியாகிற கால்வாய் வழி சென்று, எங்களுடைய பாபங்களாகிற புழுதிகளை யடக்கி, ஸம்ஸார அலைச்சலாலேற்பட்ட தாபத்தைப்போக்கி,என் மனதாகிற மடுவில் வந்து தேங்குவதான, சிவானந்த வெள்ளம் ஸர்வோத்க்ருஷ்டமாக இருப்பதாக.

Printed at the Rathnam Press, Madras. Q. H. Ms. 86 C 1000 29-1-48.

# ஸ்ரீகாமகோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீசங்கரா சார்ய ஸ்வாமிகள் அருளிய நன்மொழிகள்.

"மனமிருந்தால் அவகாசம் கிடைக்காமற் போகாது. டிராமிலும் மோட்டாரிலும் போகும்போது பகவந்நாமாவை ஜபித்துக்கொண்டே வரலாம். இப்பொழுது ஸம்பாதிக்கும் பணத்தில் ஒரு பைசாவாவது நாம் இந்த உடம்பை விட்ட பிறகு வேறுலோகத்தில் பிரயோஜனப்படுமா? அந்த லோகங்களிற் செலவாணியாகும் பணம் பகவந்நாமாதான். ஆகையால் அதைத் தவறாமல் ஜபிக்கவேண்டும். அவகாசமில்லை என்பது பொய்"—Vol. I. பக்கம் 45.

"அது (மனது) பகவானுக்குரிய இடம். அந்த இடத்தை நாம் குப்பைத்தொட்டியாக்கி இருக்கிறோம். அதை மெழுகிச் சுத்தப்படுத்தி அதிற் பகவானை உட்காரவைத்து நாமும் உட்காரவேண்டும். அதற்கு என்னவழி? ஸ்வாமியின் பாதத்தை த்யானம் செய்யவேண்டும். நித்தியம் ஐந்துநிமிஷமாவது த்யானம் செய்யவேண்டும். எந்தவிதமான ஸமயத்திலும் இது தவறாமல் நடக்கவேண்டும். ஸ்வராஜ்யம் வந்தாலும் வராவிட்டாலும் நடக்கவேண்டிய காரியம். இது சாப்பிடுவதைப் போன்றது. இது அதைவிட அதிகமென்றே சொல்லவேண்டும். ஆகாரம் செல்லாத காலத்திலும் இது அவசியம் செய்யவேண்டியது. அப்பொழுது ஈச்வரானுக்ரகம் உண்டாகும். அந்தஅனுக்ரகம் எல்லாவற்றிற்கும் அநுகூலம்."-பக்கம் 55.

*ஆத்மார்ப்பண ஸ்துதி புத்தகம் கிடைக்குமிடம் :—*

**K. M.** பாலஸுப்ரமணிய ஐயர்,

18, தோடித் தெரு, மாம்பலம், சென்னை.